R.R. NO. 791/58

937.

A.S.P.

HD 137
1106

# பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டியின் அறிக்கை

B3

(பகுதி 'அ' மட்டிலும்)

# REPORT OF THE CALENDAR REFORM COMMITTEE

(Translated into Tamil from the English version)

सत्यमेव जयते

©
GOVERNMENT OF INDIA
1960

PRINTED BY THE CONTROLLER OF STATIONERY AND PRINTING, MADRAS,
AND PUBLISHED BY THE MANAGER OF PUBLICATIONS, CIVIL LINES.
DELHI-6.
1963

*Price :–[INLAND] Rs. 1·90.* *[FOREIGN] 4 Sh. 6 d. or 69 cents.*

B9:17r
N60;1
114195

R.R.NO: 791/5

# பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டியின் அறிக்கை

(பகுதி 'அ' மட்டிலும்)

# REPORT OF THE CALENDAR REFORM COMMITTEE

(Translated into Tamil from the English version)

सत्यमेव जयते

©
GOVERNMENT OF INDIA
1960

இந்திய அரசாங்க உள்நாட்டு விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
புது டில்லி
1960

**FIRST EDITION :**

Translation into Tamil from the original English version of the "Report of the Calendar Reform Committee" published in 1955 by the Council of Scientific and Industrial Research, Old Mill Road, New Delhi.

*Printed by*

The Controller of Stationery and Printing, Madras,
at the Government Press, Madras, on behalf of the Government of India.

**Copies available from :**

The Manager of Publications, Civil Lines, Delhi-8.

Government of India Book Depot, 8, Hastings Street, Calcutta-1.

Government of India Kitab Mahal, Janapath (opposite India Coffee House,) New Delhi.

Superintendent, Government Press, Publications Branch, Mount Road, Madras-2.

# முன்னுரை.

இன்று, இந்தியாவில், மிகக் கடுமையானதொரு பஞ்சாங்கக் குழப்பம் இருந்து வருகிறது.

1757-ல், ஆங்கில ஆட்சி நம்மேல் திணிக்கப்பட்டது முதல், நிர்வாகத்துறையில் இந்தியா க்ரிகோரி (Gregorian) பஞ்சாங்கத்தையே பின்பற்றி வந்தது. வரலாற்று (historical) மகிமையால் இது உலகப் பஞ்சாங்கமாக மதிப்புப் பெற்றது. எனவே, இன்றும், விடுதலைக்குப் பிறகும் இதுவே ஆட்சி முறையில் வழங்கி வருகிறது. இதிலுள்ள இடைஞ்சல்களையும், விஞ்ஞான விரோதங்களையும் எண்ணி, லௌகிக, அரசியல் துறைகளுக்காக வேறொரு உலகப் பொதுப் பஞ்சாங்கத்தை வகுக்கவேண்டும் என ஐக்கிய நாட்டு ஸ்தாபனத் (U.N.)தின் முன் இந்தியா ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளது (3-ம் பகுதி, 2—7).

முஸ்லிம் ஆட்சி (1200-1757)யில், ஆட்சித் துறையிலும், சமயத்துறையிலும் சாந்திரமான (மதி அளவை) ஹிஜிரா (Hijira)ப் பஞ்சாங்கமே உபயோகிக்கப் பட்டது. இடையில் (1556-1630)-ஆன மிகக் குறுகிய காலத்துக்கு மட்டும், மன்னர் மன்னரான அக்பர் இப் பஞ்சாங்கத்தைத் தடைசெய்து, தாரிக் இலாஹி (Tarikh Ilahi) என்ற பெயரில், இரான் (பார்ஸி) தேசத்து, ஸௌரமான (பரிதி அளவை) ஜெலாலி (Jelali) பஞ்சாங்கத்தைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தார். அவர் காலத்தோடு அது மறைந்து விட்டது. ஹிஜிராப் பஞ்சாங்கம் இன்னும் இஸ்லாமியப் பண்டிகைகளை நிர்ணயிக்கப் பயன்படுகிறது.

முஸ்லிம் ஆட்சிக்குமுன், லௌகிக, வைதிகத் துறைகளில் இந்தியாவின் பற்பல பகுதியினரும் பற்பலவகையான பஞ்சாங்கங்களை உபயோகித்து வந்தனர். (விவரங்கள்—பகுதி 3, உறுப்பு 5) கி.பி. முதல் நூற்றாண்டு முதல் நடு நூற்றாண்டுகள் வரை உள்ள இந்திய மன்னர்களின் கல்வெட்டுச் சாசனங்கள் இப் பஞ்சாங்கங்களின் படியே பொறிக்கப் பட்டுள்ளன. இவைகளில் கூறப்பட்டுள்ள சகாப்தங்களை நிர்ணயிப்பது இந்திய வரலாற்று ஆசிரியர் (Indologists)களுக்குப் பெரிய தலைவேதனை யாகும்.

லௌகிகத் துறையில் இவைகள் அநேகமாக மறைந்து ட்டன. எனினும், சில, இந்தியாவில் தோன்றிய ஹிந்து, புத்த, ஜைன சமயச் சார்பான விழா நாட்களையும், கடிகை (முகூர்த்தம்)களையும் நிச்சயிக்கக் கையாளப் படுகின்றன. இவைகள், வேறுவேறான சகாப்தங்களையும், வருட ஆரம்பங் (ஆண்டுத்துவக்கம்)களையும், பழையவான நூற்களான சூரிய, ஆர்ய, ப்ரஹ்ம முதலிய பல சித்தாந்தங்களின் பல்வேறு வகையான கணித முறைகளையும் பயன்படுத்துகின்றன.

இதனால் வைதிக விழா விரதங்களின் வாரமும், நேரமும் திகைப்புறும் வகையில் தடுமாறிக் குழம்பின—இதைச் சில உதாரணங்களால் பின்னர் விளக்கியுள்ளோம். எனவே, மதசம்பந்தமான எல்லாப் பஞ்சாங்கங்களையும் ஆராய்ந்து, இந்து சமயத் துறையில், இந்தியா முழுமைக்கும் பொதுவான ஐக்கிய தேசியப் பஞ்சாங்கம் (United National Calendar) ஒன்றைச் சர்க்காருக்குச் சிபார்சு செய்யவேண்டுமெனப் பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழு (Calendar Reform Committee) கேட்டுக்கொள்ளப் பட்டது. அதன்படிக் கமிட்டி தன் கடமையை நிறைவேற்றி, அரசாங்கத்திடம் தன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அதிலுள்ள முக்கியமான விவரங்கள் பின் வருவன.

இந்துக்களின் சமயப் பஞ்சாங்கங்கள் சிறப்பாகச் சாந்திர—ஸௌரமானக் கலப்பேயாகும். ஸௌரமானத்தால் பருவங்களும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சாந்திரமானத்தால் நாள் நட்சத்திர முகூர்த்தங்களும் நிர்ணயிக்கப்படுகின்றன.

எனவே, பஞ்சாங்கங்கள், ரவி, மதி முதலிய நவக் கோள்களின் நிலைகளைச் சரியானபடி கணிக்கும் வான சாத்திர (Astronomy) விதிகளை அடிப்படையாகக் கொண்டவை. இவ் விதிகள், எல்லாப் பஞ்சாங்கங்களுக்கும் பொதுவானவை. எனினும், இத்துடன் கதை நின்றுவிடவில்லை. வான நூல் தத்துவங்களுடன் நாட்டுக்கு நாடு, மாகாணத்திற்கு மாகாணம் வேறுபடும் பழக்க வழக்கப் பரம்பரைக் கொள்கைகளும் சேர்ந்தே நம் பஞ்சாங்கங்களை உருவாக்கியுள்ளன.

இப்போது சாந்திர—ஸௌரமானங்களின் மூலமான வானநூல் கொள்கைகளையும், பரம்பரைக் கோட்பாடுகளையும் ஒருவாறு காண்போம். ஸௌரமானத்தின்படி ;—

(1) வருடத்தின் அளவு, விஞ்ஞான முறையில் தவறில்லாத வகையில் சரியானபடி வரையறுக்கப்பட வேண்டும்.

(2) பருவங்களும், அவற்றின் துவக்கங்களும் தகுந்த முறையில் சீரான நெறியில் கையாளப்படவேண்டும்.

(3) நாட்கள் நடுநிசியில் ஆரம்பிக்கவேண்டும்.

புகழ்பெற்ற சூர்ய ஸித்தாந்தம், அத்யாயம் 14 (3-ம் பகுதி 5–6) மேற்கண்ட கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிறது. பஞ்சாங்க கணிதத்திற்கான விதிகளைக் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறது :—

(1) அயனம்ஸப் (procession)படி வசந்தகால ஆரம்ப அக்ஷத்தில் (Vernal equinootial point) சூரியன் வரும் காலத்தையே வருடத்தின் ஆரம்பமாகக் கொள்ள வேண்டும். எனவே, ஆண்டின் அளவை ஸௌரமான ஸாயன (அயனம்ஸம் கூடிய) வகையிலேயே கணிக்கப்படவேண்டும்.

(2) பருவங்கள், கிரந்தி மண்டல (அருக்கன் வீதி)த்தில் சூரியன் 30 பாகைகளைத் தாண்டும் மாதங்கள் இரண்டு கொண்டவையாய்த் திகழவேண்டும்.

(3) வானசாத்திரக் கணிதங்களுக்காக நாட்கள் நடு நிசி (அர்த்தராத்ரிகா முறை) யினின்றும் கணிக்கப்படவேண்டும்.

இந்த விதிகள் மட்டும் பஞ்சாங்க கணிதத்திற்குப் போதாது ; ஏனெனில், வருடங்கள் முழு நாட்களோடு கூடியவை அல்ல ; ஸௌர வருடம் 365·2422 எனப் பின்னங்கூடிய நாட்கள் கொண்டது. கிரந்தி வளையத் (ecliptic) தில் சூரியன் 30 பாகைகளைத் தாண்டிச் செல்லும் காலம் 29·44 முதல் 31·46 வரையான நாட்களாக வேறுபட்டு நடக்கிறது.

லௌகிக காரியங்களுக்கு வருடமும் சரி, மாதமும் சரி முழு நாட்கள் கொண்டவையாயிருக்கவேண்டும். இந்து சமயப் பஞ்சாங்கங்களின்படி லௌகிக (ஸாவன) நாட்கள் சூரிய உதய முதலாகக் கணிக்கப்படுகின்றன. இதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. இதுவும் பஞ்சாங்கக் குழப்பத்திற்கு ஓரளவு காரணமாகும் (3-ம் பகுதி 5–6).

எனினும், எல்லாவற்றினும் பெரிய தவறு, கி.பி. 4-ம் நூற்றுண்டில் எழுதப்பட்ட மதிப்புக்குரிய சூர்ய சித்தாந்தத்தில் கூறப்படும் ஆண்டின் அளவை நாம் அப்படியே கடைப்பிடித்ததுதான். அதில் வரும் 365·25876 நாட்களான வருடம், நட்சத்திரமான (Sidereal —மீன் அளவை)த்தை அடிப்படையாகக் கொண்டது போலும்; அந்த வகையிலுங்கூட +0·00240 நாட்கள் தவறு நேர்கிறது. ஆயினும், 3-ம் பகுதி 5–6-ல் காட்டிய படி சூரிய ஸித்தாந்தம் ஸௌரமான வருட அளவையையே உபயோகிக்க வேண்டுகிறது. தற்காலக் கணக்குப்படி ஸௌர வருடத்தில் ஏறத்தாழ 365·2422 நாட்கள் உள்ளன. எனவே, சூர்ய ஸித்தாந்தத்தின் இந்த விதி தவருக அர்த்தம் செய்யப்படுகிறது.

வான சாத்திர வருட-மாத அளவுகள் போன்ற நிறை (constant) களில் தவறுகள் கிழை நாட்டு மேலை நாட்டுப் பழம் பஞ்சாங்கங்கள் யாவற்றிலும் பொதுவான ஒரு தன்மையே எனினும் மேல் நாட்டில் நடு நூற்றுண்டுகளில், வான சாத்திரிகளின் உபதேசப்படி ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar), போப் ஆண்டவர் 13-ம் க்ரிகோரி (Pope Gregory XIII) போன்றவர்களின் ஸாஸனங்களால் (edicts) இக் குறைபாடுகள் நீக்கப்பட்டன. ஆனல், இந்தியாவிலோ, 1200-ல் துருக்கியர் படையெடுத்து வந்தபோது இந்திய வான நிலையங்களில் (astronomical observations) பல அழிக்கப்பட்டன, பல கைவிடப்பட்டன. அது முதல் பஞ்சாங்க கணிதம் வானசாத்திரிகள் கையிலிருந்து ஜோதிடர்களின் கைகளுக்கு மாறியது. மாறவே, அவர்கள் பழைய நூல்களின்படியே பஞ்சாங்கம் கணிக்கலாயினர்.

இக் குறைபாடுகளுக்கு இவற்றைக் காட்டிலும் முக்கியமான காரணம் இந்திய வான நூலோர் அயனும்ஸ (precession of equinoxes) உண்மையைச் சரியானபடி அறிந்துகொள்ளாததேயாகும். (3-4-10) இத் தவற்றில் இந்தியர்கள் மட்டும் தனித்து நிற்கவில்லை. 1687-ல், நியூட(Newton)னுக்குப் பிறகுதான் ஐரோப்பாவிலும் அயனும்ஸத்தைப் பற்றிய சரியான நிர்ணயம் ஏற்பட்டது.

எனவே, இந்திய வருடம் ஸௌர வருடத்தைக் காட்டிலும் 0.01656 நாட்கள் அதிகமானது. இந்த அதிகப்படி 1400-ஆண்டுகளாக மிகைப்பட்டு வந்ததால், இப்போது வராஹமிஹிரர் காலத்தில் மார்ச்சு, 21-ம் தேதி ஆரம்பமான ஸௌர ஆண்டு 23–24 நாட்களுக்கு அப்பால் ஆரம்பமாகிறது. எனவே, நம் பஞ்சாங்கங்களின்படி, வருடங்கள் சூரிய ஸித்தாந்தம் கூறும் வசந்தாரம்ப அட்ச (Vernal equinoctial) நாளில் துவங்காமையால், பற்பல பண்டிகைகள், பருவங்கள் மாறிக் கொண்டாடப்படுகின்றன. 1955-ல் சரத் பூர்ணிமா (கூதிர் மதியம்) ஹேமந்த ருது (முன் பனிப் பருவம்) வில் வருவதைக் கொண்டே நம் பஞ்சாங்கங்கள் ஸாத்திரப்படியுமில்லை, விஞ்ஞானப்படியுமில்லை என்பது தெளிவாகிறது.

பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழு (The Calendar Reform Committee) இக் குறைபாடுகளை நீக்கவே சூர்ய ஸித்தாந்தப்படி வசந்தாரம்பப்பாகையில் வருடம் ஆரம்பிக்க வேண்டுமென்றும், ஆண்டின் அளவு ஸௌர ஸாயனமாயிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்து சர்க்காருக்குச் சிபார்சு செய்கிறது.

# ஸௌர மாதங்கள்-சந்திரமானம்—திதி முடிவுகள்

பழமையான சூரிய சித்தாந்தத்தின்படி மாத நாட்கள் 29.32 முதல் 31.64-ஆக மாறுபடுகின்றன. காரணம் சூரியன் காந்தி மண்டலத்தின முப்பது முப்பது பாகைகளைக் கடக்கும் காலம் வேறுபடுவதே. எனவே, இந்து பஞ்சாங்கங்களின் மாத நாட்களும் 29–32-ஆகத் தரப்பட்டுள்ளன. இவ்விஷயத்தை கெப்ளர் (Kepler)ரின் முதல இரு விதிகளேயும், 1867-ல், சக்தி திறல் நூல் (dynamics) மூலமும், அகில ஆகர்ஷண (universal-gravitation—இழுப்புச் சக்தி) தத்துவத்தின் மூலமும் இவ்விதிகளுக்கு நியூடன் (Newton) தந்த விளக்கத்தையும் அறிந்தவர்களே தெரிந்து கொள்ள முடியும். கி.பி. 400-ல் இருந்த வான சாத்திரிகளுக்கு இவையொன்றும் தெரியாது.

தவிர, மூன்று சித்தாந்தங்களிலும் மூன்று விதமான மாத அளவைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கெப்ளர் விதிகளே அறியாமையால் ஸித்தாந்த கணிதங்கள் எக்காலத்துக்கும் பொருந்துமென நம்மவர்கள் நினைத்து விட்டனர். இந்நினைப்பு எவ்வளவு தவறுனதென்பதை இன்று நாம் அறிவோம். எனவே, தம்முள் மாறுபடும் சித்தாந்த அளவைகள் பயனற்றவை.

மற்றும், எல்லா மாத நாட்களும் பின்னங்கள் கூடியவை. பற்பல ராஜ்யப் பகுதிகள், உதாரணமாக வங்காளம், ஒரிஸ்ஸா, தமிழ்நாடு முதலியவை வேறு வேறு வகையாக ஸௌர ஸங்கராந்தியை வரையறுக்கின்றனர். அதாவது, இந்துக்களின் மேட ராசியின் 0 பாகையிலிருந்து சூர்ய உதயாஸ்தமன நாட்களில் முப்பது முப்பது பாகைகளாகச் சூரிய மார்க்கத்தில் மாதங்களே அளப்பது ஒவ்வொரு வேறுபாட்டிலும் சிற்சில சிறப்பியல்புகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைப் பற்றி வங்காள, ஒரியா, தமிழ்ப் பண்டிதர்கள் தம்முள் விவாதிக்கட்டும், நம்மைப் பொறுத்த வரையில் 29 முதல் 32 நாட்களான மாதங்கள் லௌகிகத் துறையில் சௌகரியமற்றவை, ஸித்தாந்த ஆசிரியர்கள் கெப்ளர் விதிகளே அறிந்திருப்பின் மாத அளவைகள் 29-32 நாட்களாக மாறுவதை அனுமதித்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். எனவே, நாங்கள் 30–31 நாட்களாக மாதங்களே வரையறைப்படுத்தியுள்ளோம். வசந்த விஷுவத்திலிருந்து சூரியன் முப்பது முப்பது பாகைகளேயும், அதன் பகுதிகளேயும் தாண்டும் பின்னும்ஸ நேரங்களேயும் குறிப்பிட்டுள்ளோம்,

ஸாலிவாஹன சகாப்தத்தையே நம் நாட்டுப் பஞ்சாங்கங்கள் பின்பற்றவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்துள்ளோம். இந்த ஸகாப்தமே கி.பி. முதற் நூற்றுண்டு உஜ்ஜயினி வான சாத்திரிகள் முதல் இந்தியாவில் யாவராலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. எல்லா விஞ்ஞான வான நூற்களும் இதையே பின்பற்றுகின்றன. மற்ற ஸகாப்தங்களுக்கு 3-ம் பகுதி 5–8-ஐப் பார்க்கவும்.

இந்தப் புதிய ஸௌரமான பஞ்சாங்கம், விஞ்ஞானப்படி தவறில்லாதது; இந்தியா முழுமைக்கும் பொதுவானது; முக்கிய விஷயங்களில் சூரிய ஸித்தாநதத்தைப் பின்பற்றுவது. வான ஸாஸ்திர உண்மைகளே அடிப்படையாகக் கொண்டது.

**சந்திர மானம்:**

சந்திர மானப் பஞ்சாங்கத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை அமாவாசையும், மதியமும், திதிகளுமே. சூர்ய சந்திரக் கூட்டம் (conjunction), அமாவாசை (நிர் நிலா), நேரெதிர் நிலேப்பு (opposition), பௌர்ணமி (மதியம்), சூர்ய சந்திரப் போக்கில் நிகழும் ஒவ்வொரு பன்னிரு பாகையும் ஒவ்வொரு திதி. இம் மூன்றும் பழமையான மூன்று ஸித்தாந்தங்களின்படியே கணிக்கப்பட்டு வந்தன. இக்கணிதத்தில் உள்ள குறைகளே இடைக்கால இந்திய வான நூலோர் பீஜாம்ஸத்தைக் கொண்டு சீர்திருத்தினர்.

மதியின் போக்கு நேரானதல்ல, தாறுமாறுனது குறுக்கும் நெடுக்குமாய்க் குழம்புவது என்பதை இன்று நாம் அறிவோம். எனவே, கால நிர்ணயத்திற்குச் சந்திரன் சரியான சாதனமாகாது. இதை அறிந்தே கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் (Egyptians)கள் மதி மானத்தைக் கைவிட்டனர். இன்றுள்ள க்ரிகோரிப் பஞ்சாங்கம் பழமையான எகிப்திய சௌரமானப் பஞ்சாங்கத்தையே தழுவி எழுந்தது.

ஆனல், மற்றுமுள்ள அன்றைய இன்றைய நாடுகள் எகிப்தியர்களேப் பின்பற்றவில்லே. எனவே, பிறநாட்டு வான நூலோர் மதியின் கதியை அன்றுடமாக ஆராய்ந்து முற்கூட்டியே அறிந்துகொள்ளும் வகையில் கணித முறைகளே வகுக்கலாயினர். "பழங்கால விஞ்ஞான நிறைகள்" (Exact Sciences in Antiquity) என்னும் நூலில் நெகிபார் (Newgebaur) என்ற ஆசிரியர் எடுத்துக்காட்டியபடி கி. மு. 700-300 வரையான பண்டைய பாபிலோனிய (Babylonian) வான நூல் ஆராய்ச்சி மதி மானத்தை முற்கூட்டி அறியும் வகையிலேயே செலுத்தப்பட்டது. இதைப் பின்பற்றித் தொடர்ச்சியாக கிரேக்க, இந்திய, அராபிய, இடைக்கால ஐரோப்பிய நாடுகளிலும் அன்று முதல் இன்று வரையில் ஆராய்ச்சி நடந்து வருகிறது. சந்திரனது சரியான நிலேயைக் காண 1,500 சாம்ய (equations) அம்ஸங்கள் கூடிய, அச்சில் 20 பக்கங்களே ஆக்ரமிக்கும் அளவுக்குக் கணிக்க வேண்டியிருக்கிறது. வான நூலில் தேர்ச்சிக்குத் தக்கபடி கணித முறைகளும் அதிகரிக்கின்றன.—இவைகள் யாவும் பழைய வான நூலோர் அறியாதவை.

கர்னடக முறைப்படிப் பஞ்சாங்கம் கணிப்பவர் கி. பி. 400-ன் ஸித்தாந்த கணிதத்தைப் பின்பற்றுவதால் திதி முடிவுகள் தற்கால வான் கோள நிலேகளே நேரே கண்டு கணிக்கும் கடல்மான (nautical) பஞ்சாங்கங்களோடு ஒத்து வருவதில்லே. உதாரணமாக :—

**திதி முடிவுகள் :**

| தேதி 1954. | திதி | இன்று ம—நி | அன்று ம—நி | வேறுபாடு ம—நி |
|---|---|---|---|---|
| செப்-27 | 30 | 6—20 | 5—4 | —1—16 |
| ,, 30 | 3 | 12—50 | 10—24 | —2—26 |
| அக்-3 | 6 | 20—21 | 16— 7 | —4—14 |
| ,, 6 | 9 | 24— 3 | 18—31 | —5—32 |
| ,, 9 | 12 | 20—20 | 16—30 | —3—50 |
| ,, 12 | 15 | 10—40 | 11— 2 | +0—22 |
| ,, 14 | 18 | 23—36 | 27—57 | +4—21 |
| ,, 17 | 21 | 15—47 | 21—25 | +5—38 |
| ,, 20 | 24 | 13—44 | 17—26 | +3—42 |
| ,, 23 | 27 | 16—55 | 17—39 | +0—44 |
| ,, 26 | 30 | 23—17 | 22— 8 | —1— 9 |

இக் குறைபாடுகளே அறிந்த சில பஞ்சாங்க ஆசிரியர்கள் கடல்மான (Nautical) பஞ்சாங்கத்தின்படியே திதி முடிவுகளேக் குறிப்பிடுகின்றனர். க்ரகண விஷயத்தில் எல்லோருமே தற்கால முறைகளேயே கையாளுகின்றனர். ஏனெனில் சித்தாந்த கணிதம் தவறிப்போனல் பஞ்சாங்கக்காரர்களின் குட்டு வெட்ட வெளிச்சமாகிவிடும். எங்களது துணைவர்களில் ஒருவரான டாக்டர் கோரக் ப்ரஸாத் (Dr. Gorakh Prasad) அவர்களின் கூற்றுப்படி நமது பஞ்சாங்க ஆசிரியர்கள் விளக்கில்லாமல் சைகிளி (ஈருருளி) ல் ஏறி மூலேக்கு மூலே போலீஸ்காரனுக்குப் பயந்து இறங்கிச் செல்பவர்களேப் போன்றவர்களேயாகும்.

பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவினர்கள் கடல்மானப் (Nautical) பஞ்சாங்கத்தின்படி சரியான சூரிய, சந்திர நிலேகளேக் கணித்துள்ளனர்.

இக்குழுவினர், வேறொரு பெரிய மாறுதலேயும் செய்துள்ளனர். தர்ம சாஸ்திர (அற நூல்) ங்களின்படி அந்தந்த ஊரில் அந்தந்தத் திதி நடக்கும்போது பண்டிகைகளேக் கொண்டாட வேண்டும். ஊருக்கு ஊர் திதி நேரங்கள் மாறுபடுவதுடன், மேற்காட்டிய குறைகளும் கூடப் பழைய கணித முறையால் விரததி விழா நாட்கள் ஒரு நாள் அளவு மாறுதல் சகஜமே.

கடல்மானப் (nautical) பஞ்சாங்கப்படி யல்லாமல் ஸித்தாந்தங்களின்படி கணிப்பதால் திதி நிர்ணயத்தில் 5 மணி நேரம் மாறுபடலாம் எனவே, ஒரே ஊரில், ஒரே பண்டிகை, அடுத்தடுத்த இரு நாட்களில் கொண்டாடப்படலாம். கல்கத்தாவில் 1952–53 துர்க்கா–ஸரஸ்வதீ பூஜைகள் இவ்வாறே கொண்டாடப்பட்டன. இக்குழப்பத்தில் விடுமுறை ('eave) நாட்களைச் சர்க்கார் எதைக் கொண்டு நிர்ணயிப்பது ?

எனவே, பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழு, திதி முடிவுகளைத் தற்கால முறைப்படியே மாலுமி மானப் பஞ்சாங்கங்களுக்கேற்ப நிர்ணயிக்க வேண்டுமென்றும், 82°—5'—கிழக்கு ரேகை 23°-11'ன் வடக்கு அட்சம் கூடியதான மத்யஸ்தலத்திற்குக் கணிக்கப்படும் திதியையே இந்தியா முழுமையிலும் பின்பற்ற வேண்டுமென்றும் முடிவு கட்டியது. இது மிகவும் பொருத்தமான முடிவே. ஏனெனில் ஸித்தாந்தங்களின்படியே திதிகள் சரியான முறையில் கணிக்கப்பட்டாலும், ஒப்புமை விஞ்ஞான தத்துவ (Theory of relativity)த்தின் ஒவ்வொரு நுண்பொருளு (particle) க்கும் ஒவ்வொரு காலம் இருப்பது போல், ஒவ்வொரு ஊருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு திதி ஏற்படும். காசிக்குக் கணிக்கப்பட்ட திதி ஒரே ஒரு மைலில் அடுத்துள்ள மற்றொரு ஊருக்குப் பொருந்தாமற் போவதுண்டு. அச்சுக்கூடங்கள் இல்லாத காலத்தில், அச்சடித்த பஞ்சாங்கங்கள் அகப்படாத சமயத்தில், அந்தந்த ஊர் ஜோதிடர்கள் அந்தந்த ஊருக்கேற்ற வகையில் பஞ்சாங்கங்களைக் கணிப்பதற்காகவே ஸித்தாந்த முறைகள் ஏற்படுத்தப்பட்டன. அம்முறைகளையே இன்னும் பின்பற்றுவதனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக ஒவ்வொரு பஞ்சாங்கத்தை அடிக்க வேண்டும். தவிர இந்தியா முழுமையிலும் ஒரு மத்யஸ்தலத்திற்குக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தையே பின்பற்ற வேண்டும் என்பதில் ஸித்தாந்த முறைகளுக்கு யாதொரு விரோதமும் ஏற்படுவதில்லை. ஏனெனில், காசி, கல்கத்தாப் பஞ்சாங்கங்களும் அவ்வவ்வூர்களுக்கு மட்டுமன்றி சுற்றியுள்ள அகண்டமான பிரதேசத்திற்கும் பயன்படுகிறது.

சீர்திருத்தப்பட்ட இப் புதுப் பஞ்சாங்கத்தில் பண்டிகை நாட்களை நிர்ணயிப்பதில், தனித்தனி ராஜ்யங் (States)கள் தனித்தனிப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வருவது தெரிந்ததே. உதாரணமாக 1954-ன் ஜன்மாஷ்டமி வட இந்தியாவில் ஆகஸ்ட் 21-லும், வேறிடங்களில் 20, 21, 22-ம் தேதிகளிலும் கொண்டாடப்பெற்றது. 1953, ராம நவமி வங்காளத்தில் மார்ச்சு 24–லும், மேல் (upper) இந்தியாவில் அதற்கு முந்தின தினத்திலும் கொண்டாடப்பட்டது. இவற்றின் காரணம் திதி முடிவு நேர வித்யாசங்களுள்ள, வேறுபட்ட பரம்பரைக் கொள்கைகளே. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் அந்தந்த ராஜ்யத்தின் பழக்க வழக்கங்களுக்கேற்பவே இப்பஞ்சாங்கத்தில் பண்டிகைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவ் விஷயத்திலும் இந்தியா முழுமைக்கும் பொதுவானதொரு கொள்கை ஏற்படவேண்டும் என்றுதான் நாங்கள் எண்ணுகிறோம். இதில் ஐக்ய பாவத்தை ஏற்படுத்தச் சர்க்கார் சாத்யமான எல்லா முறைகளிலும் முயற்சி செய்யவேண்டும். க்ரஹ சார (கோள் நெறி) நிலைகளைச் செவ்வனே குறிப்பிடும் பஞ்சாங்கக் (Ephemerides) கமிட்டியிடம் இவ்விவகாரத்தை ஒப்புவிக்கலாம்.

**பஞ்சாங்கக் குழு நிர்ணயம்**

விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழு. (The Council of Scientific and Industrial Research) 1952 நவம்பரில் (அவர்களது 1952-ம் வருஷ ஆகஸ்ட்மீ 13உ கூட்டத்தின் முடிவைத் தெரிவிக்கும் 1952, நவம்பர் 11-ம் தேதியிட்ட 144 Bd, [G P ]/52 எண்ணிட்ட கடிதத்தின்படி) ப்ரொபஸர் எம். என். ஸாகா F. R S தலைமையில் ஆறு அங்கத்தினர்களைக் கொண்ட பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டி ஒன்றை நியமனம் செய்தது. அக் கமிட்டியின் அங்கத்தினர்கள் :—

1. ப்ரொபஸர் M. N. ஸாகா, F.R S. — தலைவர்.
2. ,, A. C. பானர்ஜி, அலகாபாத் பல்கலைக் கழக உப அத்யக்ஷகர், அலகாபாத். — அங்கத்தினர்.
3. டாக்டர் C. K. L. தஹ்தாரி, நாகபுரி. — அங்கத்தினர்.
4. ஸ்ரீ J. S. காந்திகர், கேசரிப் பத்திரிகையின் மாஜி ஆசிரியர், பூனா. — ,,
5. ப்ரொபஸர் R. V. வைத்யா, உஜ்ஜயினி. — ,,
6. டாக்டர் கோரக் ப்ரஸாத், அலகாபாத் — ,,
7. ஸ்ரீ N. C. லஹிரி. M. A., கல்கத்தா. — ,,

[குறிப்பு. –6, 7, எண்ணிட்டவர்கள் ப்பொபஸர் S. N. போஸும், டாக்டர் அக்பர் அலியும் (விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் 21-1–1953, 144 Bd (G.R.)/52 கடிதத்தின்படி) பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவில் சேர்ந்து சேவை செய்யத் தங்களது இயலாமையைத் தெரிவித்ததால், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டவர்கள்.]

இக்கமிட்டியின் செயல் துறை விவரத்தின் குறிப்புப் பின் வருமாறு :—

'இந்தியாவில் இன்றுள்ள எல்லாப் பஞ்சாங்கங்களையும் சோதித்து, விஞ்ஞான முறையில் ஆராய்ந்து இந்தியா முழுமைக்கும் பொதுவான சரியான ஒரு பஞ்சாங்கத்தை உற்பத்தி' செய்வதற்கான திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே இக்கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்ட வேலை.

**கமிட்டிக் கூட்டங்கள்**

பஞ்சாங்கக் குழு மும்முறை கூடியது. இன்று சர்க்காருக்குத் தன் முடிவான திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளது.

1953-ம் வருடம் பிப்ரவரி மாதம் 21உ சனிக்கிழமை, காலை 10 மணிக்கு, புது டெல்லி, பழைய மில் தெரு (Old Mills Road)வில் உள்ள விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழு (C.S I.R.) செயல் துறைக் கட்டிடத்தில் பஞ்சாங்கக் கமிட்டியின் முதல் கூட்டம் கூடியது. இக்கூட்டம் 23-ம் தேதி வரையில் நடந்தது. பிரதம மந்திரி நேருஜீ ஒரு ஆசிச் செய்தி அனுப்பி இருந்தார். விஞ்ஞான இயற் பொருள் ஆராய்ச்சித்துறைத் துணை அமைச்சர் (Deputy Minister, Natural Resources and Scientific Research) கூட்டத்தைத் துவக்கி வைத்தார். இக்கூட்டத்தின் விவரங்களை 1-ம் அநுபந்தத்தில் காண்க.

தலைவர் எடுத்துக் கூறிய விஷயங்களை ஒட்டிய விவாதங்களின்மேல் கமிட்டி கீழ்க்கண்ட தீர்மானங்களைச் செய்தது:—

(1) 365.2422 நாட்கள் கொண்ட உஷ்ணந்தமான (tropical) வருடத்தையே நம் பஞ்சாங்கங்கள் பின்பற்ற வேண்டும்.

(2) விஞ்ஞான முறைப்படிச் சரியான லௌகிக ஸௌரமானப் பஞ்சாங்கம் (Scientific Civil Solar Calender), தேசியப் பஞ்சாங்கம் (National Calender) என்று அழைக்கப்பட வேண்டும். வருடங்கள் மார்ச்சு, 22-ஆன வசந்த விஷுவ (the vernal equinox day) நாளில் ஆரம்பமாக வேண்டும். ஆனால், சமயத் துறையில், இன்றுள்ள பழக்கவழக்கங்களை உத்தேசித்து, இன்னும் சிறிது காலம் வரையில் வசந்த விஷுவத்திற்கு 23° –15' தள்ளி வருடாரம்பங்களைக் குறிப்பிடலாம்.

(3) சீர்திருத்தப்பட்ட பஞ்சாங்கம் சாலிவாஹனச் சகாப்தத்தையே பின்பற்றவேண்டும்.

(4) 82°5' கிழக்கு ரேகை 23°–11' வடக்கு அக்ஷமுமான, உஜ்ஜயினி மத்யஸ்தலத்துக்கு ஏற்பட்ட கணிதத்தையே எல்லாப் பஞ்சாங்கங்களும் பின்பற்றவேண்டும்.

(5) நடுநிசி முதல் நடுநிசியான நாட்களையே (மேற்காட்டிய மத்யஸ்தலத்திற்குக் கணிக்கப்பட்டபடி) லௌகிக விவகாரங்களில் பின்பற்றவேண்டும். சமயத் துறையில் அந்தந்த ஊரின் சூர்யோதயக் கணிதத்தைப் பின்பற்றலாம். பின்னும் இந்திய அரசாங்கத்திற்கு இக்கமிட்டி கீழ்க்கண்ட தீர்மானங்களைச் சிபார்சு செய்தது:—

(i) தற்காலிகமாக வரப்போகும் 5 வருடங்களுக்கு முற்கூட்டியே தேதிகள், நாட்கள், மாதங்கள், திதிகள் நட்சத்திரங்கள்-இவைகளைக் காட்டும் இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு பஞ்சாங்கத்தைத் தயார் செய்வது.

(ii) ரவி, மதி, கோள்கள் முதலியவற்றின் சரியான கதிகளை முன் கூட்டியே காட்டும் இந்தியப் பொது க்ரக நிலைப் பஞ்சாங் (Ephemeris) கத்தையும், மாலுமிகள் பஞ்சாங் கத் (Nautical A'manac) தையும் இந்திய சர்க்கார் தயாரித்து வெளியிட வேண்டும்.

(iii) தக்கஇடத்தில், தற்கால விஞ்ஞானக் கருவிகளுடன், சரியான கால நிர்ணயங்கள் செய்ய அரசாங்கத்தார் ஒரு தேசிய வான் நிலை ஆராய்ச்சிக் கூடத்தை (National Observatory) ஏற்படுத்த வேண்டும்.

இவற்றில் விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவினர் (The Council of Scientific and Industrial Research) முதல் சிபாரிசை ஏற்றுக் கொண்டனர். இதற்காக பஞ்சாங்கக் கமிட்டி அங்கத்தினர்களான ஸ்ரீ N. C. லஹரியையும், R. V. வைத்யாவையும் முழு நேரச் செயலாளர்களாக நியமித்தனர். அவசியமான உதவியாளர்களையும் அவர்களுக்கு அளித்தனர்.

**இரண்டாவது கூட்டம்**

பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவின் இரண்டாவது கூட்டம் 8-3-54-ல் காலை 10 மணிக்குப் புது டெல்லியில், விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவி (C.S.I.R.)னரின் கட்டிடத்தில் கூடியது. இக் கூட்டத்தில் புசப்பஞ்சாங்க அமைப்பின் நுணுக்கங்கள் விவாதிக்கப்பட்டன. இவ் விவாதங்களையும் அவற்றின் முடிவுகளையும் இரண்டாம் அநுபந்தத்தில் காண்க. எந்த அயனும்ஸத்தை அனுசரிப்பது என்பதில் யாதொரு முடிவும் ஏற்படவில்லை. எனவே குழுத் தலைவர் அப்பால் கடிதங்கள் மூலம் அங்கத்தினர்களோடு கலந்து ஒரு முடிவுக்கு வந்தார். முக்கியமாகக் கீழ்க்கண்டவை இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன :—

(1) சித்ரா அல்லது சைத்ரா முதல் மாதம் : இது வசந்த விஷுவத்தில் ஆரம்பிக்க வேண்டும். சைத்ரா, விசாகா என்ற முறையில் மாதங்கள் பெயர்பெறும்.

(2) லௌகிக ஸௌர மாதங்களின் நாட்கள் கீழ்வருமாறு :—

சைத்ரா (சித்திரை) :— 30-31 நாட்கள் (அதி வருடமான லீப் வருடத்தில் 31 நாட்கள்)
வைசாகா (வைகாசி)—31
ஜ்யேஷ்டா (ஆனி)—31
ஆஷாடா (ஆடி)—31
ஸ்ராவண (ஆவணி)—31
பத்ரா (புரட்டாசி)—31
ஆஸ்விந (ஐப்பசி)—30
கார்த்திகா (கார்த்திகை)—30
அக்ரஹாயண (மார்கழி)—30
பௌஸா (தை)—30
மாகா (மாசி)—30
பல்குந (பங்குனி)—30

அதிவருடங்கள், (Leap years), க்ரிகோரியன் (Gregorian) அதிவருடங்களோடு ஒத்துப்போகவேண்டும்.

(3) நட்சத்திரங்கள், மாறுபடும் அயனும்ஸங்களுடன் கணிக்கப் பெறவேண்டும். இல்லையேல் அவைகளின் நிலையான தன்மை பாதிக்கப்படும். எனவே, வரப்போகும் 5 வருடங்களின் நடுவான 1956-ல் மார்ச்சு 21-ம் தேதிக்குச் சரியான 23°-15′ அயனும்ஸத்தையே இப்பஞ்சாங்கம் பின்பற்றுகிறது.

இம்முடிவுகளின்படியே இந்த ஐந்தாண்டுப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டுள்ளது.

**மூன்றும் கூட்டம்**

இக் கமிட்டியின் மூன்றாவது கூட்டம் 13–9–1954, காலை 10 மணிக்கு, புது டெல்லி விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கட்டிடத்தில் கூடியது. இக் கூட்டத்தில் மேற்கூறிய 5 வருடச் சீர்திருத்தப் பஞ்சாங்கமும், அதுவரையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்களும், முடிவான அறிக்கையும் பரிசீலனை செய்யப்பட்டு சர்க்காருக்கு அனுப்ப முடிவுகட்டப்பட்டது. (1954, செப்டம்பர் 14-ம் தேதி, இவ்வறிக்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.) இதன் விவரங்களை மூன்றாவது அநுபந்தத்தில் காண்க.

**பஞ்சாங்கப் பரிசோதனை**

இந்தியாவிலுள்ள பஞ்சாங்கங்கள் யாவற்றையும் பரிசோதிப்பதற்காக, பல்வேறு ராஜ்யங்களில் பல்வேறு பஞ்சாங்க ஆசிரியர்கள் தங்கள் தங்கள் 1953-54 பஞ்சாங்கங்களின் மும்மூன்று பிரதிகளை அனுப்பி வைக்கவேண்டுமென விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழு 1953, மார்ச்சில் பத்திரிகைகள் மூலம் ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டது. இதன் விளைவாக இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்தும் பல்வேறு பஞ்சாங்கங்கள் வந்து சேர்ந்தன. இதன் விவரங்களை 5-ம் அநுபந்தத்தில் காண்க. எனினும், இவைகளைப் படித்தறிவதில் பாஷைக் கஷ்டம் குறுக்கிட்டது. தவிர, அடிப்படையான கொள்கைகள் இப்பஞ்சாங்கங்களில் தெளிவாகக் கூறப்படவில்லை. எனவே, 1953, நவம்பரில் பஞ்சாங்க கணித அடிப்படைகளை விளக்கும்படியான வினாத்தாள் (questionnaire) ஒன்று பஞ்சாங்ககாரர்களுக்கு அனுப்பப்பட்டது. இவ்வினாக்களையும், அவற்றின் விடைகளையும் 6-ம் அநுபந்தத்தில் காண்க.

**பஞ்சாங்கம் பற்றிய கருத்துக்கள்**

பஞ்சாங்க அமைப்பைப் பற்றிய பலவிதமான அபிப்பிராயங்களைப் பலர் அனுப்பியுள்ளனர். இவற்றின் சுருக்கத்தை 7-ம் அநுபந்தத்தில் காணலாம். எல்லா அபிப்பிராயங்களையும் பரிசோதித்த பிறகே கமிட்டி முடிவானதொரு தீர்மானத்திற்கு வந்தது. சிலர் இன்றுள்ள குறைமிகுந்த முறைகளையே கையாள வேண்டும் என்று கூறியுள்ளனர். ஆனால், பலரும், பல சங்கங்களும் இப் புது முயற்சியை ஆதரித்துள்ளனர்.

**விடுமுறை—ஓய்வு நாட்கள்**

ஸௌரமான, சாந்திர-ஸௌரமான (மதி-ரவி அளவை), கிறிஸ்தவ, மகம்மதிய என நான்கு வகையில் பல்வேறு ராஜ்யங்களில் கொண்டாடப்படும் பல்வேறு பண்டிகைகளையும், அவற்றிற்கான விடுமுறை நாட்களையும் இரண்டாம் பகுதியில் (vide B) குறித்துள்ளோம். பல பண்டிகைகள் எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவானவை. ஒரு ராஜ்யத்தில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் ஒரு பண்டிகை வேறுபகுதிகளில் இரண்டாந்தரமாகக் கருதப்படுகின்றன. வங்காளத்திற்கு முக்கியமான துர்க்கா பூஜை மேற்இந்தியப் பகுதிகளில் அவ்வளவு தூரம் முக்யத்வம் பெறுவதில்லை. சில ராஜ்யங்களில் அதற்கென்றே சிறப்பான சில விடுமுறை நாட்கள் உண்டு. இவற்றிலிருந்து மத்திய சர்க்கார் தமக்குத் தக்க விடுமுறை நாட்களைத் தேர்ந்துகொள்ளலாம். ஏனெனில், எல்லா ராஜ்யங்களில் எல்லா விடுமுறைகளையும் அவர்கள் ஏற்க முடியாது. அப்படி ஏற்றால், வேலை நாட்கள் வெகுவாகக் குறைந்துபோயவிடும்.

அவகாசமின்மையால் க்ரஹ (கோள்) கதிகளை இப்பஞ்சாங்கத்தில் குறிக்க முடியவில்லை. எனினும், குரு சுக்ரர்களின் சூர்ய சாம்ய (heliacal) உதயங்கள் தரப்பட்டுள்ளன. கும்பமேளாவைப் போன்ற சில விழாக்களைத் தவிர வேறு பண்டிகைகளை நிர்ணயிக்க இது தேவையில்லை. கோள்நிலைப் பஞ்சாங்கக் (Ephemerides) கமிட்டி ஏற்படுமாயின் அதனிடம் இவ்விவகாரத்தை ஒப்படைக்கலாம்.

இப் புதப் பஞ்சாங்கத் தயாரிப்பில், பிரிட்டிஷ் அரசாங்க வானாராய்ச்சியாள (Astronomer Royal of the United Kingdom) ரான ஸர் ஹெரால்டு ஸ்பென்ஸர் ஜோன்ஸ் (Sir Harold Spencer Jones) அவர்களின் பேருதவிக்குக் கமிட்டி தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. மற்றும் மதிசதற்குரிய பல விஷயங்களையும், அடிப்படைக் கொள்கைகளையும் அளித்து உதவிய பலருக்கும் எங்கள் வந்தனம் உரித்தாகுக.

# முடிவான சிபார்சுகள்.

பஞ்சாங்கம் இருவகையிற் பயன்படும்—ஒன்று லௌகிகத் துறையில்; மற்றொன்று சமயத் துறையில். இந்தியப் பஞ்சாங்கங்கள் இன்றுள்ள நிலையில் நாட்டுப்புறங்களுக்கும், நகரப்புறங்களுக்கும் பொதுவாயுள்ளன. இதனல் பகுதிக்குப் பகுதி பஞ்சாங்கங்கள் மாறுபடுகின்றன. எனவே, இந்தியா முழுவதிலும் லௌகிகத் துறையில் இத் தேசியப் பஞ்சாங்கத்தையே உபயோகப் படுத்தவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறது.

**லௌகிகப் பஞ்சாங்கம்**

(1). ஸாலிவாகன ஸகாப்தத்தையே தேசியப் பஞ்சாங்கம் பின்பற்றவேண்டும். கி.பி.1954–55-க்கு நேரான ஸக வருடம் 1876, அல்லது வேறுவார்த்தையில் கி.பி. 1954-க்குச் சரியான சக வருடம் 1875-76.

(2). வருடம் வசந்த விஷுவத்தின் மறுநாள் ஆரம்பிக்க வேண்டும்.

(3). பொதுவாக வருடம் ஒன்றுக்கு 365 நாட்கள். அதிவருடம் (Leap year) மட்டும் 366 நாட்கள் கொண்டதாய் இருக்கும். சக வருடத்துடன் 78-ஐக் கூட்டி 4 ஆல் வகுத்தால் அதிவருடம் வரும். ஆனல் இக் கூட்டெண் 100-ன் வகுப்பெண் ஆனல் 400-ஆல் வகுக்கவேண்டும்; இல்லையேல் அதி வருடம் வராது.

1878, 1882, 1886, 1890, 1894 சக ஆண்டுகள் 366 நாட்கள் கொண்ட அதி வருடங்களாம். ஆனல் 2022, 2122, 2222, 2422, 2522, 2622 சக ஆண்டுகள் அதி வருடங்களல்ல; 1922, 2322, 2722 சக ஆண்டுகள் அதி வருடங்களே.

(4). சைத்ரம், வருடத்தின் முதல் மாதம். ஒவ்வொரு மாதத்திற்கும் கீழ்க் கண்ட அளவில் நாட்கள்;—

| | | |
|---|---|---|
| | (அதிவருடத்தில் 31). | |
| சைத்ரம் .. .. | 30 நாட்கள் | சித்திரை. |
| வைசாகம் .. .. | 31 நாட்கள் | வைகாசி. |
| ஜ்யேஷ்டா .. .. | 31 நாட்கள் | ஆனி. |
| ஆஷாடா .. .. | 31 நாட்கள் | ஆடி. |
| ஸ்ராவண .. .. | 31 நாட்கள் | ஆவணி. |
| பத்ரா .. .. | 31 நாட்கள் | புரட்டாசி. |
| ஆஸ்வின .. .. | 30 நாட்கள் | ஐப்பசி. |
| கார்த்திகா .. .. | 30 நாட்கள் | கார்த்திகை. |
| அக்ரஹாயண (மார்க்கவீர்ஷ) .. | 30 நாட்கள் | மார்கழி. |
| பௌஸா .. .. | 30 நாட்கள் | தை. |
| மாகா .. .. | 30 நாட்கள் | மாசி. |
| பல்குண .. .. | 30 நாட்கள் | பங்குனி. |

இந்தியப் புதுச் சீர்திருத்தப் பஞ்சாங்கத்தின் தேதிகள் இன்றுள்ள க்ரிகோரி பஞ்சாங்கத்துடன் நேரடியாக நிலையான தொடர்புடையவை. ஒன்றுக்கொன்று நேரான தேதிகள் பின்வருமாறு:—

| இந்தியப் பஞ்சாங்கம். | க்ரிகோரிப் பஞ்சாங்கம். |
|---|---|
| சைத்ரம் 1 .. .. | மார்ச்சு 22 பொது. மார்ச்சு 21 அதி வருடத்தில். |
| வைசாகம் 1 .. .. | ஏப்ரல் 21. |
| ஜ்யேஷ்டா 1 .. .. | மே 22. |
| ஆஷாடா 1 .. .. | ஜூன் 22. |
| ஸ்ராவண 1 .. .. | ஜூலை 23. |
| பத்ரா 1 .. .. | ஆகஸ்ட் 23. |
| ஆஸ்வின 1 .. .. | செப்டம்பர் 23. |
| கார்த்திகா 1 .. .. | அக்டோபர் 23. |
| அக்ரஹாயண 1 .. .. | நவம்பர் 22. |
| பௌஸா 1 .. .. | டிஸம்பர் 22. |
| மாகா 1 .. .. | ஜனவரி 21. |
| பல்குண 1 .. .. | பெப்ருவரி 20. |

இந்தியப் பஞ்சாங்கத்தின்படி பருவங்கள் நிரந்தரமாகக் கீழ்க்கண்டபடி நிலைபெற்று நிற்கும்:—

| பருவங்கள். | மாதங்கள். |
|---|---|
| க்ரீஷ்ம ருது (முதுவேனில்) .. | வைசாகம்—ஜ்யேஷ்டா. |
| வர்ஷ ருது (கார்) .. .. | ஆஷாடா—ஸ்ராவண. |
| ஸரத்—(கூதிர்) .. .. | பத்ரா—ஆஸ்வின. |
| ஹேமந்த ருது (முன்பனி) .. | கார்த்திகா—அக்ரஹாயண. |
| ஸிஸிர—(பின்பனி) .. | பௌஸா—மாகா. |
| வஸந்த—(இளவேனில்) .. | பல்குண—சைத்ரா. |

இப்பஞ்சாங்கத்தைப் பழக்கத்திற்குக் கொண்டுவருவதில் லௌகிகத் துறையிலும், ஓரளவு சமயத் துறையிலும் பயன்படும் வைசாக முதற்தேதி (ஏப்ரல் 14) யில் வருடத்தைத் துவக்கும் பஞ்சாங்கங்களை உடைய ராஜ்யங்கள், 23 நாட்களுக்கு முந்தியே தம் ஆண்டுகளை ஆரம்பிக்கவேண்டிவரும்; எனினும், முதல் மாதம் சைத்ரமாகவே இருக்கும். இதனல் பாதிக்கப்படும் ராஜ்யப் பஞ்சாங்கங்கள்:—

| | |
|---|---|
| வங்காளம், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் | இன்றுள்ள நிலையிலிருந்து ஏழு நாட்கள் தள்ளி வருடங்களை ஆரம்பிக்க வேண்டும். |
| தமிழ்நாடு— | ஸௌர மாதங்கள் இன்றைய நிலையிலிருந்து 23 நாட்கள் முந்தி ஆண்டுகளைத் துவக்கவேண்டும். |

இதில், வங்காளத்திலும், ஒரிஸ்ஸாவிலும், வைஸாகம் என்று குறிக்கப்படும் (14 ஏப்ரல் முதல் 14 மே வரையான) மாதம் தமிழ் நாட்டில் சித்திரை என்றும், சைத்ரம் என்றும் கூறப்படுகிறது.

சித்திரை ஆதியாக உள்ள சாந்திரமானப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றுவோர்களுக்கு இத் தேசியப் பொதுப் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்துவதில் அதிகச் சிரமம் இருக்காது காரணம், அவர்களது வருடாரம்பம் மார்ச்சு 15 முதல் ஏப்ரல் 14-க்குள் நேருவதே.

**சமயத்துறையில்.**

(5) ஒரே பெயருடைய சாந்திரமாத நிர்ணயத்திற்கான ஸௌரமாதக் கணக்குகள், வசந்தவிஷுவத்திலிருந்து 23°-15′ தள்ளி ஆரம்பமாகவேண்டும். இம்முறையே இன்றும் பஞ்சாங்கக்காரர்களால் பின்பற்றப்படுகிறது.

இதன்படி உஷ்ணந்தமான (Tropical) முறையில் சூரியன் கீழ்க்கண்ட அக்ஷாம்ஸங்க (Longtitude)ளில் புகும்பொழுது மாதங்கள் ஆரம்பமாகும்—கீழுள்ளவகையில்.

| மாதப்பெயர். | சூரியனது அக்ஷாம்ஸம். |
|---|---|
| ஸௌர வைசாகம் .. .. | 28°—55′—0″ |
| ஸௌர ஜ்யேஷ்டா .. .. | 53—15—0 |
| ஸௌர ஆஷாடா .. .. .. | 83—55—0 |
| ஸௌர ஸ்ராவண .. .. .. | 113—15—0 |
| ஸௌர பத்ரபதா .. .. .. | 143—15—0 |
| ஸௌர ஆஸ்வின .. .. .. | 173—15—0 |
| ஸௌர கார்த்திகா .. .. .. | 203—15—0 |
| ஸௌர மார்க்கவீர்ஷ .. .. | 233—15—0 |
| ஸௌர பௌஸா .. .. .. | 263—15—0 |
| ஸௌர மாகா .. .. .. | 293—15—0 |
| ஸௌர பல்குண .. .. .. | 323—15—0 |
| ஸௌர சைத்ரா .. .. .. | 353—15—0 |

இவ் விஷயம் இப்போதுள்ள பழக்க வழக்கத்திற்கு விரோதமாகப் போகக்கூடாது என்பதற்காகவே ஒருவாறு ஒப்புக்கொள்ளப்படுகிறது. எனினும், இது வராஹமிஹிரர், காளிதாசன் காலத்தில் இருந்ததுபோல் சரியானபடி பருவங்களை வகுக்காது. கொஞ்சகாலத்திற்குப் பிறகேனும், சாந்திர, ஸௌர மான விழாக்கள் பழைய முறையில் தக்க பருவங்களில் நடக்க வேண்டியவண்ணம் பின்னும் நம் பஞ்சாங்கம் சீர்திருத்தம் பெறும் என்று நம்பகத்தோடு எதிர்பார்க்கிறோம்.

(6) வழக்கப்படி வைதிகத்துறைக்கான சாந்திர மாதங்கள் அமாவாசையிலிருந்து ஆரம்பமாகும். அந்த அமாவாசை எந்த ஸௌர மாதத்தில் நேருகிறதோ அம்மாதத்தின் உப பெயரையே பெறும். ஒரே ஸௌரமாதத்தில் இரு அமாவாசைகள் ஏற்பட்டால் வழக்கப்படி முதல் அமாவாசையில் துவங்கும் சாந்திரமாதம் அதிக மாதமென்றும், மலமாதம் என்றும், இரண்டாம் அமாவாசையில் துவங்கும் மாதம் சுத்தமாதம், நிஜமாதம் என்றும் சொல்லப்படுகின்றன.

(7) 13°—20′–ஆன நட்சத்திரங்களைச் சந்திரன் நீங்கும் காலமும், சூரியன் அடையும் காலமும் மாறிவரும் அயனாம்ஸப்படி கணிக்கப்பட்டுள்ளன. காரணம், நக்ஷத்திரங்கள் நிலைத்துள்ளவை என்ற அனுமானமே. 1956, மார்ச்சில் இவ் வயனாம்ஸத்தின் அளவு 23°—15′—0″. அதன் பிறகு வருடா வருடம் வழக்கப்படியான ராசரி 57′—27″ ஆக அதிகரித்துக் கொண்டே போகும்.

இதனால் ஸௌரமானப் பண்டிகைகளான மகாவிஷுவ சங்கராந்தி, உத்தராயண சங்கராந்தி, தக்ஷிணாயண சங்கராந்தி முதலியவை வானநூற்படி சரியான பருவங்களில் கொண்டாடப் பெறும்; சாந்திரமானப் பண்டிகைகள் தவறான தற்காலப் பஞ்சாங்கக் கணிதப்படியே நடைபெறும். வருடத்தின் அளவைச் சரியானபடி இப் பஞ்சாங்கத்தில் வகுத்துள்ளதால் இனிமேலும் தவறு நேர்வதைத் தடுத்துள்ளோம்.

அயனாம்ஸத்தை அறியாத நம் பஞ்சாங்கக்காரர்களால் 1400 ஆண்டுகளுக்குமுன் சரியானபடி நடத்தப்பெற்ற நம் பண்டிகைகள் 23 நாட்கள் தள்ளி பருவமல்லாத பருவங்களில் நடைபெறுகின்றன. இக் குறையையும் உடனுக்குடனே நீக்க வேண்டியது அவசியமெனினும், இன்றுள்ள நிலையில் இன்னும் தவறு அதிகமாகாமல் பார்த்துக்கொள்வதே இச் சமயத்திற்கு வசதியானதென்று நாங்கள் கருதுகிறோம்.

நட்சத்திர கணிதத்திலும் மாறுபடும் அயனாம்ஸத்தையே நாங்கள் பின்பற்றியுள்ளோம். இதனால் சந்திரனை அந்தந்த நட்சத்திரத் தொகுதிகளுக்கருகில் நிதர்ஸனமாகக் காண முடியும். வேதகாலம் முதல் நம்மவர்கள் இதே முறையைத் தான் கையாண்டு வந்தனர். இதுவே விஞ்ஞானப்படி சரியான முறையாகும்.

(8) 2·5 கிழக்கு ரேகாம்ஸமும், 23°—11′ வடக்கு அட்சாம்ஸமுமான மத்ய ஸ்தலத்திற்குக் கணிக்கப்பட்ட நடுநிசி முதல் நடுநிசிவரையான நாட்களையே லௌகிகத் துறையில் உபயோகிக்கவேண்டும். சமயத் துறையில் அந்தந்த இடத்தின் சூர்யோதயக் கணக்கைப் பயன்படுத்தலாம்.

(9) எல்லாக் கணிதங்களுக்கும், நேரில் அநுபவத்தில் கண்டறியத்தக்க வகையில், சூரிய சந்திர அக்ஷாம்ஸங்களை இன்றுள்ள விஞ்ஞானப்படியான சலனசாம்யங் (equations of motions) களைக் கொண்டே நிர்ணயிக்கவேண்டும்.

(10) முன்கூட்டியே க்ரஹ கதிகளைத் தெரிவிக்கும் கோள் நிலைப் பஞ்சாங்கத் (Ephemerides) தையும், மாலுமி (nautical almanac) பஞ்சாங்கத்தையும் வெளியிட அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். லௌகிகத்துறைக்கும் சமயத்துறைக்குமாகச் சிபார்சு செய்யப்பட்ட இப்பஞ்சாங்கமும் வருடாவருடம் மேற்காட்டியவற்றுடன் சேர்த்து வெளியிடப்படவேண்டும்.

இதற்காக சர்க்காரின் விஞ்ஞானத்துறையோடு சம்பந்தப் பட்ட நிலையான கோள்நிலை மாலுமிப் பஞ்சாங்கக் குழு (Indian Ephemerides and Nautical Almanac Committee) ஒன்றை நிறுவவேண்டும்.

(11) தேசிய வான்நிலை ஆராய்ச்சிக்கூடம் (National Astronamical Observatory) ஒன்றைத் தக்க இடத்தில், தகுந்த தற்கால விஞ்ஞான சாதனங்களுடன் ஏற்படுத்தச் சர்க்கார் தேவையானவற்றைச் செய்யவேண்டும்.

இந்த சிபார்சுகளை விரைவில் செயல்முறையில் காட்ட இந்திய சர்க்கார் அவசியமான யாவற்றையும் செய்யுமென்று நாங்கள் நம்புகிறோம். இதற்கு 21—3—1956 ஆன சித்திரை முதற்தேதி தக்க சமயமாகும். சாலிவாகன சகம் 1878, இந்தியா முழுமைக்கும் இப்பஞ்சாங்கத்தை வெளியிட ஏற்ற காலமாகத் தெரிகிறது.

M· N· ஸாகா.
J. S. கரந்திகார்.
A. C. பானர்ஜீ.
K. L. தப்த்தாரி.
கோரக் ப்ரஸாத்.
R. V. வைத்யா.
N. C. லஹிரி.

புது டில்லி,
1954-ம் ஸு செப்டெம்பர் மீ 13உ.

2. பின்னும் சில அங்கத்தினர்களைக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு, இக்கமிட்டி விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்திற்குத் தன் அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகே அவ்வாறு செய்ய முடியுமென்று தலைவர் பதிலளித்தார்.

3. செயல் முறையைப்பற்றி விவாதிக்கையில் கமிட்டியின் தீர்மானங்களின்படி ஒரு தேசியப் பஞ்சாங்கம் தயாரிக்க இரு வானாராய்ச்சி நிபுணர்களை நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவதென தீர்மானிக்கப்பட்டது.

இந்தியக் கோள் நிலைப் பஞ்சாங்க அமைப்பைப்பற்றி இங்கிலாந்து அரசாங்க வான் நிலையத் தலைவருடன் கமிட்டித் தலைவர் கடித மூலம் கலந்தாலோசித்து வருகிறார்.

4. தேசியப் பஞ்சாங்கம் தயாரிப்பை ஸ்ரீ லஹிரி, ப்ரொபஸர் வைத்யாவிடம் ஒப்படைக்கலாம் எனத் தலைவர் கூறினார்.

இதை ஒப்புக் கொண்டு கமிட்டி தற்போதுள்ள உத்யோகத் துறையிலிருந்து தற்காலிகமாக ஒரு வருடத்திற்கு அவர்களைக் கடன் வாங்க வேண்டுமெனத் தீர்மானித்தது. ஸ்ரீ லஹிரிக்கும் ப்ரொபஸர் வைத்யாவுக்கும் முறையே கல்கத்தாவிலும், உஜ்ஜயினியிலும் உதவியாக ஓரிருவரை நியமிக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்தது.

இதற்காக ஒரு வருடச் செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கும்படி கமிட்டி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது. (விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகம் இச்செலவை அங்கீகரித்துத் தேவையான உதவியாளரையும் நியமித்தது.)

# அனுபந்தம் I

## முதற்கூட்ட நிகழ்ச்சிகள்

1953-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்குப் புது டில்லி பழைய மில் தெருவிலுள்ள விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகக் கட்டிடத்தில் பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவின் முதற் கூட்டம் கூடியது. 1953-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதி வரை நடந்தது.

கூட்டத்தில் பங்கு கொண்டவர்கள் :—

| | |
|---|---|
| ப்ரொபஸர் M. N. ஸாகா | தலைவர். |
| டாக்டர் K. L. தப்த்தாரி | அங்கத்தினர். |
| டாக்டர் கோரக் ப்ரஸாத் | ,, |
| ஸ்ரீ J. S. காந்திகார் | ,, |
| ஸ்ரீ N. C. லஹிரி | ,, |
| ப்ரொபஸர் R. V. வைத்யா | ,, |
| ஸ்ரீ A. K. கோஷ்<br>டாக்டர் K. கிச்சலு<br>டாக்டர் லால் C. வெர்மான்<br>ஸ்ரீ S. பாஸு. | அழைக்கப்பட்டவர்கள். |
| ஸ்ரீ K. G. கிருஷ்ணமூர்த்தி | விஞ்ஞானக் கைத் தொழில் ஆராய்ச்சிக் குழுவின் துணைச் செயலாளர். |

2. இயற்பொருள் விஞ்ஞானத் தேர்ச்சித் துறைத் துணை அமைச்சரான (Deputy Minister, Natural Resources and Scientific Research) ஸ்ரீ K. D. மாளவ்யா கூட்டத்தைத் துவக்கி வைத்தார்.

3. நேரே வர இயலாமையால் முதலமைச்சர் நேருஜீ கீழ்க் கண்ட ஆசிச் செய்தியை அனுப்பினார்:—

"பஞ்சாங்கச் சீர்திருத்தக்கமிட்டி தன் அலுவல்களைத் துவக்கி விட்டதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாட்டில், இன்றுள்ள பஞ்சாங்கங்கள் யாவற்றையும் பரிசீலனை செய்து, விஞ்ஞான முறையில் சரியான, நாடு முழுமைக்கும் ஒரே படித்தாய்ப் பொது வான ஒரு பஞ்சாங்கத்தை அமைக்கும் திட்டங்களை வகுத்துத்தரும் பொறுப்பை இந்திய அரசாங்கம் இக் கமிட்டியிடம் ஒப்படைத் துள்ளது. இன்று கால நிர்ணயம் உட்பட பல வகையாக மாறுபடும் முப்பது பஞ்சாங்கங்கள் வழக்கத்தில் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இவை பழமையான நமது அரசியல் பண்பாடுகளின், வரலாற்றின் இயல்பான விளைவுகளே—இவை களால் அரசியல் துறையில் முந்தைய இந்தியாவின் பாகுபாடு களும் ஓரளவு குறிக்கப்படுகின்றன. இப்போது நாம் விடுதலை பெற்று விட்டமையால், நம் நாகரிக, சமுதாய, மற்றுமுள்ள பிறவாழ்க்கை நெறிகளுக்காக ஒரே தன்மைத்தாகிய ஒரு பொதுப் பஞ்சாங்கம் அமைக்க விரும்புவது இயல்பே. இது விஞ்ஞான அடிப்படையிலேயே அமைய வேண்டுவதும் தெளிவானதே.

அரசியல் துறையிலும், பொது வாழ்வின் பல்வேறு துறை களிலும், உலகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பழக்கத் திலிருக்கும் க்ரிகோரி பஞ்சாங்கத்தையே இன்றும் நாம் பின் பற்றி வருவது உண்மையே. அதிகப்படியான உபயோகமே அதற்கு ஒரு முக்யத்வத்தைக் கொடுக்கிறது. அதில் பல குணங்கள் உண்டு. இருப்பினும் அதிலுள்ள சில குறைகளால் உலக முழுமைக்கும் பொதுவாகப் பயன்படும் தகுதி அற்ற தாகிறது.

பழக்கத்திலுள்ள ஒரு பஞ்சாங்கத்தை மாற்றுவது எப்போதுமே கஷ்டமான காரியந்தான் ; ஏனெனில் இம் மாறு தல் சமுதாய வழக்கங்களைப் பாதிக்கும். இருப்பினும், விரும்பும் அளவுக்கு முழுமையான பயன் தராவிடினும், என்றாவது இம் முயற்சியைச் செய்தே தீரவேண்டும். எப்படி ஆயினும் இன்றுள்ள பஞ்சாங்கக் குழப்பத்தை நீக்கியே தீரவேண்டும்.

இவ் விஷயத்தில் நம் விஞ்ஞானிகள், சரியான பாதையைக் காட்டுவார்கள் என நான் நம்புகிறேன் ".

4. இயற்பொருள் விஞ்ஞானத் தேர்ச்சித் துறைத் துணை அமைச்சர் ஸ்ரீ K. D. மாளவ்யா பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கி வைத்துச் சொல்லியது :—

" இந்திய அரசாங்கத்தின் சார்பில் பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டியை மனப்பூர்வமாக வரவேற்கும் இனிமையான கடமை என்னுடையது.

இங்கு இன்று காலை நீங்கள் கூடி இருப்பது பண்டித முறை யில் விஞ்ஞான விஷயங்களை விவாதிப்பதற்காக அல்ல ; ஒரு முக்கியமான துறையில் தேசத்திற்கு அநுபவ சாத்யமான வழியைக் காட்டவே ; அதாவது, இந்தியப் பஞ்சாங்கத்தில் ஒரே சீரான ஒரு பொதுப்படையை உண்டாக்கவே கூடி இருக்கிறீர்கள். நமது நாகரீக வாழ்வுக்குப் பஞ்சாங்க தத்துவம் எத்துணை அடிப் படையான முக்கியத்வம் பொருந்தியது என்பது உங்கள் யாவ ருக்கும் தெரியும் ; பஞ்சாங்க மில்லாமல் எந்த நாடும் தன் அன்றாட வேலைகளைச் சரிவரச் செய்யமுடியாது.

மாதங்கள், வருடங்கள் யாவும், நாளைய காலத்தை அளக்கும் அஸ்திவாரக் கருவியாகக் கொள்வதாலேயே ஏற்படு கின்றன. கி. பி. 400 முதல் 1200 வரையிலான ஸித்தாந்த ஸகாப்தத்திலேயே, நம் வான நூலோர் காலத்தைக் கணிக்க அஹர்கண (நாட்குவிப்பு)த்தையே கருவியாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை முதல் முதலாகக் கண்டுபிடித்து வெளியிட்டனராம். இம் முறை கி.பி. 1582–ல் தான், முதன் முதலாக, ஜோஸப் ஸ்காலிகர் என்பவரால் ஐரோப்பிய வான நூற்களில் புகுத்தப்பெற்றதாம். இதே சமயத்தில் பழமையான வேதாங்க ஜோதிடத்தை நுணுகி ஆராய்ந்த தற்கால வானறிஞர், கிறிஸ்தவ ஸகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில், கிரேக்க, சால்டிய, மத்திய கிழக்குப் பஞ்சாங்கங்களோடு ஒப்பிட்டால் நம் பஞ்சாங்கக் கால நிர்ணயங்கள் ஒழுங்கற்றவையே என்கிறார்கள்.

பல இனங்கள், பல தேசியப் பகுப்புகள் கூடி இருப்பினும் கிறிஸ்தவ உலகம் முழுமையும், உலகம் பஞ்சாங்கமாக மதிக்கப் பெறும் ஒரே ஒரு பஞ்சாங்கத்தையே பின் பற்றவும், இஸ்லாமிய உலகமும் ஒரே ஒரு பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தவும், இந்தியா மட்டும், தனித் தனி மாகாண வாரியாக, ஸகாப்தங்கள், ஆண்டுத் துவக்கங்கள், கணித முறைகள் முதலியவற்றில் வெகுவாக வேறுபடும் 30 வகையான பஞ்சாங்கங்களைப் பின் பற்றுவது விசித்திரமே. இவை யாவும், சமூக–சமயத் துறை களுக்காகவே ஏற்பட்டுள்ளன. எனினும் பல்வேறு வேறுபாடுகள் கூடி இருப்பதால் இவற்றை அநுஷ்டிப்பதில் பொது மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடைஞ்சலாயிருக்கிறது. ஒரே விடுமுறை நாள், ஒரு நாள் அளவு மாறுதலுடன் வெவ் வேறு பகுதிகளில், ஒரே இடத்தில் வெவ்வேறு நாட்களில், வெவ்வேறு கணிதங்களுக்கேற்ப நடை பெறலாம். பூரி ஜகந் நாத்துத் தேர்த் திருவிழாவின தேதி நிர்ணயத்தில் வங்காளர், ஒரிஸாப் பஞ்சாங்கங்கள் ஒரு மாத அளவில் வேறுபடுகின்றன. இப்படிச் சில சமயங்களில் அதிகரித்த வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இதன் காரணம் என்ன ? 1500 ஆண்டுகளுக்கு முன்பே, விஞ்ஞான முறையில் சரியான பஞ்சாங்கங்கள் கணிக்க விதிகளை நம்மவர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என அறிகிறேன்.

யின் வருபவர்கள் வானத்தில் சந்திர-சூரியக் கோள் நிலைகளை நேருக்கு நேர் கண்டு தக்கபடித் தம் பஞ்சாங்கங்களை அமைக்க வேண்டும் என்றும் விதி ஏற்படுத்தியுள்ளனராம்.

கி. பி. 1200-வரை, உஜ்ஜயினி முதலான வான நிலையப் பகுதி வானநூலோர் கோள் நிலைகளை நேரடியாகக் கண்டே சரியான பஞ்சாங்கங்களைக் கணித்து வந்தனர். ஆனால், கி. பி. 1200-க்குப் பிறகு வானாராய்ச்சி நிலையங்கள் அழிந்துபோயின; அம்பர் அரசரான மகாராஜா ஜெய்சிங் ஸமார்கண்டின் உலக்பே (Ulug Begh at Samarkand) நிலைய மாதிரியில் உஜ்ஜயினி, ஜெயபுரி முதலான ஐந்திடங்களில் வானாராய்ச்சிக் கூடங்களை ஏற்படுத்தும் வரையில், இந்நாட்டின் புது அரசினர் இவ் விஷயத்தில் யாதொரு முயற்சியும் எடுத்துக்கொள்ள வில்லை. எனவே, நெடுங்காலம் வேறு வழியின்றித் தனித்து விடப்பட்ட நம் பஞ்சாங்கம் இயற்றுவோர் தவரான, பொருத்த மற்ற பழங் கணித முறைகளையே பின்பற்ற நேர்ந்தது. இதனால் பஞ்சாங்கக் குழப்பம் எற்பட்டது; தனித்தனிப் பகுதிகளின் தனித் தனியான பழக்க வழக்கங்களால் இக்குழப்பம் பின்னும் அதிகமாகியது. இது இந்தியா நெடுங்காலம் அடிமைப்பட்டிருந் ததன் விளைவேயாகும்.

இன்று நாம் விடுதலை பெற்றுவிட்டோம்; நம் தேசிய வாழ்வில் ஒரே படித்தான ஒற்றுமை உண்டாக்கப் பாடுபடு கிறோம். எனவே, தேசிய வாழ்வில் மிக முக்கியமான பஞ்சாங்க விஷயத்தில் இன்றுள்ள குழப்பத்தை நம்மால் அநுமதிக்க முடியாதென்பது நிச்சயம். லௌகிக, அரசியல் விவகாரங் களுக்கு இன்று நாம் ஆங்கில ஆட்சியால் நம்மேல் திணிக்கப்பட்ட க்ரிகோரி பஞ்சாங்கத்தைப் பின்பற்றுகிறோம். இது அவர்களது சொந்தப் பஞ்சாங்கமல்ல; அவர்களை நாகரிகம் பெறச்செய்த ரோமர்களால் ரோம எழுத்துக்களைப் போலவே இப்பஞ்சாங்கமும் அவர்கள்மேல் சுமத்தப்பட்டது. இதில் ஒரு பகுதியை ரோமர்கள் எகிப்தியரிடமிருந்து கடன் வாங்கினர். சென்ற இரு நூற்றாண்டு களாக ஆங்கில அதிகாரம் உலகத்தின் பல பகுதிகளில் பரவி இருந்ததால் இதுவே உலகப் பஞ்சாங்கமாகும் உயர்வு பெற்றது. எனினும் நம் பஞ்சாங்கங்களுடன் ஒப்பிட்டால் க்ரிகோரி பஞ்சாங்கம் சீர்திருத்தப்படவேண்டிய பல குறைபாடுகளை உடையது.

இந்த க்ரிகோரி பஞ்சாங்கத்தைப் பரிசீலனை செய்து சீராக்க வேண்டுமென உலகப் பஞ்சாங்கக் குழு (The World Calender Association) வினரால் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத் (U. N. O.) தின் முன் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவின் வேலைகளில் ஒன்று விஞ் ஞானப்படி சரியான—உலக முழுமையும் ஒப்புக் கொள்ளத் தக்க ஒரு பஞ்சாங்கத்தைத் தயாரிப்பதில் உலகப் பஞ்சாங்கக் குழுவினருக்குப் பயனுள்ள குறிப்புகளைத் தருவதுமாகும். நம் மகம்மதிய சகோதரர்கள் தங்கள் சமய விழாக்களை நிர்ணயிக்கத்தங்கள் ஹிஜிராப் பஞ்சாங்கத்தையே உபயோகிக்க லாம். இத்துடன் இவ்விஷயத்தில் அவர்களை விட்டு விடுகிறோம். இப்பஞ்சாங்க சீர்திருத்தக் குழுவின் முன்னுள்ள முக்கிய வேலை விஞ்ஞான முறையில் இன்றுள்ள பஞ்சாங்கங்கள் யாவற்றையும் ஆராய்ந்து அரசியல் சமூக-சமயத் துறைகளில் பயன்படத்தக்க இந்தியா முழுமைக்கும் பொதுவான சீரான ஒரு பஞ்சாங்க அமைப்புத் திட்டத்தை வகுப்பதேயாகும். அது சாத்தியமான காரியமே என இங்கு குழுமியுள்ள எனது வான ஆராய்ச்சி நிபுண நண்பர்கள் உறுதி கூறு கின்றனர். இந்தியாவின் பலதரப்பட்ட மக்களுக்கும் ராஜ்யங் களுக்கும் பொதுவாக நீங்கள் வகுக்கப்போகும் புதுப் பஞ்சாங்கத் திட்டத்தை இந்திய அரசாங்கம் எதிர்பார்த்திருக் கிறது. உங்கள் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதை அரசாங்கம் அக்கறையோடு கவனிக்கும். இத்திட்டம் விஞ்ஞா னத்தை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். இந்தியாவின் பல பகுதிகளிலுள்ள பழக்க வழக்கங்களுக்கும் பண்டிகை களுக்கும் பொருத்தமாய்ப் பலதரப்பட்ட மக்களும் ராஜ்யங் களும் ஒப்புகொள்ளத்தக்கதாய் இருக்கவேண்டும் என்பதை யெல்லாம் சேர்த்து நான் கூறத் தேவையில்லை.

இதிலுள்ள கஷ்டங்களை அறிந்தே நான் இவற்றைக் கூறுகிறேன். விஞ்ஞானிகள் பஞ்சாங்கச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பலவற்றை உபதேசிக்கலாம். ஆனால் அவற்றை அனு பவ சாத்திய (செயல் முறை) மாக்குவது அரசியல் சமய அதிகாரிகளாலேயே முடியும். பழமையான ரோமன் பஞ்சாங் கத்தை மாற்றியமைக்க அரசியல் சர்வாதிகாரியான ஜுலியஸ் ஸீஸராலும், சமயச் சர்வாதிகாரியான போப்பாண்டவர் 13-ம் க்ரிகோரியாலுமே முடிந்தது. பழமையான சாந்திர ஸௌர மான பஞ்சாங்கத்தை நபி நாயகத்தின் அத்தாட்சியில்லா மல்தான் மாற்றி அமைக்க முடிந்தது. ஆனால், நாமே குடியாட்சியின் கீழ் வாழ்கிறோம். எனவே நீங்கள் எத்தகைய திட்டங்கள் வகுத்தாலும் அவற்றைப்பற்றிப் பொது ஜன அபிப் பிராயத்தை அறிந்து கொள்ளுவது அவசியமாகும். நம் மக்கள் புதுமை என்ற காரணத்தால் மின்சார வியப்புகளையும் யந்திர சாதனங்களையும் எப்படி விலக்கவில்லையோ, அப்படியே உங்கள் திட்டங்களையும் புதுமை நோக்கி வெறுக்க மாட்டார்கள் என நான் உறுதியாய் நம்புகிறேன். பொது மக்களின் வரவேற்பால் ஊக்கப் பெற்று சர்க்கார் இத் திட்டங்களைச் செயல் முறையில் காட்ட ஆவன செய்தல் சாத்யமாகும் என்று எனக்கு நம் பிக்கை இருக்கிறது".

5. பஞ்சாங்கச் சீர்திருத்தக் குழுவின் சார்பாக குழுத் தலை வர் ப்ரொபஸர் M. N. ஸாகா பிரதமர் நேரு அன்பு கூர்ந் தனுப்பிய ஆசிச் செய்திக்காகத் தம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். பிரதமரே நேரில் வந்து குழுவின் அலுவல்களைத் துவக்கி வைக்க இயலாது போனதற்கு வருத் தத்தையும் தெரிவித்தார். அதே சமயம் பிரதமரது உள்ள மும் உணர்ச்சியும் இவ் விஷயத்தில் ஊன்றி உள்ளதென்றும், குழு தன் அலுவல்களைத் துவக்கி இந்தியப் பொது பஞ்சாங் கத்தை உருவாக்கி நாட்டுக்கு உதவுவதையே அவர் விரும்பு கிறார் என்றும் தலைவர் ஸாகா உறுதியாகக் கூறினர்.

6. பின்னும், குழுவின் சார்பில் தலைவர் ஸாகா கமிட்டி யில் பிரசன்னமாயிருந்து அதன் வேலைகளைத் துவக்கி வைத்த தற்காக துணை அமைச்சருக்குத் தம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். இக் குழுவினர் செயலாற்றவேண்டிய அடிப் படையான திட்டங்களை அவர் வரையறுத்துக் கொடுத்துள்ளார். அரசாங்கம் தரும் ஊக்கத்துடன் நம் காரியத்தில் வெற்றி பெறுவோமாக. அரசாங்கத்தின் உதவியில்லாமல் இத்தகைய விவாதங்கள் பயனற்ற பழங்கதைகளேயாகும்.

7. இந்தியாவில் 30 அல்லது அதற்கும் அதிகமான பஞ் சாங்கங்கள் வழக்கத்திலிருப்பதையும் அவர் குறிப்பிட்டார். காசி நகரில் மட்டும் நான்கு பஞ்சாங்கங்கள் வழங்கி வருகின்றன. இந்துக்களின் முக்கிய பண்டிகைகளான விநாயக சதுர்த்தியும் ஸரஸ்வதி பூஜையும் நாட்டின் வெவ்வேறு இடங்களில் வெவ் வேறு நாட்களில் ஏன், இவ்வாண்டு கல்கத்தாவில் நேர்ந்தது போல் ஒரே ஊரில் வேறு வேறு நாட்களிலும் கொண்டாடப் படுகின்றன. இக் குழுவின் வேலை, யாவரும் ஒப்புக்கொள்ளும் விஞ்ஞானப்படியான தேசியப் பொது பஞ்சாங்க அமைப்புத் திட்டமொன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதே. இது சுலப மான காரியமல்ல.

8. பஞ்சாங்க வரலாற்றை வரைப்படுத்தும்போது இத்த கைய மாறுபாட்டுக் கருத்துக்கள் புதியவையல்ல என்பதைத் தலைவர் எடுத்துக் காட்டினர். கி. பி. 400-க்கு முந்திய இந்திய சாந்திர ஸௌரமானப் பஞ்சாங்கங்கள் மிகவும் ஒழுங்கற்றி ருந்தன; கி. பி. 400-க்குப் பிறகு, பாடலிபுத்திரம், பில்மல், ராஜஸ்தான், உஜ்ஜயினி முதலிய இடங்களிலிருந்த இந்திய

வானூராய்ச்சி மேதைகள் கணித, வான நூல், விஞ்ஞானத் துறைகளில் அருமையான பல மாறுதல்களை ஏற்படுத்தினர். பிற்காலத்தவருக்காகக் கணித முறையில் பல சாம்யங் (formula) களை வகுத்துத் தந்ததுடன் நம் கால நிர்ணயக் கருவிக ளான மதி, ரவி கோள் நிலைகளை நேருக்கு நேர் நிதரிசன மாகக் கண்டே பஞ்சாங்கங்களைக் கணிக்க வேண்டும் என்ற விதி யையும் விளக்கிச் சென்றனர்.

9. இப்போதும் கால நியதியைக் (Chronology) கணிக்க அஹர்கண (நாட்குவிப்பு) முறையே வழக்கத்திலிருக்கிறது. கி. பி. 400-ல் இந்துக்களால் தான் முதன் முதலாக இம் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இதை ஐரோப்பாவில் 16-வது நூற்றாண்டில் தான் ஜோஸப் ஸ்காலிகர் என்பவர் கண்டு பிடித்தார். ஸித்தாந்த வான அறிஞர் வசந்த விஷுவிலிருந்தே வருடங்களை ஆரம்பித்தனர்; பல ஆராய்ச்சியினர் குறிப்பது போல் அதற்கு முன்பு மகராயண (Winter solstice)-த்திலேயே ஆண்டுகள் துவங்கினவாம்.

10. இச் சமயத்திலேயே ஸௌர மாதங்கள் ஏற்பட்டன. இவை பழக்கத்திற்கு அவ்வளவாகப் பயனற்றவை; மாத அள வைகள் 29 முதல் 32 நாட்களாக மாறுபட்டன. தவிர அக் காலத்தவர்கள் அயனாம்ஸத்தைப்பற்றி அறியாமையாலோ அல்லது அறிந்தும், அயன சலனம் ஒரே திசையில் (பக்கத்தில்) உருளுவதால் அதைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டாமென ஒதுக்கியதாலோ, பருவங்களாலான வருஷத்திற்குப் பதில் நட்சத் திரமான வருடத்தை உபயோகித்ததே பெரிதான இடைஞ்சலை விளைவிக்கிறது. இக் குறையை கி. பி. 10, 11 நூற்றாண்டுகளி லிருந்த முஞ்சாலாவும், ஸ்ரீபதியும் கண்டு, வருடங்களைச் சர சாயன (அயனாம்ஸத்துடன் கூடிய) முறையிலேயே ஆரம்பிக் கும்படி தம் காலத்து வான அறிஞர்களைத் தூண்டினர். அவர் கள் முயற்சி வெற்றி பெறவில்லை. இன்று, மார்ச்சு 21-ம தேதி வசந்த விஷு வருகிறது; நமது வருடங்களோ ஏப்ரல் 13, 14 தேதிகளில் ஆரம்பமாகிறது. எனவே நம் பருவங்களும் கால நிர்ணயத்திலும், வருட ஆரம்பத்திலும் 23 நாட்கள் அளவுக்குத் தவறு ஏற்பட்டுள்ளது.

11. இக் குறையை இருந்தபடியே இருக்கட்டும் என்று விட்டு விடுவதா அல்லது நீக்கிச் சரி செய்வதா என்பதை இக் கமிட்டி தீர்மானிக்க வேண்டும் என்று தலைவர் குறிப்பிட்டார். ஐரோப்பாவிலும் இத்தகைய தவறுகள் நேர்ந்து அவை சரிபண்ணப்பட்டதையும் எடுத்துக் காட்டினர். 1582-ல் க்ரி கோரியின் வருடத்தில் 10 நாட்கள் குறைவதைக் கண்டனர். எனவே, போப்பாண்டவர் 13-ம் க்ரிகோரி அக்டோபர் 5-ம் தேதி யை 15-ஆக மாற்றினர். காத்தோலிக் கிறிஸ்துவர்கள் இம் மாற்றத்தைக் ஒப்புக்கொண்டனர். ப்ராடஸ்டெண்டு கிறிஸ்த வர்கள் இம்மாறுதல் போப்பாண்டவரால் செய்யப்பட்டதென்ற ஒரே காரணத்தினால் ஒப்புக்கொள்ள மறுத்தனர். 170 வருடங்களுக்குப் பிறகே இங்கிலாந்தில் சட்டத்தின் மூலம் இச் சீர்திருத்தம் அமுலுக்கு வந்தது. ரஷ்யாவில் போல்ஷிவிக் புரட்சிக்குப் பிறகே சீர்திருத்தப்பட்ட க்ரிகோரிப் பஞ்சாங்கம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

12. இந்தியாவில் பஞ்சாங்கத்தைச் சீர்திருத்தவேண்டும் என்ற கருத்து முதல் முதலாக மகாராஷ்டிரத்திலேயே ஆரம்ப மாயிற்று. பெரிய தேச பக்தரும் பழைய வரலாற்று ஆராய்ச்சி யில் மேதையுமான லோக மான்ய ஸ்ரீ பால கங்காதர திலகரே பஞ்சாங்கச் சீர்திருத்தத்தை மகாராஷ்டிரத்தில் துவக்கி வைத்தார். அவர் துவக்கிய புதுமுறைப் பஞ்சாங்கம் இன்று பூனாவிலிருந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

13. பஞ்சாங்கச் சீர்திருத்தத்தில் முதன்மையானவர்களில் மிகவும் சிறந்து நின்றவர் ஸங்கர பாலகிருஷ்ண தீட் சதர். அவர் இயற்றி உள்ள 'பாரதீய ஜோதிஷ ஸாஸ்தி ரம்' என்னும் இந்திய வான் ஆராய்ச்சி வரலாற்று நூல் மதிப்பிற்குரிய எடுத்துக் காட்டு நூலாகும். எனினும் இது மராத்திய மொழியிலிருப்பதால் எல்லோருக்கும் பயன்படக் கூடியதல்ல. யாவருக்கும் பயன்படுவதற்கு இதை ஆங்கி லத்தில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டுமென்றும் தலைவர் குறிப்பிட்டார். (இதன்மேல் விஞ்ஞானக் கைத் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தார் இந்நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பஞ்சாங்கக் குழு அங்கத்தினரான R.V. வைத்யாவிடம் ஒப்படைத்துள்ளனர்.)

14. வங்காளத்தில், 1890 முதல், மேதாப் சந்தர சட்டோபாத்யாய அவர்கள் விஞ்ஞான முறையில் கணிக்கப் பெற்ற 'விசுத்த ஸித்தாந்த பஞ்சிகா' என்ற பஞ்சாங்கத்தை வெளியிட்டு வந்தார். இக் குழுவின் அங்கத்தினரான நிர்மல் சந்திரலஹிரி அதை இன்று தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

15. இந்திய கலாசாரத்திற்கும், சமயத்திற்கும் மத்ய ஸ்தலமாய், பழமையான காசி நகரிலும் காலஞ்சென்ற பண்டித மதன் மோஹன் மாளவ்யா, ஸ்ரீ ஸம்பூர்ணாநந்தர் முதலியோரால் பஞ்சாங்கச் சீர்திருத்தம் பரிசீலனை செய்யப்பட்டுச் சீர்திருத்தத்தின் அவசியம் வற்புறுத்தப் பெற்றது.

16. இவ்வண்ணம் பல ஆண்டுகளாக இவ் விஷயம் தனி மனித அளவில் நடைபெற்று வந்துள்ளது. இது எல்லா மக்களுக்கும் பொது (அளவு மட்டம்) வான ஒரு காரியமாகை யால் அரசாங்க அளவிலேயே இதை நிறைவேற்ற முடியும். எப்படியாயினும், எல்லோரும் இந்தியா முழுமைக்கும் பொது வான ஒரு பஞ்சாங்கத்தின் தேவையை ஒப்புக்கொள்ளு கின்றனர்.

17. நம் மத சம்பந்தமான பண்டிகைகளெல்லாம், குறை யிருந்துள்ள ஸௌரமானத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாந்திர மானப் பஞ்சாங்கத்தாலேயே கணிக்கப்படுகின்றன. நாம் இப்போது செய்ய வேண்டியது, சரியான ஸௌரமானப் பஞ்சாங்கத்தை முதலில் ஏற்படுத்தி, அதனுடன் சாந்திரமானப் பஞ் சாங்கத்தை முதலில் இணைப்பதேயாகும்.

18. உலகப் பொதுப் பஞ்சாங்கமாக உயர்வு பெற்றுள்ளும் க்ரிகோரிப் பஞ்சாங்கத்தில் அதிருப்திகரமான பல குறைகள் உள்ளன என்பதையும் தலைவர் குறிப்பிட்டார். அதன் முக்கிய மான குறைகளில் ஒன்று, வருட முடிவு மகராயண (Winter solstice)-த்துடன் ஒத்துப் போகாததே. இதைச் சீர்திருத்தப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தின்படி மாதம் ஒன்றுக்கு 4 வாரங்களான 28 நாட்கள். இத்தகைய மாதங்கள் 13 கூடியது ஒரு வருடம்; அதாவது 364 நாட் கள். வருடக் கணக்கில் பாக்கியாயுள்ள 365-ம் நாள் தன் வாரப் பெயரை இழந்து 'வருட முடிவு நாள்' என்று பெயர் பெறும். அதி வருடத்தில் ஆண்டின் இடையில் ஒரு நாள் 'வருட நடுநாள்' என்று அழைக்கப்படும். ஒவ்வொரு மாதமும் ஞாயிற்றுக்கிழமையிலேயே ஆரம்பமாகும். இன் னொரு திட்டத்தின் படி ஒவ்வொரு ஆண்டும் 91 நாட்கள் கொண்ட 4 பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பகுதி யிலும் 31, 30, 30 நாட்கள் கொண்ட மூன்று மாதங்கள் இருக்கும். இம் முறையிலும் முன்னதிற்போலவே வருட முடிவு நாளும், வருட நடு நாளும் உண்டு.

19. அமெரிக்க, நியூயார்க்கிலுள்ள உலகப் பஞ்சாங்கக் குழு (The World Calender Association, New York, U.S.A.)-வினர் ஐக்கிய நாட்டுச் சபை (U.N.O.) முன் உலகப் பொதுப் பஞ் சாங்க அமைப்புத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். இத் திட்டத்தைப் பிரிட்டன் ராஜாங்க வானறிஞர் ஸர் ஹெரால்டு ஸ்பென்ஸர் ஜோன்ஸ் முதலியோர் ஆதரிக்கின்றனர். இது அமுலுக்கு வரின் பஞ்சாங்க கணிதம் பல வகைகளில் சுலபமாகவும், சௌகர்யமானதாகவும் மாறும். எனினும், தொடர்ந்து வரும் 7 நாள் வார முறையை நடு கைவிட வேண்டி நேரும். [இந்தியா ஐக்ய நாட்டுச் சபை முன்

சமர்ப்பித்துள்ள உலகப் பொதுப் பஞ்சாங்கத் திட்டம் அச் சபையின் எகோஸாக் (ECOSOC) கமிட்டியினரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.]

20. இவ் விஷயங்கள் யாவற்றையும் இக் குழுவினர் விவாதிக்க வேண்டும்; விவாதித்து விஞ்ஞானப்படி சரியான ஒரு பொதுப் பஞ்சாங்கத் திட்டத்தைச் சர்க்காருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். கனம் தங்கிய பிரதமர் நேரு, துணை அமைச்சர், இந்திய அரசாங்கம் யாவும் அக்கறையோடு நமக்கு உதவியாய் நிற்கிருர்கள். இக்குழு விவாதிக்க வேண்டிய விஷயங்கள் :—

(அ) கமிட்டி காட்டும் வழியில் 5 ஆண்டுகளுக்கு அகில இந்தியப் பொதுப் பஞ்சாங்கம் ஒன்றை அமைக்க அரசாங்கம் பல வானசாஸ்திரிகளை நியமிக்க வேண்டும்.

(ஆ) இந்திய மாலுமிகள், விமானிகள், பஞ்சாங்கக் கணக்கர்கள் முதலியோருக்குப் பயன்படத் தக்க கோள்நிலைப் பஞ்சாங்கம் (Ephemeris) ஒன்றை அரசாங்கம் வெளியிட வேண்டும்.

(இ) புத்தம் புதிய சாதனங்களுடன் மத்திய வானாராய்ச்சிக் கூடம் ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும்.

21. சரியான கால நிர்ணயத்திற்கும், பூகோளப் பௌதிக (Geophysical) ஆராய்ச்சிக்கும் பயன் படத்தக்க நவாசார, ஸ்படிகக் (Ammonium and squarty) கடிகாரங்களை அவ்வான நிலையத்தில் வைத்திருக்க வேண்டுமென்றும் தலைவர் குறிப்பிட்டார்.

22. சரியான கடிகாரங்களுடன் கூடிய பூகோள பௌதிக ஆராய்ச்சி மிக மிக அடிப்படை முக்யத்வம் வாய்ந்ததென்பதையும் அவர் விளக்கினர். இதுநாள் வரையில் விஞ்ஞானிகள் உலகத்தின் மேற்பரப்பையே ஆராய்ந்து வந்தனர். ஆனல் இன்றோ உலகத்தின் உட்புற ஆராய்ச்சி அர்த்தம் நிறைந்த அவசியமாகிவிட்டது. சரியான கடிகாரங்களுடன் ஆராய்ந்ததில் உலகம் சுற்றுவதின் வேகம் திடீர் திடீரென்று மாறுவது பூமிக்குள்ளே நிகழும் ஏதோ ஒரு மாறுதலாலேயே என்பது தெரிகிறது.

23. இக் குழுவினரால் அமைக்கப்படும் சீர்திருத்தப் பெற்ற இந்தியப் பொதுப் பஞ்சாங்க (Calendar)-மும், கோள் நிலைப் பஞ்சாங்கமும் (Ephemeris) பொதுவான நகர, சமூக, தேசிய வாழ்வுக்கு மட்டுமல்லாமல், நிலப்படை, நீர்ப்படை, விமானப் படை முதலியவற்றுக்கும் பயன்படும் என்றும் குறிப்பிட்டார். குழுவினரின் சார்பில் துணை அமைச்சருக்கு வந்தனம் செலுத்தினர்.

24. இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், ப்ரேஸில், கனடா முதலியவற்றிலிருந்தும் ஆசிச் செய்திகள் வந்துள்ளதைத் தெரிவித்தார். உலகப் பஞ்சாங்கக் குழுவின் தலைவியான கன்னி அசிலிஸ்ஸும் (Miss Achelis) ஆசிச் செய்தி அனுப்பி இருந்தார்.

25. இதன் பிறகு, இன்றுள்ள பஞ்சாங்கங்களைச் சீர்திருத்தி அரசாங்கம் ஒரு புதுப் பொதுப் பஞ்சாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமா என்ற பொது விவகாரம் விவாதிக்கப்பட்டது.

டாக்டர் கோரக் ப்ரஸாத் அரசாங்கம் இக் காரியத்தை ஏற்பதே தக்கதென்றும், பொதுமக்களின் அதிருப்திக்கும், வெறுப்பிற்கும் இடமில்லாதபடி தேவையான அளவுக்கே சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினர். வீர வணக்கம், குரு பக்தி, பொறுமை, பணத் தாசை முதலியவைகளால் நம் பஞ்சாங்கங்களில் பல விபரீதமான ஒழுங்குத் தவறுகள் ஏற்பட்டு விட்டன. இன்னும் பஞ்சாங்கங்கள் பணம் சேர்க்கும் சாதனமாகவே பயன்படுகிறது.

'சொன்னபடி நடந்தால் நினைவில் வைத்துக்கொள். நடக்காவிட்டால் மறந்து விடு' என்னும் தத்துவத்தின் மேலேயே ஜோதிடம் வளர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லஹிரி சமயச் சார்பான பண்டிகைகளின் நிர்ணயத்தைத் தக்க பண்டிதர்களைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

ப்ரொபஸர் வைத்யா மக்களால் மக்களுக்காக மக்களைக் கொண்டே நடைபெறும் நம் மக்கள் அரசாங்கமே இச் சீர்திருத்தத்தைச் செய்யவேண்டும் என்றார்.

பஞ்சாங்க சீர்திருத்தத்திற்கென்றே அரசாங்கம் இக் கமிட்டியை ஏற்படுத்தி இருக்கும்போது பஞ்சாங்கத்தைச் சீர்திருத்த வேண்டுமா — வேண்டாமா என்ற கேள்விக்கே இடமில்லை. இன்றுள்ள பஞ்சாங்கங்கள் பொருத்த மற்றவை. பருவ காலங்கள் பின் தங்கிச் செல்கின்றன; இப்பிற்போக்கை நிறுத்துவது மிகவும் அவசியம் என்றெல்லாம் டாக்டர் தப்த்தாரி வற்புறுத்தினர்.

அப்பால், பஞ்சாங்கக் குழு லௌகீகத் துறையில் பயன்பட ஒரு தேசிய ஸௌரமானப் பஞ்சாங்கத்தை அரசாங்கத்தார் ஆதரவில் தயாரிப்பதென்றும், அத்துடன் சாந்திரமான பஞ்சாங்கத்தை இணைவிப்பதென்றும் தீர்மானம் செய்தனர்.

26. அடுத்தபடி, இந்தியா உலகப் பஞ்சாங்கக் குழு (W.C.A.)-வினரின் திட்டத்தை ஆதரிக்கவேண்டுமா என்ற விஷயம் விவாதிக்கப்பட்டது.

டாக்டர் கோரக் ப்ரஸாத் ஆதரிப்பை எதித்தார். ஸ்ரீ கரந்திகார் இந்தியாவின் தேசிய பஞ்சாங்கத்தை உலகம் பின்பற்றட்டுமே என்று கூறினர்.

இதைப்பற்றிய விவாதம் ஒத்திப் போடப்பட்டது. கமிட்டியினர் க்ரிகோரி பஞ்சாங்கத்தை ஒப்புக்கொள்ளத் தயாரா யில்லை.

27. ஸாயனமும் நிரயனமும்.—365·2422 நாட்கள் கொண்டது ஸாயன வருடம். 365·2425 நாட்கள் கூடியது க்ரிகோரியன் வருடம். க்ரிகோரி அதிவருட (leap year) முறையால் 3300 ஆண்டுகளுக்கொரு முறை வருட நிறையில் ஒருநாள் வித்யாசம் ஏற்படும். நான் ஸாயன கணிதத்தையே ஆதரிக்கிறேன் எனத் தலைவர் கூறினர். அங்கத்தினர்களும் அவர் கூற்றை ஒப்புக்கொண்டு சீர்திருத்தப் பஞ்சாங்கத்தைச் ஸாயனமுறையிலேயே கணிப்பதென்று தீர்மானித்தனர்.

28. ஆண்டுத் துவக்கம்.—இன்றுள்ள பஞ்சாங்கங்களில் ஆண்டுத் துவக்கம் 23 நாட்களுக்குத் தள்ளிப்போகிறது. இக்குறையை நீக்கக் கமிட்டியின் சம்மதத்தைத் தலைவர் கோரினர்.

டாக்டர் கோரக்ப்ரஸாத் 23 நாட்களுக்கு முந்தி வருடங்களை ஆரம்பிப்பதைப் பொதுமக்கள் வன்மையாகக் கண்டிப்பார்கள் என்றும், தாம் இதை ஆதரிக்கவில்லை என்றும் கூறினர்.

டாக்டர் தப்த்தாரி 23 நாள் வித்யாசத்தை அப்படியே நிரந்தரமாக இருக்கும்படி விட்டுவிட்டு இனிமேலும் இவ்வித்யாசம் அதிகமாகாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்.

ஸ்ரீ கரந்திகார் வருடத்தின் அளவு உஷ்ணந்த (tropical)-மாய் இருக்கவேண்டுமென்றும், 23 நாட்கள் முன்னதாகவே மார்ச்சு 21-ம் தேதி வசந்த விஷுவத்தில் அரசாங்கம் தம் ஸௌர வருடத்தைத் துவக்க வேண்டுமென்றும், ஆனல் (சமயப) பஞ்சாங்கமான சாந்திரமான வருடம் சைத்ர வளர்பிறையில் ஆரம்பிக்கலாமென்றும் குறிப்பிட்டார்.

**29. வசந்தாயனமும் விஷிராயனமும்.**—வசந்தாயனம் மார்ச்சு 21-ம் தேதியும், விஷிராயனம் (Winter solstice) டிஸம்பர் 22-ம் தேதியும் ஆரம்பமாகின்றன. இவ்விரண்டில் எதை வருட ஆரம்பமாகக் கொள்வது என்று தலைவர் கேட்டார்.

டாக்டர் தப்த்தாரி விஷிராயனத்திலும் வருடங்களைத் துவக்கலாமென்றும், எனினும் எது நேர்ந்தாலும்; கமிட்டி மூன் கூட்டியே ஒப்புக்கொண்டுள்ளபடி, ஏழுநாள் கொண்ட வாரத்தை எந்தவகையிலும் மாற்றக்கூடாதென்றும் தெரிவித்தார். டாக்டர் கோரக் பிரஸாத், ப்ரொபஸர் வைத்யா, ஸ்ரீ லஹிரி—இவர்கள் வசந்த விஷுவ வருட ஆரம்பத்தை ஆதரித்தனர்.

கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :—

'இனி தேசியப் பஞ்சாங்கம் எனப் பெயர் பெறும் விஞ்ஞான முறை லௌகிகஸௌரமானப் பஞ்சாங்கம் தேதிகளைக் குறிப்பிட வசந்த விஷுவத்தின் மறுநாளான மார்ச்சு 22-ம் தேதி வருடங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும், சமயத் துறை ஸௌரமானப் பஞ்சாங்கம் வழங்கிவரும் பகுதிகளில், இன்னும் சிறிது காலத்திற்கு (பரம்பரைப் பழக்கத்திற்காக விட்டுக்கொடுக்கும் வகையில்) ஏப்ரல் 13–14 தேதிகளில் துவங்கும் ஆண்டுகளைக் கையாளலாமென்றும் இக்கமிட்டி இந்திய அரசாங்கத்திற்குச் சிபார்ஸு செய்கிறது.'

டாக்டர் கோரக் ப்ரஸாதைத் தவிர மற்றுள்ள எல்லா அங்கத்தினர்களும் இத்தீர்மானத்தை ஆதரித்தனர்.

லௌகிக வைதிகத் துறைகள் இரண்டிற்கும் வருடங்கள் ஒரே நாளில் துவங்க வேண்டுமென்றும், இரண்டு வகையான ஸௌர வருடங்களால் பயனில்லாததோடு, குழப்பமே ஏற்படுமென்றும் டாக்டர் கோரக் ப்ரஸாத் குறிப்பிட்டார்.

**30. மாத அளவை.**—ஸ்ரீ காந்திகார் க்ரந்தி மண்டலத்தில் சூரியன் 30 பாகைகளைக் கடக்கும் காலத்தையே மாதமாகக் கணிக்கவேண்டும் என்றார். அப்படிச் செய்வதால் 29 முதல் 32 நாட்கள் வரை மாதங்களின் அளவு மாறுபடுமென்றும், அதனால் பல இடைஞ்சல்கள் ஏற்படுமென்றும் தலைவர் குறிப்பிட்டார்.

ஐந்து ஸௌர மாதங்கள் 31 நாட்களுடனும், 7 மாதங்கள் 30 நாட்களுடனும் இருக்குமென்றும், அதி வருட (leap year) 30, 31 நாள் மாதங்கள் ஆறு ஆறுகுமென்றும் கமிட்டி தீர்மானித்தது.

**31. ஸகாப்தம்.**—வானறிஞர்கள் விக்ரம ஸகாப்தத்தை என்றும் உபயோகித்ததில்லை எனவும், தனித்தனி ராஜ்யங்களில் விக்ரம ஸாம்வத் ஆரம்பம் வேறுவேறு வகையில் தரப்பட்டுள்ளதெனவும், எல்லாக் கணிதங்களிலும் இந்திய வான நூலோர் ஸாலிவாகன சகத்தையே உபயோகித்துள்ளனர் எனவும் தலைவர் குறிப்பிட்டார்.

டாக்டர் தப்த்தாரி ஸித்தாந்தங்களில் கலியுக ஸகாப்தமே வழக்கத்திலிருந்ததை எடுத்துக் காட்டினார். ஸ்ரீ காந்திகார் கலி அல்லது கல்பாப்தத்தை உபயோகிக்கலாமென அபிப்பிராயப்பட்டார். இந்தியச் சீர்திருத்தப் பஞ்சாங்கத்தில் நிகழும் ஸாலிவாஹன ஸகாப்தத்தையே அனுசரிக்க வேண்டுமெனக் கமிட்டி தீர்மானித்தது.

**32. நாட் கணக்கு.**—நாள் கணிதத்தில் இரு கொள்கைகள் உண்டு ; (அ) நடுநிசி முதல் நடு நிசிக் கணிப்பு (ஆ) உதயம் முதல் உதயம் வரைக் கணிப்பு. தலைவர் பின்வரும் காரணங்களுக்காக நடுநிசிக் கணிப்பை ஆதரித்தார் :—

(1) இந்தியப் பண்டைய வான நூலோர் உட்பட இன்றுள்ள உலக வானறிஞர்கள் யாவரும் இதை உபயோகிக்கின்றனர்.

(2) இது ஸர்வ தேசப் பொது முறையாகும்.

(3) இம்முறையில் அட்சாம்ஸக் குழப்பங்கள் இல்லை.

அட்சாம்ஸ ரேகாம்ஸ மாறுபாடுகள் இருப்பினும் உதயோதயமாக நாட்களைக் கணிப்பதே சரியென்று டாக்டர் தப்த்தாரி, ஸ்ரீ காந்திகார், ப்ரொபஸர் வைத்யா, டாக்டர் கோரக் ப்ரஸாத்—இவர்கள் அபிப்ராயப்பட்டனர். ஸ்ரீ லஹிரி நிசியாதி அந்தத்தையே ஆதரித்தார்.

தேதி நிர்ணயத்திற்காக மட்டும் அகில இந்திய மத்ய ஸ்தலத்திற்குக் கணிக்கப்பட்ட நிசியாதி அந்த நாட்களைக் கணிப்பதென்றும், ஆனால், சமயாதி விவகாரங்களில் மேற்கண்ட மத்ய ஸ்தலத்திற்குக் கணிக்கப்பட்ட உதயாதி அந்த நாட்களை உபயோகிக்கலாமென்றும் ; அந்தந்த ஊர்களுக்கான வேறுபடும் சூர்யோதயங்களைக் குறிக்க ஒரு அட்டவணையையும் சேர்க்கலாமென்றும் கமிட்டி முடிவு கட்டியது.

**33. அகில இந்திய மத்ய ஸ்தலம்.**—உலகக் கால நியதிக்கு (க்ரீன்விச் டைம்) ஐந்தரை மணி முந்தியே இந்தியக் கால நியதி, ஸர்வதேச சௌகரியத்திற்காக நிகழவேண்டும். எனவே, கமிட்டி அகில இந்திய வானுராய்ச்சி மத்ய ஸ்தலத்தைப் பற்றி ஆலோசித்தது.

ப்ரொபஸர் வைத்யாவும், ஸ்ரீ காந்திகாரும் தேசப்படங்களைப் பிரித்து வைத்தனர். வரலாற்று முறையில் உஜ்ஜயினியையும், பூகோள முறையில் ஜப்பல்பூரையும் கொள்ளலாமென ப்ரொபஸர் வைத்யா கூறினார். டாக்டர் கோரக் ப்ரஸாதும், ஸ்ரீ காந்திகாரும் உஜ்ஜயினியை ஆதரித்தனர். ஸ்ரீ லஹிரி 22·5 வடக்கு அக்ஷாம்ஸத்தை சிபார்ஸு செய்தார். க்ரீன்விச்சுக்கு 82·5. கிழக்கு ரேகாம்ஸமும், உஜ்ஜயினிக்கு நேரான 23·11 வடக்கு அக்ஷாம்ஸமும் கூடிய இடத்தையே அகில இந்திய மத்ய ஸ்தலமாகக் கொள்வதென்று கமிட்டி தீர்மானித்தது.

**34. சாந்திரமானப் பஞ்சாங்கம்.**—சாந்திரமான மாதங்கள் அமாவாசையில் முடியவேண்டும் என்றும், சாந்திர வருடம் சித்திரை சுக்ல ப்ரதிபதத்தில் (வளர்பிறையில்) ஆரம்பிக்க வேண்டுமென்றும் கமிட்டி ஒப்புக்கொண்டது.

**35. சமயப் பஞ்சாங்கம்.**—க்ரந்தி மண்டலத்தின் முதற்கூறு வசந்த விஷுவத்திலிருந்து 23°—21' பாகைகள் தள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றும், இந்த அடிப்படையிலேயே கணிக்க வேண்டுமென்றும், இதுவே ஸௌகர்யமானதென்றும் டாக்டர் தப்த்தாரி கூறினர். ஸ்ரீ லஹிரி வங்காளத்தில் ராசி மண்டல முதற்கூறு 23°—12' பாகைகளே தள்ளி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

மேஷத்தின் முதற்கூறு வசந்த விஷுவத்திலிருந்து 23°—15' தள்ளி இருக்குமென்றும் இதற்கேற்பவே கணிக்க வேண்டுமென்றும் கமிட்டி முடிவு கட்டியது.

**36. மாதப் பெயர்கள்.**—இன்றுள்ளபடியே மாதப் பெயர்கள் சைத்ரம், வைசாகம் என்ற முறையில் நடைபெறவேண்டும் ; ஸௌர-சாந்திர மாதப் பெயர்களைச் சமயத்திற்கேற்ப இவற்றுடன் கூட்டிக் கூறலாம்.

இந்திய தேசியப் பஞ்சாங்கத்தில் மாதப்பெயர்களைப் பற்றிய விவகாரம் அடுத்த கூட்டத்திற்கு ஒத்திப்போடப்பட்டது.

**37. திதி.**—இந்திய முறையிலான திதி கணிதத்தில் 6 மணிநேரம் வித்யாசம் ஏற்படுவதால் இந்தியா முழுமைக்கும் ஒரே திதி முறையை உண்டாக்க வேண்டுமென்று தலைவர் கூறினார். இடத்திற்கு இடம் மாறும் சூர்யோதய அடிப்படையில் திதிகள் கணிக்கப்படுவதால் இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு திதி முறை சாத்யமல்ல என ஸ்ரீ காந்திகார் ஆக்ஷேபித்தார்.

இந்திய தேசியப் பஞ்சாங்கத்தில் அகில இந்திய மத்ய ஸ்தலத்திற்குக் கணிக்கப்பட்ட திதிகள் மணி நிமிடங்களில் கொடுக்கப்படவேண்டும் என்று கமிட்டி தீர்மானித்தது.

**38. நட்சத்திரங்கள்.**—நட்சத்திரங்கள் குறிக்கப்படாத இந்தியப் பஞ்சாங்கத்தைத் தலைவர் ஆதரித்தார். டாக்டர் தப்த்தாரி நட்சத்திரங்களைக் குறிப்பிடவேண்டுமென்றும், அஸ்வினிமேஷ முதற்கூற்றில் ஆரம்பமாக வேண்டுமென்றும் அபிப்ராயப்

பட்டார். மேஷ முதற் பாகையை அஸ்வினியாகக் கொண்டு நட்சத்திரங்கள் குறிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

39. **பொர்ஸ்கள்.** தலைவாசல் ப்ரேரேபிக்கப்பட்டுக் கமிட்டியால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்:—

(1) தேதிகள், நாடகள், மாதங்கள், திதிகள், நட்சத்திரங்கள்—இற்றை முன் கூட்டியே குறிப்பிடும் 5 வருடங்களுக்குத் தற்காலிகமான ஒரு தேசியப் பஞ்சாங்கத்தை அமைப்பது.

அதிவருடங்கள், அதிமாதங்கள்—இவற்றால் ஏற்படும் சாதக பாதகங்களை அறிய 5 வருடங்களாவது அவசியம்.)

(2) சூரிய, சந்திர, க்ரஹ நிலைகளைக் குறிக்கும் கோள் நிலைப் பஞ்சாங்கத்தை (Ephemeris) வெளியிட அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

(3) தக்க இடத்தில் தற்கால ஆராய்ச்சி சாதனங்களைக் கொண்ட வான நிலையமொன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

### 1953-ம் ஆண்டு பிப்ரவரி மீ 23௨ கூட்டம்

கீழ்க்கண்டவர்கள் வந்திருந்தனர்:—

| | |
|---|---|
| ப்ரொபஸர் M. N. ஸாகா | தலைவர். |
| டாக்டர் K. L தப்த்தாரி | அங்கத்தினர். |
| ஸ்ரீ J. S. காந்திகார் | ,, |
| ஸ்ரீ N. C. லஹிரி | ,, |
| ப்ரொபஸர் R. V. வைத்யா | ,, |
| ஸ்ரீ K. G. இருஷ்ணமூர்த்தி | துணைச் செயலாளர். (C.S.I.R.) |

சனிக்கிழமைக் கூட்ட நிகழ்ச்சிகளைப் பரிசீலனை செய்தனர்.

### டாக்டர் தப்த்தாரியின் மறுப்புக் குறிப்பு

புதுடெல்லி,
13-9-1954.

கமிட்டி அறிக்கையின் மேல் டாக்டர் தப்த்தாரி அனுப்பியுள்ள மறுப்புக் (dissenting) குறிப்பு.

கமிட்டியின் முடிவான அறிக்கையைக் கீழ்க்கண்ட ஒரு விஷயத்தில் தவிர நான் முழுமையாக ஒப்புக்கொள்ளுகிறேன். பண்டிகைகளின் நிர்ணயத்தில் நிலைத்த (நிரயன) நக்ஷத்திரங்களையே உபயோகிக்க வேண்டுமென்பது தர்ம சாஸ்திரங்களின் முடிவாக கருதப்படினும் அயனும்ஸம் கூடிய, இப்போதுள்ள சித்திரை விஷுவத்திலிருந்து 23 பாகை 15 கலை தள்ளிய வருடாரம்பப்படி அலைத்த (ஸாயன) நக்ஷத்திரங்களையே நாம் கையாள வேண்டும் அல்லது தர்ம சாஸ்திரங்கள் இம்முறையையே ஒப்புவதாகக் கொள்ளவேண்டும். இதற்கான எனது காரணங்களை என் கடிதங்கள் மூலம் நான் கமிட்டித் தலைவருக்கு முன்னமேயே தெரிவித்துள்ளேன்.

K. L. தப்த்தாரி.

1954-ம் ஆண்டு டிசம்பர் மீ 10௨.

(இதன் சுருக்கம் நாலாவது அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.)

# அனுபந்தம் II

## இரண்டாம் கமிட்டிக் கூட்டம்

1954-ம் வருஷம் மார்ச்சு மீ 8வ காலை 10 மணிக்கு, புதுடெல்லியிலுள்ள விஞ்ஞான—கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் செயல் துறைக்கட்டிடத்தில் பஞ்சாங்கக் கமிட்டியின் 2-வது கூட்டம் கூடியது.

கீழ்க்கண்டவர்கள் வந்திருந்தனர் :—

| | |
|---|---|
| 1. ப்ரொபஸர் M. N. ஸாகா | தலைவர். |
| 2. டாக்டர் கோரக் பிரசாத் | அங்கத்தினர். |
| 3. ஸ்ரீ J. S. கரன்திகார் | ,, |
| 4. ப்ரொபஸர் R. V. வைத்யா | ,, |
| 5. ஸ்ரீ N. C. லஹிரி | ,, |

1. முந்தியே ஏற்பாடான வேறு அலுவலினால் ப்ரொபஸர் A. C. பானர்ஜி கூட்டத்திற்கு வர இயலவில்லை. வியாதியின் காரணமாக Dr. தத்தாரியும் வரவில்லை.

2. Dr. தத்தாரி ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அது தலைவரால் படிக்கப்பட்டது. அவர் கூறியபடி புதிய சீர் திருத்த பஞ்சாங்கத்தில் யோகங்களைக் குறிப்பிட வேண்டுமென்றும் கரணங்களை விட்டு விடலாம் என்றும் தீர்மானமானது. இருபத்து ஏழு யோகங்களுக்குப் பதில் சூரிய, சந்திர அக்ஷாம்ச கணிதங்களுக்கேற்ப வ்யதி பாதத்தையும் வைத் ருதியையும் மட்டுமே குறித்தால் போதுமென்று முடிவாகியது.

3. விவாதத்திற்குப் பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

(அ) இந்தியாவில் வழங்கி வரும் எல்லாப் பண்டிகைகளையும் அந்தந்த ராஜ்ஜியங்களுக்கேற்ப மற்ற பஞ்சாங்கங்களைப் போல குறிப்பிட வேண்டும்.

(ஆ) வருடம் வசந்தவிஷுவின் மறுநாள் ஆரம்பமாக வேண்டும்.

(இ) சித்திரையை முதல் மாதமாகக்கொண்டு மற்ற மாதங்கள் முறையே வைசாகம், ஜேஷ்டம் எனப் பெயர் பெறும். இத்துடன் மேஷ ரிஷபம் என்ற வகையில் லௌகிக மாதங்களை அழைக்கலாம். மேஷம் என்பது ஸௌரமான சித்திரையேயாகும்.

(ஈ) ஒவ்வொரு மாதத்திற்குமான நாட்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| சைத்திரம் .. .. | 30 (அதி வருடத்தில் 31 நாள்). |
| வைசாகம .. .. | 31 |
| ஜ்யேஷ்டா .. .. | 31 |
| ஆஷாடா .. .. | 31 |
| ஸ்ராவணம் .. .. | 31 |
| பாத்ரா .. .. | 31 |
| ஆஸ்வின .. .. | 30 |
| கார்த்திகா .. .. | 30 |
| அக்ரஹாயன .. .. | 30 |
| பௌஷா .. .. | 30 |
| மாகா .. .. | 30 |
| பால்குன .. .. | 30 |

அதி வருடங்கள் கிரிகோரியன் பஞ்சாங்கப்படியே கணக்கிடப் படும்.

(உ) வசந்த விஷுவ நாளின் மஹா விஷுவ சங்கராந்தியையும் பனி விஷுவத்தில் உத்திராந்தி சங்கராந்தியையும் தைப் பொங்கலன்று மகாசங்கராந்தியையும் ஆரம்பிக்கவேண்டும். வைசாக முதல் தேதியன்று வைசாகம் கொண்டாடப்பெறும்.

(ஊ) குரு சுக்ர உதயஸ்தமன தினங்கள் பஞ்சாங்கத்தில் குறிக்கப்படவேண்டும்.

(எ) சுக்கில கிருஷ்ண பக்ஷங்கள் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும். திதிகள் சுக்கில பக்ஷ 1–லிருந்து 15 வரையிலும் கிருஷ்ண பக்ஷ 1-லிருந்து 14 வரையிலும் பின் கிருஷ்ண பக்ஷம் 30 ஆகவும் காட்டப்பெறவேண்டும்.

(ஏ) சூரிய உதய அஸ்தமனங்கள் சூரிய பிம்பத்தின் மத்ய தரிசனத்திற்கு குவளையாவாயு நேரத்தைக் கழித்து காட்டப் பெற வேண்டும்.

(ஐ) சூரியன் ஒவ்வொரு நக்ஷத்திரத்தில் புகும் நாளும் குறிக்கப் பெறவேண்டும்.

4. நக்ஷத்திரங்களைக் கணிப்பதில் அயன சலனங்கள் எவ் விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன ? என்று டாக்டர் கோரக் பிரசாத் கேட்டார். ஒவ்வொரு வருஷமும் அயனாம்சத்தை மாற்ற வேண்டுவதற்கான குறிப்பிட்ட திட்ட மெதுவும் கடந்த கூட்டத்தில் காட்டப்படாததால் நிலையான அயனம்சம் 23° 15′ என்ற விகிதத்திலேயே கணிக்கப்பட்டதாகக் கூறப் பட்டது. இது விஞ்ஞானத் தத்துவத்திற்கு உகந்ததாயில்லை என்றும் வானவெளி நிகழ்ச்சிகளுக்கு விருத்துவமாக இருப்பதாகவும் கூறினர்.

5. குறிப்பிட்ட நக்ஷத்திர தினத்தன்று உதாரணமாக கிருத்திகையன்று சந்திரன் கிருத்திகா நக்ஷத்திரத்தருகில் காணப் படும். அதுபோல எல்லா நக்ஷத்திரங்களைக் கணிப்பதிலும் உண்மை நிகழ்ச்சிகளுக்குப் போதிய முக்கியத்வம் (நக்ஷத்திர நோக்கான மேஷாதிகளுள்பட) அளிக்கப்படவேண்டியதன் அவசியத்தை டாக்டர் கோரக் பிரசாத் வற்புறுத்தினர். இம் முறையே முற்றிலும் விஞ்ஞான பூர்வமானது, வேத காலம் முதல் பின்பற்றப்பட்டிருக்கிறது. இதை நாம் மாற்றமுடியாது என்றும் வலியுறுத்தினர். ஸ்ரீ கரந்திகார் இதை ஆதரிக்காததோடு ஒரு நிலையான அயனம்சத்தைப் பின்பற்றுவதன் அவசியத்தை வற்புறுத்தினர். நிலையான அயனம்சம் விஞ்ஞான விருத்தமானது என தலைவர் அபிப்பிராயப்பட்டார். இந்நிலையில் அயனம்சத்தில் ஏதாவது மாறுதல் கொண்டு வரப்பட்டால் இதுவரை கணிக்கப்பட்ட 4 வருஷப் பஞ்சாங்கமும் மறுபடி முழுவதையும் முதலிலிருந்தே திரும்ப கணிக்க நேருவதுடன் அதிக உழைப்பும் நேரமும் தேவைப்படும் என்று ஸ்ரீ லஹிரியும் ப்ரொபசர் வைத்யாவும் எடுத்துக்காட்டினர்கள். காணப்படும் வித்தியாசம் ஓரிரு நிமிஷங்களாயிருப்பின் திரும்பக்கணிப்பதில் செலவிடப்படும் உழைப்பு அவ்வளவு அதிகமல்ல என எல்லோருமே ஒத்துக்கொண்டனர்.

6. நக்ஷத்திரங்களும், நக்ஷத்திர நோக்கான மேஷாதிகளும் (பஞ்சாங்கம் கணிக்கப்படவேண்டிய 5 வருஷங்களின் மத்திய காலமான 21 மார்ச் 1956-ல்) வஸந்த அயனம்சத்தில் 23° 15 முன்னேறியிருந்த ஒரு குறிப்பிட்ட நிலையிலிருந்து கணிக்கப்பட

வேண்டும் என்றும், அயனகாலத்தில் ஏற்படக்கூடிய அயனும்சங்களின் அதிகரிப்பும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்றும் டாக்டர் கோரக் பிரசாத் எடுத்துக் காட்டினர்.

7. சூரிய சித்தாந்தம், மற்றுமுள்ள பல பழைய ஹிந்து சித்தாந்தங்களின்படி ஹிந்து கோளத்தின் zero point பற்றிய ஒரு குறிப்பைத் தயாரிக்கும்படி ப்ரொபசர் வைத்யாவைத் தலைவர் கேட்டுக் கொண்டார். அக் குறிப்பின் பரிசீலனைக்குப் பிறகு 6-வது பத்தியின் விஷயம் தலைவரால் தீர்மானிக்கப்படும். அது தவிர மற்ற கணிக்கப்பட்ட விஷயங்கள் சரியானவைகளாகக் கருதப்படலாம்

8. பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டியின் யாதாஸ்துக்குத் தலைவரால் தயாரிக்கப்பட்ட முன்னுரை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பொதுப்படையாக அங்கிகரிக்கப்பட்டது.

9. பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டி இந்திய சர்க்காருக்காக அதன் சார்பில் ஒரு இந்திய தினவர்த்தமான பஞ்சாங்கமும் மாலுமிகட்கு உபயோகமான பஞ்சாங்கமும் வெளியிடவேண்டிய தன் அவசியம் பற்றிய விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் சிபார்சு பற்றிய வேலைமுறைகள் தலைவரால் அங்கத்தினர்களுக்கு விளக்கப்பட்டது.

10. பாக்கி இருக்கும் வேலைகளுக்காக மற்றும் 6 மாத அவகாசம் பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டிக்குக் கொடுக்கவேண்டும். இதுபற்றி விஞ்ஞானக் கைத்தொழில் ஆராயச்சிக் குழுவின் தலைவர் அவர்களால் பிரேரேபிக்கப்படும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11. பல்வேறு பிரமுகர்களிடமிருந்தும் ஸ்தாபனங்களிடமிருந்தும் வந்த ஆலோசனைகள் படிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## 1954-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதியில் பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு அதன் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட யாதாஸ்து

புது டில்லியிலுள்ள விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் கட்டிடத்தில் 1954 மார்ச்சு 8-ல் கூடிய பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டியின் இரண்டாம் கூட்டத்தில் டாக்டர் கோரக் பிரசாத், நக்ஷத்திரங்களையும், நக்ஷத்திர சம்பந்தமான மேஷாதிகளையும் கணிப்பதில் மாறுபடக்கூடிக் அயனாம்சத்தை உபயோகிக்கவேண்டும் என்ற ஒரு பிரச்னையை எழுப்பினார். அது பற்றிய சிறு சர்ச்சைகளுக்குப் பிறகு ப்ரொபசர் வைத்யா அதுபற்றிய குறிப்பு தயாரிப்பார் என்றும், அதை அங்கத்தினர்களுக்கு அனுப்பி அபிப்பிராயம் அறிந்த பிறகு தலைவர் அது பற்றி முடிவு செய்வார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் கோரக் பிரசாத் பிறகு அது சம்பந்தப்பட்ட சில குறிப்பிட்ட திட்டங்களை அங்கத்தினர்களின் முன் சமர்ப்பித்தார். வசந்த அயனதினமான 1956 மார்ச்சு 21-ல் இருந்த 23° 15″ அயனாம்சமே நிலையானதாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் அதுவே தற்காலத்திய மற்ற இந்தியப் பஞ்சாங்கங்களுடன் ஒத்துப்போகுமென்றும் எடுத்துரைத்தார்.

ப்ரொபசர் வைத்யா தன்னுடைய குறிப்பைத் தயாரித்து அங்கத்தினர் முன் சமர்ப்பித்தார். இந்த ஆபீசில் தயாரிக்கப்பட்ட மற்றொரு குறிப்பும் அங்கத்தினர் முன் சமர்ப்பிக்கப்பட்டது. சூரிய சித்தாந்தப்படி மேஷாதிகளின் கணனம்தான் உண்மையிலேயே வசந்த அயனாம்சம் ஆகும் என்றும் வருஷத்தின் பருவ காலங்களும் சௌரமான சாந்திரமான மாதங்களும் மேஷாதிகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதாலும் இந்துக்களின் பஞ்சாங்க வருஷம்தான் சரியானதாய் இருக்க முடியும் என்றும் எந்தக் குறிப்பிட்ட காலத்திலும் சரியான அயனாம்சத்தை சூரிய சித்தாந்தத்தில் கூறியுள்ளபடி நக்ஷத்திர நிலைகளை ஆராயாமல் திட்டமான முடிவுக்கு வரமுடியாது என்றும் குறிப்புகளில் காணப்பட்டிருந்தது.

மத சம்பந்தமான பஞ்சாங்கத்திற்கு நிலையான 23° 15″ அயனாம்சத்தை உபயோகிப்பதே சிறந்தது என்ற முதல் கூட்டத்தின் முடிவைப் பின்பற்ற விரும்புவதாக டாக்டர் தப்த்தாரி, ஸ்ரீகரந்திகார் என்பவர்களிடமிருந்து அனுப்பிய சுற்றறிக்கைக்குப் பதில் கடிதங்கள் கிடைத்துவிட்டன. ஸ்ரீ லஹிரியையும், ப்ரொபசர் வைத்யாவையும்கூட இதுபற்றி நான் கலந்து ஆலோசித்துவிட்டேன்.

வசந்த அயனாம்சம் மாறுபட்ட அயனாம்சத்துடன் கணிக்க முடியாததாலும், மாறுபட்ட அயனாம்சத்தைப் பின்பற்றுவது தர்ம சாஸ்திர விரோதமாக பருவகால இயற்கையிலிருந்து மாறுபடுவதாலும், டாக்டர் கோரக் பிரசாதின் நக்ஷத்திர நோக்கமான மேஷாதிகள்கூட மாறுபடும் அயனாம்சத்தின் அடிப்படையில் கணிப்பது என்ற முன் முடிவே நிலையானது என்றும் கருதுகிறேன்.

நக்ஷத்திரங்களைக் கணிப்பதில் மாறுபடும் அயனாம்ச அடிப்படையைப் பின்பற்றுவதே நல்லது. இல்லாவிட்டால் நக்ஷத்திரங்கள் அவற்றில் அடங்கியுள்ள நக்ஷத்திர, நக்ஷத்திர மண்டலங்களின் தொடர்பற்று விடும் நிலை ஏற்படும். இவ் விஷயத்தில் டாக்டர் கோரக் பிரசாத்தின் குறிப்பை 23° 15″ அயனாம்சம் 1956 மார்ச்சு 21-ந் தேதி என்ற 5 வருட காலத்தின் மத்திய தேதியைக் குறிக்கவேண்டும் என்ற கருத்தை ஒத்துக்கொள்கிறேன். அயனாம்சத்தின் பொருள்பற்றிய அபிப்பிராய பேதம் எதுவும் இன்றியே இது ஒத்துக்கொள்ளக்கூடிய விஷம்.

இதன் பலனாக எப்போதுமே நக்ஷத்திர நிலைகள் மேஷாதிகளுடன் ஒத்துவராமலிருக்கக்கூடும். ஆனால் கிரகங்களின் வக்கிர கதிகள் பற்றி நமது சாஸ்திரங்களில் போதிய ஆதாரமிருப்பதால் சாஸ்திர சம்மதமானதே ஆகும்.

மேற்கண்ட தீர்மானங்களின் தன்மைக்கிணங்க ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்தமான பஞ்சாங்கத்தைத் தேவையானபடி சீர்திருத்தி அமைத்துவிடலாம்.

———

# அனுபந்தம் III

## மூன்றுவது கூட்ட நடவடிக்கைகள்

புதுடில்லி விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் கட்டிடத்தில் 1954 செப்டம்பர் 13-ல் காலை 10 மணிக்கு பஞ்சாங்கச் சீர்த்திருத்தக் கமிட்டி மூன்றும் முறை கூடியது. பின் வரும் அங்கத்தினர்கள் பிரசன்னமாயிருந்தனர் :—

| | |
|---|---|
| 1. ப்ரொபசர் M. N. ஸாகா | தலைவர். |
| 2. ஸ்ரீ J. S. கரந்திகர் | அங்கத்தினர். |
| 3. ப்ரொபசர் A. C. பானர்ஜி | ,, |
| 4. டாக்டர் கோரக் பிரசாத் | ,, |
| 5. ப்ரொபசர் R. V. வைத்யா | ,, |
| 6. ஸ்ரீ N. B. லஹிரி | ,, |

டாக்டர் கோரக் பிரசாதுக்கும் ஸ்ரீ கரந்திகருக்கும் எழுதியிருந்த கடிதங்களில் டாக்டர் தப்த்தாரி தன் உடல் நிலை காரணமாகக் கூட்டத்திற்கு வர இயலாமை பற்றித் தெரிவித்திருந்தார்.

1. கடந்த கூட்டத்தின் நிகழ்ச்சிகள் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

2. யாதாஸ்தின் முன்னுரை, கடைசி சிபார்சுகள், ஐந்து வருஷங்களுக்குத் தயாரிக்கப்பட்ட பரீட்சார்த்தப் பஞ்சாங்கம் முதலியவை படிக்கப்பட்டன. எல்லா அங்கத்தினர்களின் பரிசிலனைக்கும் சிறு சிறு திருத்தங்களுக்கும் பிறகு அங்கீகரிக்கப்பட்டன.

3. கடைசியாகத் தயார் செய்யப்பட்ட யாதாஸ்தில் வந்திருந்த அங்கத்தினர் கையொப்பமிட்டனர்.

4. பொதுஜன அபிப்பிராயத்தைக் கிரகிப்பதற்காக முதல் இரண்டு பாகங்களை உடனே அச்சிட்டு வினியோகிக்கவேண்டும். மூன்றும் பாகத்தையும் கமிட்டி அங்கத்தினர்களின் அங்கீகாரம் பெற்ற பிறகு அச்சிட்டு வினியோகிக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

5. ஹெர்ஸ்ட்மான் ஸெக்ஸிலுள்ள (இங்கிலாந்து) மாலுமிகளுக்கான ஆல்மனக் (Almanac) காரியாலயத்துக்குத் தனது விஜயம்பற்றிய தலைவரின் கடிதம் படிக்கப்பட்டது. லண்டனிலிருந்து ஹெர்ஸ்ட்மான் ஸெக்ஸுக்குச் சென்றுவர ஏற்பட்ட பிரயாணச் செலவை பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

6. இந்திய தின வர்த்தமான, மாலுமிகளுக்குரிய பஞ்சாங்க வெளியீடு ஒன்றை வெளியிடவேண்டு மென்று அரசாங்கத்தைத் தூண்ட வேண்டுமென்று தலைவரை அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டனர்.

7. அங்கத்தினர்களின் ஒத்துழைப்பையும் ஆர்வத்தையும் இச் சங்கத்தின் வேலையை உருவாக்குவதில் அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமத்தையும் தலைவர் மிகவும் பாராட்டினர்.

## அனுபந்தம் IV

### டாக்டர் K.L. தப்த்தாரி அவர்களின் மாறுபட்ட அபிப்பிராயத்துக்கான காரணங்களின் சுருக்கம்

சைத்திர, வைசாக மாதங்களில் பருவகாலங்களின் வேறு நாடுகளை நமது தர்ம சாஸ்திரத்தோடு பொருந்தும்படியான நிலையில் நீக்குவதே இப்பொழுது நம்முன்னுள்ள பிரச்னை ஆகும். நமது தர்ம சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ள சைத்ரம் வைசாகம், அஸ்வினி, பரணி போன்ற பதங்களுக்கு நாம் புதிய வியாக்யானங்களையோ, பொருள்களையோ தான் கொள்ளக்கூடும். இந்நிலை கொண்டு நோக்கும்போது நமது முதற்கூட்டத்திய தீர்மானங்கள் சரியானவையே. இப்பொழுது என் நிலைமையை விளக்குகிறேன்.

மாதங்களுக்கேற்ப பருவங்கள் இல்லாமல் மாறுபடும் நிலை ஏற்படாமல் இருக்க மாத அமைப்பும் பருவகாலங்களோடு பொருந்தும்படி இருக்கவேண்டும். அதாவது நக்ஷத்திர நோக்கான மாதங்களாக அமையாமல் பருவகாலத்தோடு இயைந்த மாதங்களாக அமைக்கப்படவேண்டும். ஆகையால் பஞ்சாங்கத்திற்குப் பருவ காலத்தோடு இயைந்த வருஷ அமைப்பைக் கொள்வதென்ற நமது தீர்மானம் முற்றிலும் சரியே. இந்த சித்தாந்தமும் அதன் உப பகுதிகளும் முற்றிலும் சரியானவை; ஒத்துக் கொள்ளப்படவேண்டியவை. ஆனால் இதன்படி சித்திரா பூர்ணிமையில் சித்திரை நக்ஷத்திரத்திற்கருகிலும், விசாக பூர்ணிமையில் விசாக நக்ஷத்திரத்திற்கு அருகிலும் சந்திரன் இருக்காது. அப்பொழுது நாம் அதற்கு 'சாயன சைத்ரம், சாயன வைசாகம்' என்ற பெயர் கொடுக்க நேரிடும். நமது தர்ம சாஸ்திரங்களின்படி சித்திரை, வைகாசி, அஸ்வினி, பரணி எனக் குறிப்பிடும் போது ஒவ்வொன்றும் 'சாயன' என்ற பதத்தைச் சேர்த்தே குறிக்கின்றன என்று நாம் கொள்ள வேண்டும். அயன சலனங்களைப் பற்றிக் கண்டறியாத காலத்திலேதான் நமது தர்ம சாஸ்திரங்கள் தோன்றின. முன் ஜாலருக்கு முன் எழுதப்பட்ட வான சாஸ்திர ஆராய்ச்சியாளருக்கு அயன சலனம் பற்றிய விஷயமே தெரியாது. அக்காலத்திய வான சாஸ்திர தர்ம சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் பருவகால வருஷமும், நக்ஷத்திரமான வருஷமும் ஒன்று என்றே நினைத்தனர். மத சம்பந்தமான கர்மானுஷ்டானங்களை நிறைவேற்ற வேண்டியிருந்ததால் அவர்கள் குறிப்பிட்ட சைத்ர, வைசாக, அஸ்வினி, பரணி போன்றவைகள் 'சாயன' என்னும் பதத்தை முன்னே கொண்டவைகளாகவே இருக்கவேண்டும். "ஸதபாத பிராமண" என்ற நூலிலுள்ள "ருதவ : ஸம்வத்ஸர : ருதுர்பி: ஸம்வத்ஸர : சக்ரோதி ஸ்தாதும்" ("ऋतवः संवत्सरः ऋतुभिहि संवत्सरः शक्रोति स्थातुम") பருவகாலங்களே வருஷம்; பருவங்களாலேயே வருஷம் கணிக்கப்படும் என்ற வாக்கியத்திலிருந்து நமது தர்ம சாஸ்திரமும் வேதங்களும் பருவகாலங்களை அடிப்படையாகக் கொண்ட வருஷத்தையே கருதுகின்றன என்பது தெளிவாகிறது. 'சாயன' என்ற அடைமொழியை மாதங்களின் முன்னும் நக்ஷத்திரங்களின் முன்னும் சேர்த்தால்தான் நாம் உண்மையிலேயே தர்ம சாஸ்திரப்படி நடந்தவர்களாவோம். 'சாயன' என்ற பதத்தை உபயோகிக்க விரும்பாவிட்டால், 'காள' என்ற இன்னும் அதிக பொருள் பொதிந்த பதத்தை உபயோகிக்கலாம். நமது பஞ்சாங்கத்தில் பருவகால வருஷ அமைப்பை ஏற்றுக்கொள்ளும் சித்தாந்தத்துக்கு அனுகுணமாக நாம் தர்ம சாஸ்திரத்திற்கு இந்த வியாக்யானத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இவ்விதம் பஞ்சாங்கத்தைத் திருத்தியமைப்பது தர்ம சாஸ்திரத்தோடு பொருந்தும் சைத்ரம், அஸ்வினி போன்றவைகள் 'ஸாயன' அடைமொழியோடு சேர்ந்துள்ளவைகளாகவே நாம் கொள்ளவேண்டும். இவ்விதம் குறிக்கப்பட்டிருப்பதை ஜனங்கள் காண்பர். தர்ம சாஸ்திரத்திலிருந்து மாறுபடாமல் என்றென்றும் இப் பஞ்சாங்கம் நிலைத்திருக்கமுடியும். பஞ்சாங்கத்தை மாறுபட்ட வழிகளில் திருத்த நினைத்தால் தர்ம சாஸ்திரங்களின் அமைப்பையே மாற்ற நேரிடும். நாம் அதற்குத் தகுதியான ஞானம் படைத்தவர்கள் அல்ல என்று ஜனங்கள் நினைப்பதால் நாம் அவ்விதம் செய்யமுடியாது. ஆனால் இந்தப் புதிய அடிப்படையான வியாக்யானத்தை மேற்குறித்தபடி கொடுக்கலாம்.

இப்பொழுது கல்கத்தா பஞ்சாங்க சோதனை பரீஷத்தால் எழுப்பப்பட்ட ஆட்சேபணையை எடுத்துக்கொள்வோம். அவற்றின் ஆட்சேபணைகளைப் பின்வரும் வாக்கியங்கள் விளக்குகின்றன: "நமது மத சம்பந்தமான விரதாதி விசேஷங்கள் இதுவரை நடந்து வந்திருக்கின்றன. அவற்றில் எவ்வித கஷ்டமும் இதுவரை ஏற்படவில்லை. அயன சலன மாறுபாடுகளால் இனியும் நமக்கு ஏதும் கஷ்டம் ஏற்படுமென்று தோன்றவில்லை. இதற்காக செயற்கை முறையில் இந்த வக்கிர கதியைத் தடுக்க காலண்டர் சீர்திருத்தக் கமிட்டியைப் (C.R.C.)-போல் ஏற்பாடுகள் செய்யப்படுமானால் அது நிச்சயமாக சாஸ்திர விரோதமாகவும், விஞ்ஞான முறைக்கு மாறுபட்டதாகவே இருக்கும்.

இது நம் பஞ்சாங்க முறையைப் பற்றிய அறியாமையையே வெளிப்படுத்துகிறது. வசந்த விஷுவம் பின்தள்ளிச் சென்றதைக்கண்ட நம் முன்னோர்கள் வருட ஆரம்பத்தை ஒரு நட்சத்திரத்திலிருந்து பின்னுள்ள மற்றொரு நட்சத்திரத்திலாக மாற்றிச் சென்றனர். உதாரணமாக அவர்கள் வருடாரம்பத்தை மிருகசிரத்திலிருந்து ரோகிணிக்கும், ரோகிணியிலிருந்து கிருத்திகைக்கும், கிருத்திகையிலிருந்து அவிட்டத்திற்கும், அவிட்டத்திலிருந்து திருவோணத்திற்கும், திருவோணத்திலிருந்து மறுபடியும் அஸ்வினிக்குமாக மாற்றினனர். இம்மாறுதல்களுக்குத் தக்கபடி தர்ம ஸாஸ்திரங்களிலும் மாறின; இன்றுபோல் அவை சலனமற்று நிலைத்து நிற்கவில்லை. நம் முன்னோர்கள் அவ்வப்போது தர்ம சாஸ்திரங்களைத் தக்கபடி திருத்தி அமைத்தனர். இதனால், அறிக்கைத்திட்டம் கூறுவதுபோல், சமயச்சார்பான விழாக்களைச் சரியான காலத்தில் அனுஷ்டிப்பதில் அவர்களுக்கு ஸ்ரமம் ஏற்படவில்லை; ஆனால், இன்றோ தர்ம ஸாஸ்திரங்கள் வளர்ச்சியின்றி நின்றுவிட்டதால் நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. உதாரணமாக வைகாசி சுத்த திருதியை அல்லது அக்ஷய திருதியையை எடுத்துக்கொள்வோம். இதில் குடிதண்ணீரைக் குளிர்விப்பதற்காக ஒரு அந்தணனுக்கு மண் சொப்பு ஒன்று தானம் செய்யவேண்டும். இப்போது அக்ஷய திருதியை வெப்பம் நிறைந்த வேனிற்காலத்தில் வருகிறது; எனவே பண்டிகையும், தானமும் சரியான பருவத்தில் நடைபெறுகின்றன; ஆனால் 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு வைகாசிச் சுத்தத் திருதியை மாரிக்காலத்தில் வரும். இந்தப் பண்டிகையை மாரிக்காலத்தில் செய்வது சரியா? அப்போது இப் பண்டிகையை சித்திரைத் திருதியையிலாவது கொண்டாட வேண்டி நேரும். இதிலிருந்து நாம் நட்சத்திரமான நிலை பெற்ற வருடத்தையே வைத்துக்கொள்ள வேண்டுமானால் தர்மஸாஸ்திரங்களை அடிக்கடி மாற்றவேண்டி வரும் என்பது தெளிவாகிறது. மறுத்துரைப்போர் இவ்வாறு செய்யத் தயாராயிருக்கிறார்களா? இல்லை; ஏனெனில் அவர்கள் பிடிவாதமாக எழுத்துக்கெழுத்து ஸாஸ்திரங்களைப் பின்பற்ற விரும்புகின்றனர். காலஞ்சென்ற எஸ். பி. தீக்ஷித் தமது புகழ்பெற்ற நூலில் அக்ஷய திருதியையைப்போல் பல உதாரணங்களைக் கொடுத்துள்ளார். (பக்கங்கள் 420 முதல் 423 வரை) எனினும், நாம் நம் பண்டிகைகளை இன்று எந்தப் பருவங்களில் கொண்டாடுகிறோமோ அதே பருவங்களில்தான

### டாக்டர் K. L. தப்த்தாரி அவர்களின் மாறுபட்ட அபிப்பிராயத்துக்கான காரணங்களின் சுருக்கம்—தொடர்ச்சி.

கொண்டாட விரும்புகிறோம். ஸாஸ்திரங்களும், மேலே காட்டியபடி, பருவ வட்டத்தையே வருடங்களாகக் கருதினர். பருவ வட்டமே வருடம் என்பதற்காகவே வருடாரம்பங்களை அவர்கள் பல முறை மாற்றினர் ; அவ்வப்போது அதிக மாத வருடங்களை அமைத்தனர். இன்றும், நாம் பருவங்களுக்கேற்ப வருடங்களை மாற்றும் பாங்கற்ற முறையையே பின்பற்றுவதா ? அல்லது, உண்மையான வானிலைச் சலனங்களுக்கேற்ப விஞ்ஞான ரீதியில் வருடங்களை நிச்சயிப்பதா ?

பருவங்களுக்குத் தக்கபடியே பண்டிகைகளைக் கொண்டாட வேண்டுமென்று ஸாஸ்திரங்களில் நிர்ப்பந்தம் கிடையாது என்று மேற்கூறிய முறை மறுக்கப்படுகிறது ; ஜன்மாஷ்டமியை மாரிப்பருவத்திலோ, மற்ற எந்தப் பருவத்திலோ வேண்டுமானாலும் கொண்டாடலாமென்று உதாரணமும் காட்டலாம். இது உண்மையல்ல. பகவான் கண்ணன் கார்காலத்தில்தான் பிறந்தார் ; வெள்ளம் பெருக்கெடுத் தோடியபோதுதான் யமுனையைக் கடந்தார் என்று நாம் நம்புகிறோம், கூதிர் காலத்தில் இப்பண்டிகையைக் கொண்டாட விரும்பமாட்டோம். ஸாஸ்திரங்களில் கண்ணபிரானது ஜன்ம தினத்தன்று ரோஹிணி நட்சத்திரம் வரவேண்டுமென்று கூறப்பட்டிருப்பினும், சாயன முறையில் சலனமுறும் ரோஹிணி நாளையே ஜன்மாஷ்டமிக்கு ஏற்ற நாளாக நாம் கொள்ள விரும்புவோம். அதேபோல் வைகாசி பூர்ணிமா, திருவோண பூர்ணிமா, மக பூர்ணிமா, ஸரஸ்வதி பூஜை முதலியவற்றை அதற்கு ஏற்ற பருவத்தில் சலன விசாகம், திருவோணம், மகம் முதலான நட்சத்திரங்களில் கொண்டாடவேண்டுகிறோம். ஸாயன முறையை, அல்லது சலநட்சத்திர நெறியைப் பின்பற்றுவதால், நட்சத்திரமான வருடம், சூர்யமான வருடம் என்று இருவகையான வருடமுறைகளை அவலம்பிக்கவேண்டிய அவசியமில்லை ; இவ்விரு முறைகளை பொதுமக்களிடையே குழப்பத்தையே உண்டுபண்ணும். தர்மசாஸ்திர நிர்ணயங்களிலும கஷ்டங்கள் ஏற்படும். எந்தப் பண்டிகையை எந்த முறைப்படி கொண்டாடவேண்டுமென்ற சச்சரவுகள் நேரும் ; பல்வேறு பண்டிதர்கள் பல்வேறு வகையாகக் கூறுவர். எனவே குழப்பந்தான் மிஞ்சும். இதற்கு மாறாக சாயன முறையில், சாயன மாதங்களில், சலநட்சத்திரங்களுக்கேற்பப் பண்டிகைகளை நிர்ணயிப்பதால் குழப்பங்கள் நீங்கித் தெளிவு ஏற்படும்.

பருவமுறை வருடங்களுக்கான அத்தாட்சிகள் ஆணித்தரமானவை. மறுத்துரைப்பவர்களே, "வேதாரம்ப காலத்தில் பண்டிகைகள் பருவங்களுக்கேற்பவே கொண்டாடப்பட்டன ; எனவே வேதசம்பந்தமான விரதங்களை அவைகளுக்கேற்ப பருவ மாதங்களிலேயே அனுஷ்டிக்கவேண்டும்."—என்று ஒப்புக்கொள்வதோடு அமையாது. பின்னும் "வேதகாலத்திற்கு அப்புறம் ஏற்பட்ட பண்டிகைகளை பருவமாதங்களிலேயே கொண்டாட வேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை" என்கின்றனர். இந்த மறுப்பை நாம் ஒப்புக்கொள்ள முடியாது ; இதற்காகவே தர்மஸாஸ்திரங்கள் பஞ்சாங்கத்தை நட்சத்திரமானமாக மாற்றியதென்பதற்கு ஆதாரமேயில்லை.

சித்திரை, வைகாசி என்னும் மாதப்பெயர்களே பருவ வருடங்களுக்குப்பதில் நட்சத்திர வருடங்களைத்தானே குறிக்கின்றன என்று வாதிக்கலாம். ஆனால், பருவ வரிசைகளுக்கேற்ப வருடாரம்பங்களை முன்னோர்கள் நட்ரத்திரத்துக்கு நட்சத்திரமாக மாற்றிச் சென்றதிலிருந்தே இவ்வாதம் அடிபட்டுப்போகிறது. எனவே, சித்திரை, வைகாசி என்ற பெயர்கள்கூட பருவமாதங்களைக் குறிக்கும் பெயர்களே என்று தெரிகிறது. இவ் விஷயத்தைப்பற்றி எடுத்துக்காட்டின்றி முடிவுகளைத் தெரிவிக்கும் தர்மசிந்து என்னும் புகழ்வாய்ந்த நூலிலிருந்து ஒரு அத்தாட்சியைக் காட்ட விரும்புகிறேன். தர்ம சிந்து கூறுகிறது.

मासद्वयद्वयातमको । वसन्तादि षट् सज्ञकश्चान्द्रः । मलयासितु किंचिदुननवति:संखौर्दिनैश्चान्द्र ऋतुः । श्रौटस्मात्तादौ चान्द्रर्तुं स्मरणम प्रव्रस्तम ।)

(மொழிபெயர்ப்பு).—சித்திரையிலிருந்து ஒவ்வொரு இரண்டு மாதங்களும் வசந்தத்திலிருந்து தொடங்குகிற சாந்திர பருவங்களைக் குறிக்கிறது. இடைச்செருகல் மாதங்கள் ஏற்படும்போது சாந்திர பருவங்கள் 90 நாட்களுக்குக் குறைவாகவே உள்ளன. எந்த விரதாதி விசேஷங்களிலும் சாந்திர பருவங்கள் ஸ்ருதி (श्रुति) அல்லது ஸ்மிருதி (स्मृति) என்பவற்றால் கற்பிக்கப்பட்டவை என்று குறிப்பிடுவதே தகுதியானது.

இதிலிருந்து சித்திரை என்ற பதமே வசந்தத்தைக் குறிக்கிறது என்பது தெளிவு. முதல் முதல் சைத்ராதி மாதங்கள் தோற்றுவிக்கப்பட்டபோது இயற்கையும் அப்படியேதான் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போது சித்திரை கோடையில் வருகிறது (கிரீஷ்ம ग्रीष्म). காலஞ்சென்ற S. B. தீக்ஷித் கூட கூறுகிறார் :

"சைத்ர வைசாக ஹே வஸந்தாசே மாஸ ஹோ பரிபாஷா ஸர்வகிரந்தாத் திஸீன் யேதே. தோஸ்தாபித் க்ஞால்யாவர் புஷ்கல் காலானேம் ருத்வாரம்ப மாகேம் ஆலா ம்ஹனூன் காம்ஹோம் கிரந்தாத் மீன மேஷ ஹேமாஸ ம்ஹணஜே பால்குன்–சைந்தரஹே மாஸ வஸத்தாவே ஆக்ஞோ பரிபாஷா ஆலோ வ தௌப்ரமாணீம் காம்ஹௌம் பஞ்சாங்கத ஹல்லௌ ருது விஹிதாத் ஸாம்ப்ரத மாக–பால்குனாந்த வசந்த ஹேதோதரே தேகோல் சைத்ர, வைசாக வசந்தருது ஹ்யா பரிபாஷேசே ப்ராவல்ய ஆஹீச்."

"चैत्र–वैशाख हे वसंताचे मास हो परिभाषा सर्व ग्रन्थात दिसून येते तो स्थापित ज्ञाल्यावर पुष्कल कालानेन ऋत्वारंभ मागें आला म्हणून कांहों ग्रन्थातं मीन मेष हे मास म्हणजें—फालगुन–चैत्र हे मास वसंतावे आज्ञो परिभाषा आलो व तौप्रमाणें कांहों पञ्चांगत हल्लो ऋतु लिहितात सांप्रत माघ-फाल्गुनांत वसन्त हेतो तरि देखेल चैत्र-वैशाक वसंत ऋतु ह्या परिभाषेचे प्रावल्य आहीच."

[மொழிபெயர்ப்பு].—சித்திரை, வைகாசி மாதங்கள் வசந்தத்தைக் குறிக்கின்றன என்பது எல்லா நூல்களிலும் காணக் கிடக்கிறது. அது நிலைபெற்ற நீண்ட காலத்திற்குப் பிறகு பருவ காலத்தோற்றம் பிற்பட்டுப் போயிற்று. அதனால் சில நூல்களில் மீனமும் மேஷமும் அதாவது பங்குனியும் சித்திரையும் வசந்த மாதங்களாகவும் சில பஞ்சாங்கங்களில் அவ்விதமே எழுதப்பட்டுள்ளதையும் காண்கிறோம். தற்சமயம் வசந்தம் மாசி, பங்குனி மாதங்களில் வருகிறது. அப்படியிருந்தும் சித்திரை, வைகாசி வசந்தத்தைக் குறிப்பதாகவே இருந்து வருகிறது.

சைத்ரம், வைசாகம் என்ற பெயர்கள் உபயோகப்படுத்தப்பட்ட பொழுது அவை ஒரு குறிப்பிட்ட பருவத்தைக் குறித்தன என்பதும் அப்பருவங்களும் மாறிக்கொண்டே இருந்தன என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. சித்திரையும் வைகாசியும் கிரீஷ்மத் (கோடைகாலம்) தையே இனி குறிக்கும் என்று நமது கமிட்டியின் முதல் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மறுப்பவர்களின் குறிப்பு பருவகாலமோ பருவகால மாதங்களோ குறிப்பிடப்படவில்லை என்று கூறுகிறது. அதற்கு எனது பதில் வருமாறு :

குறிப்பிட்ட விசேஷங்களைக் குறிக்கும்போது தர்ம சாஸ்திரத்தில் பருவகால, பருவகால மாதங்கள் பற்றிய குறிப்பு இல்லாமலிருக்கலாம். ஆனால் சித்திரை, வைகாசி என்ற பெயர்கள் அவசியம் இருக்கின்றன. அவை மேற்கண்டபடி குறிப்பிட்ட பருவத்தையே குறிக்கின்றன. தர்மசாஸ்திரத்திலுள்ள பங்குனி, சித்திரை மாதங்கள் எப்போதும் வசந்த காலத்தையும் வைகாசி கோடைகாலத்தையுமே குறிப்பிடுகிறது. இந்த வியாக்யானத்தைத்தான் இந்தப் பெயர்களுக்கு நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்பெயர்களால் அவர்கள் குறிப்பிட்ட பருவங்களைக் கருதினார்கள். சைத்ரம் என்பதை சாயன சைத்ரம் என்றும் வைசாகம் என்பதை சாயன வைசாகம் என்றும் நாம் கொண்டால்தான் இப்பெயர்களின் உண்மையான பொருளைக் கருதமுடியும்.

**டாக்டர் K.L. தப்த்தாரி அவர்களின் மாறுபட்ட அபிப்பிராயத்துக்கான காரணங்களின் சுருக்கம்—தொடர்ச்சி.**

சில விசேஷங்களுக்கு[illegible]வகால வருஷங்களையும், மற்றும் சிலவற்றிற்கு நக்ஷத்திர நோக்கான வருஷங்களையும் பின்பற்றுவதென்பது மிகவும் குழப்பமுண்டாக்கக் கூடியது என்று முன்னமே எடுத்துக் கூறியுள்ளேன். சைத்ரம், வைசாகம் என்ற பெயர்கள் குறித்த பருவங்களைக் குறிப்பதாகவே கொண்டு பருவகால வருஷ மாதங்களையே எல்லா விசேஷங்களுக்குமே பின்பற்றுவது நல்லது.

எதிர்ப்புக் குறிப்பு விஞ்ஞானத்தை ஒட்டிய முடிவையும், இந்திய சம்பிரதாயம், அகராதிகளை அடிப்படையாகக் கொண்டது. நம்முடைய பெயர்கள் உண்மையிலேயே சாயன சித்திரை, சாயன வைகாசி, சாயன அல்லது காள அஸ்வினி, சாயன அல்லது காள பரணி என்றும் இப்பெயர்கள் தர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ள அஸ்வினி, பரணி, சித்திரை எவற்றைக் குறிப்பிடுகின்றனவோ அவற்றையே குறிக்குமென்றும் நாம் விளக்கிவிட்டால் இந்த அடிப்படை தானாகவே மறைந்துவிடும்.

கண்மூடித்தனமாக வேத சாஸ்திரங்களை அப்படியே பின்பற்றும் தன்மையுள்ளது நமது நாடு. எப்பொழுதாவது எதாவது சீர்திருத்தம் பற்றிய பேச்சு எழுந்தால் அம்மாதிரி எதனாலாவது ஏதோ முழுகிவிடுவதாகவும், ஆபத்து வந்துவிடும் என்று நினைத்து ஜனங்கள் கண்மூடித்தனமாக அத்தகைய முன்னேற்றத்தை எதிர்ப்பார்கள். முன்னேற்றம் காண விரும்பினால் விரும்புபவன் திட சித்தமுள்ளவனாகவும் அத்தகைய எதிர்ப்புகளுக்குப் பின்வாங்காதவனாகவும் இருக்க வேண்டும். எதிர்ப்புக் குறிப்பில் கையெழுத்திட்டுள்ளவர்கள் எத்தகைய முன்னேற்றத்தையுமே எதிர்ப்பவர்கள். இப்பொழுது இப்பஞ்சாங்க கணித முன்னேற்றத்தை எதிர்த்து இதில் வெற்றி பெற்றுவிட்டால் பின்னர் தர்மசாஸ்திரத்தில் அவசியமான மாறுதலைக்கூட எதிர்ப்பர். அப்படிப்பட்ட ஜனங்களைப் பற்றி நாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனாலும் அதே சமயத்தில் ஜனங்களின் உணர்ச்சியைப் புண்படுத்தும் வகையில் திடீர் மாறுதலையும் செய்யவேண்டியதில்லை. அதனால்தான் சில உத்சாகமுள்ள சீர்திருத்தவாதிகளின் 0° அயனாம்சக் கொள்கையை ஒப்புக்கொள்ளாமல் 25° 15″ அயனாம்சத்தை வைத்துக்கொள்வதென்று தீர்மானித்துள்ளோம். ஸ்ரீயஸ்வந்த் பிரதான், கிருஷ்ணராம் வல்கிபட், தத்தாத்ரேய கேஷியூல் ஆகியவர்கள் 0° அயனாம்சம் பின்பற்றப்பட வேண்டும் என்ற குறிப்பு அனுப்பியுள்ளார்கள்.

முடிவாக நாம் தர்மசாஸ்திரத்தில் கண்டுள்ள சரியான பொருளைத் தரக்கூடியதான வியாக்யானங்களுக்கு ஏற்றபடியே மாறுதல்களைப் பஞ்சாங்கத்தில் செய்துகொள்ளலாம் என்றும் தர்மசாஸ்திரத்தில் எம்மாறுதலையும் புகுத்துவதில்லை என்ற தீர்மானம் செய்ததும் முற்றிலும் சரியானதே என்றும் கூறுகிறேன். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தத் தீர்மானம் முற்றிலும் பின்பற்றப்படவில்லை. பஞ்சாங்கத்திற்கு நிர் அயன நக்ஷத்திரங்களே ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பலனாக தர்ம சாஸ்திரத்தில் மாறுதல் அவசியம் ஏற்படும். ஆதலால் நான் இப்பொழுது என்னுடைய ஆக்ஷேபக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள மாற்று முறையைச் சிபார்சு செய்கிறேன்.

# விவரணம்.

I. **ஐந்தாண்டுகளுக்கான பஞ்சாங்கம்;**—சீர்திருத்தப்பட்ட இந்திய பஞ்சாங்கத்தில் பின்வரும் விஷயங்கள் சேர்க்கப் பட்டிருக்கும் :—

(1) திருத்திய இந்திய பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு மாதத்திலும் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டபடி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நாட்களே இருக்கும். வருடம் சித்திரையில் தொடங்கி பங்குனியில் முடிவடையும்.

(2) வார நாட்கள்.

(3) சரியான கிறிஸ்தவ சகாப்த வருஷமும் மாதமும் தேதியுடன்.

(4) பூமியை மையமாகக் கொண்ட, வசந்தத் துவக்க நிலேயிலுள்ள தீர்க்காம்சம் 0° கிரீன்விச் நடுநிசி 0° U. T.–க்குச் சமமான காலே 5-30 இந்திய ஸ்டாண்டர்டு மணி என்று கொடுக்கப்பட்டுள்ளது.

(5) மத்திய நிலேயத்திற்கேற்ப கணிக்கப்பட்ட சூரிய உதய அஸ்தமன நேரம், அதாவது இந்திய ஸ்டாண்டர்டு மணியில் கண்டுள்ளபடி 23° 11° வடக்கு அக்ஷாம்சமும் 82° 30′ கிழக்குத் தீர்க்காம்சமும். வக்கிரிப்புக்குத் தக்கபடி இந்தியாவின் அடி வானம் 30° என்று கொண்டு அடிவானத்தில் சூரியனின் மையப்பகுதி தோன்றும், மறையும் நேரம்.

(6) வரிசைக் கிரமமாக திதிகளும் அவை முடியும் காலமும். சுக்கில பக்ஷ பிரதமையிலிருந்து பௌர்ணமி முடிய, கிருஷ்ணபக்ஷ பிரதமையிலிருந்து அமாவாசை முடிய 15+15 = 30 திதிகளும். முடியும் நேரம் இந்திய ஸ்டாண்டர்டு மணிப்படி கொடுக்கப்பட்டிருக்கும். மத்திய நிலேயத்தில் சூரியோதய நேரத்தில் என்ன திதியோ அதுவும் கொடுக்கப் பட்ட தேதிக்கு நேரே குறிக்கப்பட்டிருக்கும். மறு சூரியோ தயத்துக்கும் இரண்டாம் திதியும் முடியும் பக்ஷத்தில் விவரம் முதல் திதியின் பக்கத்திலேயே அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட்டிருக்கும். சந்திரனின் தீர்க்காம்சம் சூரியனின் தீர்க்காம்சத்திற்குச் சரியாக 12° அல்லது அதன் மடங்கை அடையும் நேரம் திதி முடிவடையும் நேரம் ஆகும். இதற்காகவே சூரிய சந்திரர்களின் தீர்க்காம்சங்கள் மானுமி களின் பஞ்சாங்கத்தோடு ஒத்திருக்கும்படி எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

(7) நக்ஷத்திரங்கள்—எண்ணிக்கை, பெயர், முடியும் நேரம். நேரங்களேக் குறிக்கும்போது திதிகளேப்போன்ற முறையே பின்பற்றப்பட்டிருக்கிறது. அஸ்வினி முதல் ரேவதி முடிய 27 நக்ஷத்திரங்களாகக் கணிக்கப்பட்டுள்ளன. 1956-ஆம் மார்ச்சுமீ 212 வசந்த அயனும்சத்தில் 23° 15′–லிருந்து தொடங்கி 13° 20′ தூரம் பிரயாணம் செய்ய சந்திரன் எடுத்துக் கொள்ளும் நேரமே ஒரு நக்ஷத்திரத்திற்கான காலம் ஆகும். வசந்த அயனும்சத்திலிருந்து நக்ஷத்திர முறையில் குறிப்பிட்ட இடம் வரை அயனும்சம் ; அதாவது மாதத் துவக்கத் துக்கான நேரமாக ஒவ்வொரு பக்கத்தின் தலேப்பிலும் குறிக்கப் பட்டிருக்கும்.

(8) சௌரமான மாதங்களான சௌர வைசாகம்-போன்றவைகள், மேஷாதி, விருஷபாதி எனக் குறிக்கப்பட் டுள்ளன.

(9) சாந்திரமான மாதங்கள் அமாவாசைக்கு அமாவாசை கணக்கிடப்படுவதால் அமாவாசையோடு முடிகின்றன. முக்கியமான அமாவாசை வருகின்ற சௌரமான மாதங்களின் பெயர்கள் அவற்றிற்குக் கொடுக்கப்படும்.

(10) சூரியனின் பெயர்ச்சி—சூரியனின் அயனும்சங்கள் 23° 15′, 53° 15′....என ஒவ்வொரு 30°-வது பாகை வில்லே யும் கடக்கும்போது மேஷ, விருஷபங்கள் முடிந்து அடுத்த ராசி தொடங்குகிறது. நக்ஷத்திரங்களின் கதியில் சூரியன் பிரவேசிப்பது சந்திரனுக்குக் கணிக்கப்படுவது போன்றே மாறு பட்ட அயனும்ச முறையைப் பின்பற்றிக் கணிக்கப்படுகிறது. ஒவ்வொரு 30° அயனும்சம் சூரியன் பெயர்ச்சி அடைந்ததும் அவை மேஷ ராசி, விருஷப ராசி எனக் குறிக்கப்பட்டுள்ளன.

(11) அமாவாசை, பௌர்ணமி, வியதீபாதம் (சூரிய சந்திரர் களின் ஸாயன தீர்க்காம்சங்கள் 180° ஆனல்), வைதிருதி (தீர்க்காம்சங்கள் 360°), கிரகணங்கள், சூரியனுக்கடுத்த குரு, சுக்கிரர்களின் உதய அஸ்தமன நேரமும் சேர்க்கப்பட்டிருக்கும்.

(12) உற்சவாதிகள்—இந்தப் பஞ்சாங்க கணிதத் தத்துவத் திற்கேற்ப நடைமுறையில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் எல்லா ராஜ்யங்களேயும் சேர்ந்த எல்லா முக்கிய உற்சவாதிகளும் கொடுக்கப்படும். பல்வேறு ராஜ்யங்களிலும் உற்சவாதிகள் நடத்தப்பெறும் வழி முறைகளே இவை சம்பந்தப்பட்டவரை பின்பற்றப்படுகின்றன.

குறிப்பு.—முதலில் கொடுக்கப்பட்டுள்ள மாதத்தின் பெயர் கமிட்டியினல் சிபார்சு செய்யப்பட்டது. மற்ற பெயர்கள் இந்தியாவில் பல்வேறு பாகங்களில் நடைமுறையிலுள்ளவைக ளாகவும், முன் காலத்திலிருந்தவைகளுமாக மாறுபட்டிருக்கும்.

II. **மத சம்பந்தப்பட்ட உற்சவங்களுக்கான பொது விதிகள்.**—சாந்திர சௌரமான, சௌரமான பஞ்சாங்கங்களின் அடிப் படையில் தேதிகள் குறித்துள்ளதற்கான பொது விதிகள் அனு பந்தமாக சேர்க்கப்பட்டுள்ளன. நடைமுறையில் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு ஒத்துப்போக முயற்சிகள் செய்யப் பட்டுள்ளன.

III. **விடுமுறை நாட்கள்.**—இந்திய அரசாங்கம், மற்றும் ராஜ்யங்களுக்கான கி.பி. 1954–55 முதல் கி.பி. 1958–59 முடிய 5 வருஷங்களுக்கு சீர்திருத்திய பஞ்சாங்க அடிப்படையில் விடுமுறை நாட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## விரதாதி விசேஷங்களுக்கான பொது விதிகள்.

இப்பஞ்சாங்கத்தில் விரதாதி விசேஷங்களின் தேதிகள், நேரங்கள் முதலியவற்றின் நிர்ணயங்களில் குறிப்பாக பின்பற்றப்பட்டுள்ள பொது விதிகள் அனுபந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. நடைமுறையில் கூடிய வரையில் பல்வேறு ராஜ்யங்களின் அனுஷ்டானத்திற்கும் ஒத்துப் போகும்படியான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்விஷயத்தில் ஸ்ரீ ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையின் "இந்திய தின வர்த்தமானம்" என்ற பிரபலமான புத்தகம் மிகுந்த உதவியளித்துள்ளது. மற்ற பெயர்போன புத்தகங்களான "நிர்ணய சிந்து, தர்மசிந்து, வைத்தியநாத தீக்ஷீயம், திதிதத்வம், உத்கலகாலிகா, தந்திரங்கள், புராணங்கள்" போன்றவைகளும் நாட்களைக் குறிக்கவும், குறிப்பு தயாரிக்கவும் உதவியுள்ளன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், ஹிந்துக்களின் பல்வேறு சமூகங்களிலும் விரதாதி விசேஷங்களின் அனுஷ்டானம் இயற்கையிலேயே மாறுபட்டிருப்பதால் பொதுப்படையான ஒரு நியமத்தைக் கொண்டுவருவது கடினமானதும் அசாத்தியமானதும்கூட. ஆனால், கூடியவரை ஒருமைப்பாட்டைக் கொண்டுவரும் நோக்கத்துடன்தான் மேற்கண்டுள்ள மதநூல்களின் தத்துவத்தைப் பின்பற்றி பொது விதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அநேக பண்டிகைகள் சந்திரமான (அதாவது சாந்திர சௌரமான) பஞ்சாங்கத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு முதலில் கொடுக்கப்பட்டுள்ளன. சில பண்டிகைகள் முற்றிலும் சௌரமான பஞ்சாங்க அடிப்படையிலேயே குறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பண்டிகைகளுக்குத் தேதி குறிப்பிடும் முறை பின்னால் கொடுக்கப்பட்டுள்ளது.

சித்திரை சுக்லபக்ஷத்தில் ஆரம்பிக்கும் சந்திரமான மாத அமாவாசை முடிவில் தொடங்கி பண்டிகைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்டுள்ள எண்கள் பக்ஷத்தோடு கூடிய திதியைக் குறிக்கவும். (சு—சுக்லபக்ஷம் ; கி—கிருஷ்ணபக்ஷம்.)

சில குறிப்பிட்ட விசேஷங்களைத் தவிர மற்றவற்றை அனுஷ்டிக்கவேண்டிய நேரம் நடுப்பகல் (மத்யானம்) அல்லது முற்பகல்தான். இங்கு நடுப்பகல் அல்லது மத்யானம் என்பதன் பொருள் நடுப்பகலுக்கு முன் 24 நிமிஷங்களும் (ஒரு கடிகை), நடுப்பகலுக்குப்பின் 24 நிமிஷங்களும் ஆகும். இதுதான் மிகவும் பொருத்தமான நேரம். இந்த நேரத்தில் குறித்த திதி வரவில்லையானால் அந்த விசேஷம் அடுத்த நாள்தான் அனுஷ்டிக்கப்படவேண்டும். சில வேளைகளில் மத்யானம் என்பது மேற்குறிப்பிட்டதைக் காட்டிலும் அதிக நேரத்தைக் குறிக்கிறது. அதாவது சூர்யோதயத்திலிருந்து 7-வது, 8-வது, 9-வது முகூர்த்தம் வரைகூட எடுத்துக் கொள்ளப்படுகிறது. (முகூர்த்தம் என்பது பகல் நேரத்தில் 1/15 பங்கு) முற்றிலும் மாறுபட்ட பழக்கமுள்ள வங்காளத்தில் ஒரு குறிப்பிட்ட திதியானது குறைந்த பக்ஷம் முற்பகல் 1 முகூர்த்தமாவது அதாவது பகல் பொழுதின் முதல் 1/3 பாகம் வரையாவது இருக்கவேண்டும். என்றுவது அந்த திதி அந்த நேரத்தில் வரவில்லையானால் முற்பகல் என்பது சூர்யோதயம் முதல் நடுப்பகல் வரை உள்ள காலத்தைக் குறிப்பதாக அமையும். பொது விதியிலிருந்து மாறுபட்ட நேரங்களில் அனுஷ்டிக்கப்படவேண்டிய விசேஷங்களில் திதிகள் வியாபித்திருக்கவேண்டிய நேரம் அநேகமாக எல்லா சந்தர்ப்பங்களிலும் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட திதியானது இரண்டு தொடர்ந்த நாட்களிலும் தேவையான நேரம் வரை வியாபித்திருப்பின் 'பூர்வ வித்தா' என்று குறித்துள்ளவைகளை முதல் நாளிலும் 'பரவித்தா' என்று குறித்துள்ளவைகளை மறுநாளிலும் அனுஷ்டிக்கவேண்டும். மேற்கொண்டு விளக்கங்களும், விதிகளும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

# சாந்திரமானப் பண்டிகைகள்

## சித்திரை

சு 1 நவராத்ரி ஆரம்பம் (பரவித்தா)

சு 3 தோலோற்ஸவம், கௌரித்ரிதியை, ஆந்தோலனத்ரிதியை சௌபாக்ய ஸயன விரதம் (பரவித்தா) ஸர் குஹூல் (பீகார்)

சு 5 ஸ்ரீ பஞ்சமி அல்லது லக்ஷ்மி பஞ்சமி (பூர்வாவித்தா)

சு 6 அசோகஸஷ்டி, (வங்காளம்) (பராவித்தா) கந்தஸஷ்டி (ஒரிஸ்ஸா)

சு 7 வாசந்தி பூஜை (வங்காளம்) (பரவித்தா) ஒலி ஆரம்பம் (ஜெயின்)

சு 8 அன்னபூர்ண பூஜை (வங்காளம்) (பரவித்தா) பவானி உற்பத்தி (பரவித்தா) அசோகாஷ்டமி, (புனர்வசுவும், புதன்கிழமை மாலேயும் கூடிய சிறப்பான நேரம்)

சு 9 ராம நவமி, (நடுப்பகல் புனர்வசு கூடிய சிறப்பு) ராமர் ஜயந்தி

சு 10 தர்ம ராஜ தசமி

சு 11 காமதா ஏகாதசி, தோலோற்ஸவம்

சு 12 தவனோற்ஸவ வாமன த்வாதசி, மதன த்வாதசி

சு 13 அனங்கத்ரியோதசி, பூர்வாவித்தம், மஹாவீர ஜெயந்தி (ஜெயினர்)

சு 14 மதன பஞ்ஜி (வங்காளம், ஒரிஸ்ஸா) (பரவித்தம்) சிவ தமகை சதுர்தசி, விஷ்ணு தமகை ஸதுர்தசி (பாவித்தம்)

சு 15 சித்திரா பௌர்ணமி, (பரவித்தம்) அனுமார் ஜெயந்தி ஒலி முடிவு (ஜெயினர்)

கி 13 வருதுனி ஏகாதசி.

## வைகாசி

சு 3 அக்ஷயத்ரிதியை, (பூர்வாக்ன வாபிதி) (பரவித்தம்) (ரோஹினியும் புதன்கிழமையும் கூடிய புண்ணிய காலம், சந்தனயாத்ரை, பரசுராம ஜெயந்தி, (பிரதோஷவியாப்னி—இரண்டு நாள் ஆனால் பின்நாளில் கொண்டாடப்படும்.)

சு 5 சங்கர ஜெயந்தி

சு 6 சந்தன ஸஷ்டி, (வங்காளம்) (பரவித்தம்)

சு 7 கங்கையின் உற்பத்தி, (இருநாள் ஆகில் முதல் நாள் கொண்டாட்டம்) ஜானு ஸப்தமி, சங்கரா ஸப்தமி

சு 9 சிதா நவமி, (வங்காளம்) (ஒரிஸ்ஸா) மத்தியான வியாப்னி

சு 13 மோஹினி ஏகாதசி, லக்ஷ்மி நாராயண ஏகாதசி (ஒரிஸ்ஸா)

சு 12 பரசுராம த்வாதசி (பூர்வா வித்தம்) ருக்மணித்வாதசி, (பூர்வாவித்தம்) பிபிதகித்வாதசி (வங்காளம்) (பரவித்தம்)

சு 14 நரசிம்ம சதுர்தசி, (பிரத்தோஷ வியாப்னி) இருநாளில் வந்தால் மறுநாள் ஸ்வாதி நக்ஷத்திரமும் சுத்த யோகமும் சனிக்கிழமையும் கூடிய சிறப்பு நாளாக கொண்டாடப்படும்.

சு 15 சம்பன் கௌரிவிரதம், (பரவித்தம்) குலதோலம் (வங்காளம்) (ஒரிஸ்ஸா) (பரவித்தம்) கங்கேஸ்வரி பூஜை (வங்காளம்) (பூர்வாவித்தம்) புத்தபௌர்ணமி வைசாக பௌர்ணமி.

கி 8 திரிலோசனஷ்டமி (வங்காளம்)

கி 11 அபரா ஏகாதசி, ஜலக்ரிடா ஏகாதசி (ஒரிஸ்ஸா)

கி 15 சாவித்ரி சதுர்த்தசி, (பிரதோஷம்) (வங்காளம்)

கி 30 வத சாவித்ரி விரதம், சாவித்ரி அமாவாசை (ஒரிஸ்ஸா) பலஹாரனி காளிபூஜை, (நிசித வியாப்னி).

## ஆனி

சு 1 தசரா ஸ்நான ஆரம்பம். (பத்து நாட்கள் வரை)

சு 3 ரம்பாத்ரிதியை (பூர்வா வித்தம்)

சு 4 உமாஸதுர்த்தி, (வங்காளம், ஒரிஸ்ஸா—பரவித்தம்)

சு 5 மஹாதேவ விவாஹகம் (ஒரிஸ்ஸா)

சு 6 ஆரணிய ஸஸ்டி, ஆரணி கௌரி விரதம் (பரவித்தம்) கந்தசஷ்டி, (பூர்வாவித்தம்) சித்தலா சஷ்டி யாத்ரை (ஒரிஸ்ஸா)

சு 10 கங்காதசரா, (அஷ்ட நக்ஷத்திரம்) வ்யதி பாதயோகம், கரசைகாணம், வியாழக்கிழமை கூடினால் சிறப்பான புண்ணிய தினம்

சு 11 நிர் ஜல ஏகாதசி, தேவவிவாஹக ஏகாதசி (ஒரிஸ்ஸா) ருக்மனி விவாஹகம் (ஒரிஸ்ஸா)

சு 12 ஸ்ரீராம த்வாதசி, (பூர்வாவித்தம்) சம்பக த்வாதசி (ஒரிஸ்ஸா) (பூர்வா வித்தம்)

சு 14 சம்பக சதுர்தசி, (வங்காளம்) (பரவித்தம்)

சு 15 வத சரவித்ரி விரதம், (தக்காணம்) (பிரதோஷ வியாப்னி-பூர்வாவித்தம்) ஸ்நானயாத்ரை, (வங்காளம்) ஒரிஸ்ஸா, (பரவித்தம்)

கி 11 யோகினி ஏகாதசி

## ஆடி

சு 2 ரதயாத்ரை, (பரவித்தம்) பூச நக்ஷத்திரம் கூடினால் சிறப்பானது மனோரதத்ரிதியை, (பகலேயும், இரவையும் கொடும்படியாக சந்திரன் தெரிந்தால்தான் இப் பண்டிகை கொண்டாடப்படும்.)

சு 5 கந்த பஞ்சமி, (பரவித்தம்)

சு 6 குமார ஸஸ்டி, ஏல பஞ்சமி (ஒரிஸ்ஸா) கர்தம ஸஷ்டி, (வங்காளம்) (பரவித்தம்)

சு 7 விவங்வாம் ஸப்தமி, (பூர்வா வித்தம்)

சு 8 பரசுராமஷ்டமி, (ஒரிஸ்ஸா) சராட்சி பூஜை (திரிபுரா)

சு 10 புனர் யாத்ரை, (ரதயாத்ரையின் ஒன்பதாம் நாள்)

சு 11 ஹரிசயாணி ஏகாதசி, ரவி நாராயண ஏகாதசி (ஒரிஸ்ஸா) விஷ்ணுஸயோனேந்ஸவம், ஸ்ரீ கிருஷ்ணத்வாதசி, கோப்த்ம விரத ஆரம்பம்

சு 14 ஸாதுர் மாஸ ஸதுர்தசி, (ஜெயினர்) சிவஸயன ஸதுர்தசி (ஒரிஸ்ஸா)

சு 15 குரு பூர்ணிமா (பரவித்தம்) வியாசர் பூஜை, (பரவித்தம்) அஸ்தமனத்திற்கு பிறகு மூன்று முகூர்த்தங்கள் வரையில், கோகிலா விரதம் (ஸாயான வியாப்னி) சிவஸயோனோற்ஸவம் (பிரதோஷ வியாப்னி)

சு 2 அசூர்ன ஸயன விரதம், (சந்தோர்யன வியாப்னி) பூர்வன்ன வ்யாப்னி வங்காளத்தில் பூர்வா வித்தம்

கி 5 நாகபஞ்சமி (வங்காளம்) (பூர்வாவித்தம்)

கி 7 சீத்லா ஸப்தமி (ஒரிஸ்ஸா)

கி 11 காமிகா ஏகாதசி

கி 30 சித்தாவு அமாவாசை (ஒரிஸ்ஸா) கர்கடகவாவு (திருவாங்கூர் ராஜ்யம்) சூரியமான ஆவணியில்.

## ஆவணி

சு 3 மதுசுலபம் (குஜராத்) (பரவித்தம்)

சு 5 நாகபஞ்சமி (பராவித்ஹா) ஜாகரத் கௌரி பஞ்சமி (ஒரிஸ்ஸா) ராத்ரி வியாப்னி

சு 6 லுன்தானஸஷ்டி (வங்காளம்) (பராவித்தம்)

சு 11 புத்ராட ஏகாதசி. ஜூலனயாத்ரை (பரோசோஸ்சவயாபினி அல்லது பூர்வண்ண வியாப்னி)

சு 12 புத்தா த்வாதசி, தாமோதர த்வாதசி, (பூர்வாவித்தம்) விஷ்ணு பவிந்தாரோஹண

சு 13 அகேதக த்ரியோதசி (ஒரிஸ்ஸா)

சு 14 சிவ பவித்ரா அரோபணம் (ஒரிஸ்ஸா) (ராத்ரி வியாப்னி)

### ஆவணி—தொடர்ச்சி.

சு 15 ராஹி பூர்ணிமா, நாரொலி பூர்ணிமா (தேங்காய் திருநாள்) ரக்ஷாபந்தனம், பௌர்ணமியின் பின் பகுதியில்) ரிஷிதர்பனம் (மத்யான வியாப்ளி) ஹைக்ரீவ உற்பத்தி ஜுலனயாத்ரை சமர்பணம், பலபத்ர பூஜை (ஒரிஸ்ஸா)

ஆவணி அவிட்டம் (தென் இந்தியா)—சில இடங்களில் சுக்கிலபக்ஷ 14, 15-ந்தேதிகளில் வரும் அவிட்ட நக்ஷத்திரத்தில் கொண்டாடப்படும். கிருஷ்ணபக்ஷம் பிரதமைக்குள் அவிட்ட நக்ஷத்திரம் வராவிடில் அடுத்த மாத அவிட்ட நக்ஷத்திரத்தில் கொண்டாடப்படும். உபாகர்மம், (சங்கவ வியாப்ளி—சுக்கிலபக்ஷ பௌர்ணமியில் 4, 5, 6 முகூர்த்தங்கள்) 1 ருக் வேதிகள் சுக்கிலபக்ஷ சதுர்தி பௌர்ணமி அல்லது கிருஷ்ண பக்ஷ பிரதமையில் சரவண நக்ஷத்திரத்தில் கொண்டாடுவர்.

(2) அந்த நாளில் சங்கரமணமோ, கிரகணமோ, ஏற்பட்டாலும் அல்லது குருவோ சுக்கிரனோ அஸ்தங்கத தோஷமடைந்தால் யஜுர் வேதிகள் ப்தாரபிரத பௌர்ணமியிலோ அல்லது அதுவும் சரியில்லாவிடில் அஷாட பௌர்ணமியிலோ உபாகர்மத்தை அனுஷ்டிப்பர்.

கி 2 அசூனியசயன விரதம், (சந்தோர்த்தினத்தியபோது த்ரிதியை வந்தால், அவ்வாறு இரண்டுநாள் நேர்ந்தால் பிந்திய நாள் அனுஷ்டிக்கப்படும்.

கி 3 கஜ்ஜலி த்ரிதியை, (பரவித்தம்) அங்கவேத த்ரிதியை (ஒரிஸ்ஸா).

கி 4 பகுலஸதுர்தி (மத்தியதேசம்) (சந்தியா வியாப்ளி—இரண்டு நாள் நேர்ந்தால் முதல் நாளில்.)

கி 5 ரக்ஷா பஞ்சமி (ஒரிஸ்ஸா) (பூர்வா வித்தம்)

கி 6 ஹலஸஷ்டி (பரவித்தம்)

கி 7 சீதலா ஸப்தமி (பூர்வாவித்தம்)

கி 8 ஜன்மாஷ்டமி (மத்ய யாத்ரை வ்யாபிணி) இரு நாட்கள் தொடர்ந்து நடுநிசியிலோ அல்லது பகலிலோ வரின் இரண்டாம் நாளும் ரோஹிணி நக்ஷத்திரம் கூடில் அதைக் காட்டிலும் விசேஷமும், இவற்றுடன் திங்கட்கிழமையும், புதன்கிழமையும் கூடில் இன்னும் விசேஷம் ஆகும். இந்த இணைப்புகள் நடுநிசிக்கு முன்னே இருந்து ரோஹிணி நக்ஷத்திரம் அப்பாலும் சென்றால் அந்த நாளில் கோகுலாஷ்டமி கொண்டாடப்படும். வைஷ்ணவர்களுக்கு ஸப்தமிக்கு அடுத்த நாள் தென் இந்தியாவில் சிலர் ரோஹிணி நக்ஷத்திரத்தில் கொண்டாடுகின்றனர். அஸ்ஸாமில் சௌபாத்ரபதத்தில் ஸ்ராவண கிருஷ்ணபக்ஷ அஷ்டமியிலோ பாத்ர அஷ்டமியிலோ கொண்டாடப்படும்.

கி 11 அஜா ஏகாதசி

கி 12 ப்ரியுசான பர்வ ஆரம்பம் (ஜெயின்—பஞ்சமி பக்ஷம்) சம்வத்சரிக்குமுன் 8 நாட்கள்.

கி 14 அகோர ஸதுர்தசி (ப்ரதோஷ வியாப்ளி)

கி 30 பித்தோரி அமாவாசை, ஆலோக அமாவாசை, சப்தபுரி அமாவாசை (ஒரிஸ்ஸா) குடிகிரகணம்.

### புரட்டாசி

சு 1 ருத்ர விரதம் (பூர்வா வித்தம்)

சு 3 ஹரிதாலிகா விரதம் (பரவித்தம்), கௌரி விரதம் (ஒரிஸ்ஸா), கௌரி (மைசூர்)

சு 4 வரதா ஸதுர்த்தி (பூர்வ வித்தம் மத்யான வியாப்ளி) சம்வத்சரி பர்வம், (ஜெயின் சதுர்த்தி பக்ஷம்), சௌபாக்ய ஸதுர்த்தி (வங்காளம்), கணேச ஸதுர்த்தி (மத்யான வியாப்ளி), (பூர்வ வித்தம்) ஹரிதாலி ஸதுர்த்தி (சௌரபாத்ர சுக்கிலபக்ஷ ஸதுர்த்தி) ஸரஸ்வதி பூஜை (ஒரிஸ்ஸா)

சு 5 ரிஷி பஞ்சமி (மத்யான வியாப்ளி) மாதவரின்படி முதல் நாளிலும், ஹேமாதிரித்வோதாசர் இவர்களின்படி மறு நாளிலும் கொண்டாடவேண்டும். இதுவே வங்காளத்தில் ரக்ஷா பஞ்சமி, ஒரிஸ்ஸாவில் குரு பஞ்சமி, ஜெயினர்களிடையே சம்வத்சரி பர்வம் (பஞ்சமி-பக்ஷம்)

சு 6 சூரிய ஸஷ்டி (பரா வித்தம்), லோலார்க ஸஷ்டி சர்பத ஸஷ்டி மன்தான ஸஷ்டி (வங்காளம்). சம்பா ஸஷ்டி—விசாக நக்ஷத்திர முன் வைத்ருதி யோகமும் வியாழக்கிழமையும் கூடியது. சோமநாத் விரதம் (ஒரிஸ்ஸா)

சு 7 முக்தாபரண விரதம் (பூர்வா வித்தம்) லலிதா ஸப்தமி (வங்காளம், ஒரிஸ்ஸா)

சு 8 தூர்வாஷ்டமி (பூர்வா வித்தம்)—ஸ்ராவண 8 சௌர பாத்ரம் வங்காளத்தை தவிர மஹாலக்ஷ்மி விரத ஆரம்பம், ராதாஷ்டமி (மத்யான வியாப்ளி) துர்கா சயனஷ்டமி (ஒரிஸ்ஸா)

### புரட்டாசி—தொடர்ச்சி.

சு 9 அதுக்க நவமி, நந்தா நவமி, தால நவமி (வங்காளம், ஒரிஸ்ஸா) (பூர்வா வித்தம்)

சு 11 பரிவர்தினி ஏகாதசி, விஷ்ணு சங்கலயோகம் ஸ்ராவண நக்ஷத்திரமும் த்வாதசியில் கூடியது. ஹைக்ரா விரித்தோம்பா, (மணிபுரி) தோல்கியாரஸ் (M. B.)

சு 12 விஷ்ணு பரிவர்தனோற்சவம், ஸக்ரோத்ன உத்திராடம் திருவோணம், அவிட்டம் இம் மூன்று நக்ஷத்திரங்களிலும் எதிலாகிலும் வாமன ஜெயந்தி (மத்யான வியாப்ளி)

சு 14 அனந்த ஸதுர்தசி (சூரிய உதயத்திலிருந்து மூன்று முகூர்த்தங்கள் வரை, வங்காளத்தில் ஒரே முகூர்த்தம்)

சு 15 இந்திர கோவிந்த பூஜை (ஒரிஸ்ஸா) ப்ரதோஷம்

கி 1 மஹாலய ஆரம்பம்.

கி 2 அசூன்ய சயன விரதம் (ஸ்ராவணம் 2 பார்க்க)

கி 6 சந்திர ஸஷ்டி (இரு நாளைக்கு தொடர்ந்து ஸஷ்டி சந்திரன் உதயமானால் முதல் நாள் கொண்டாடப் பெறுவது)

கி 8 கபிலா சஷ்டி (ரோஹிணி நக்ஷத்திரம் யதிர்பாதயோகம் அஸ்தத்தில் சூரியன் செவ்வாய்க்கிழமை மஹாலக்ஷ்மி விரத சமர்பணம் (சந்திர உதயத்தின்போது ஜீதாஷ்டமி ப்ரதோஷம்)—ஜீமுக வாகன பூஜை, மூலாஷ்டமி (ஒரிஸ்ஸா)

கி 9 மாத்ரு நவமி, அபிதபா நவமி, துர்கா நவமி (மஹாராஷ்டிரம்)

கி 11 இந்திர ஏகாதசி

கி 13 மஹாத்ரியோதசி (மலமாசமாயினும் மகநக்ஷத்திரத்தில்)

கி 30 மஹாலய அமாவாசை (அபரான வியாபிணி).

### ஐப்பசி

சு 1 நவராத்ரி ஆரம்பம் (பராவித்தம்)

சு 4 மான ஸதுர்த்தி (வங்காளம், ஒரிஸ்ஸா)

சு 5 உபாங்க லலிதா விரதம் (மஹாராஷ்டிரம்) (பூர்வா வித்தம்) (ராத்ரி வியாப்பினி சிலருக்கு) நட பஞ்சமி (ஒரிஸ்ஸா)

சு 6 துர்கா ஸஷ்டி, தப ஸஷ்டி (ஒரிஸ்ஸா)

சு 7 துர்கா ஸப்தமி (பரவித்தம்) சூரியோதயத்தின் பின் ஒரு முகூர்த்தம், ஸரஸ்வதி ஸ்தாபனம் (ஸப்தமியில் மட்டுமேயன்றி அவசியமில்லை, மூலா நக்ஷத்திரத்தில் இருக்கலாம்) ஒலி ஆரம்பம் (ஜெயினர்) பௌர்ணமி முந்தி எட்டு நாட்கள்

சு 8 மஹாஷ்டமி (பராவித்தம்) ஸரஸ்வதி பஜனை (பூராட நக்ஷத்திரத்தில்)

சு 9 மஹா நவமி (பூர்வா வித்தம்) வங்காளத்தில் பராவித்தமாக சூரியோதயத்தின் பின் ஒரு முகூர்த்தமாகக் கொண்டாடப்படும்.
ஸரஸ்வதி பலி தானம் (உத்திராட நக்ஷத்திரத்தில்)

சு 10 விஜயதசமி (வங்காளத்தில் பரவித்தம் பிற இடங்களில் ஸ்ராவண நக்ஷத்திர பகலில்) ஸரஸ்வதி விஸர்ஜனம் (ஸ்ராவண நக்ஷத்திரத்தில்) தசரா

சு 11 பசாங்குசா (பாபாங்குச) ஏகாதசி, பாரத் மிலாப்

சு 12 பத்மநாப த்வாதசி

சு 13 கோஜா கரிலக்ஷ்மி பூர்ணிமா—(ப்ரதோஷ வியாப்பினி தொடர்ந்து இரு நாள் வந்தால் இரண்டாம் நாளும் மற்றபடி முதல் நாளும் குமார பூர்ணிமா (ஒரிஸ்ஸா) ஒலி முடிவு (ஜெயினர்)

கி 2 அசூன்ய சயன விரதம்—ஸ்ராவணம் கி 2

கி 4 கரக ஸதுர்த்தி (இரு நாள் தொடர்ந்து வந்தால் முதல் நாள்) தசரத ஸதுர்த்தி (வங்காளம்) (ப்ரதோஷ வியாப்பினி) இரு நாளோ முதல் நாளோ ஒரு நாள்

கி 8 அகோஹி அஷ்டமி (குஜரத்) (சந்திரோயத்தில்) கராஷ்டமி (மஹாராஷ்டிரம்) தொடர்ந்து இரு நாள் வரின் இரண்டாம் நாள்

கி 11 ரமா ஏகாதசி

கி 12 கோவத்ச த்வாதசி (ப்ரதோஷ வியாப்பினி) இரு நாள் வரின் முதல் நாள்

கி 13 யம தீபந்தானு (ப்ரதோஷம்)

கி 14 நாக ஸதுர்தசி (சூரியோதயத்திற்கு முன் இரு நாள் வரின் முதல் நாள்) பூத்த ஸதுர்தசி தீபதான ஸஸ்த்ரஈஅத ஸதுர்தசி, அனுமார் ஜன்ம தினம்

கி 30 காளி பூஜை (நிசித வியாப்பினி) தீபாவளி அல்லது தீவாளீ (ப்ரதோஷம்) மஹாலக்ஷ்மி பூஜை (ப்ரதோஷம்) கேதார கௌரி விரதம் (தென் இந்தியா) மஹாவீர நிர்வாணம் (ஜெயின்).

### கார்த்திகை

சு 1 கோவர்தன பூஜை, அன்ன கூட்டம் (பூர்வா வித்தம்), பலிதைத்தியராத பூஜா (ப்ரதோஷம்) ஜுத ப்ரதிபதம் (பூர்வண்ணம்)

சு 2 ப்ராத்ரு த்ரிதியை, யமத்ரிதியை (மத்தியானம் பூர்வா வித்தம்) மசியாதாரா (த்வாத்) பூஜை (பீகார்)

சு 3 ஆலோஜன கௌரி விரதம் (பராவர்த்தம்)

சு 4 நாக ஸதுர்த்தி (பூர்வா வித்தம், மத்தியான வியாப்பினி)

சு 5 ஞான பஞ்சமி (ஜெயின்)

சு 6 நாடி ஸஷ்டி, கந்த ஸஷ்டி (சென்னை), சூரிய சஷ்டி, சாத் (பீகார்)

சு 8 கோபாஷ்டமி, கோஷ்தாஷ்டமி

சு 9 அக்ஷய நவமி (பூர்வன்ன வியாப்பினி) ஜகதாத்ரி பூஜை (வங்காளம்) (உதய வியாப்னி–ஒரு முகூர்த்தம்) அன்லா நவமி (ஒரிஸ்ஸா), துர்கா நவமி (பூர்வா வித்தம்) கௌரி விரதம்

●சு 11 துளசி விவாஹகம், பீஷ்ம பஞ்சகம், ப்ரபோதினி ஏகாதசி

சு 12 ப்ரபோதன உற்சவம், நாராயண த்வாதசி, பிருந்தாவன த்வாதசி, கருட த்வாதசி (ஒரிஸ்ஸா)

சு 14 வைகுண்ட சதுர்தசி (ராத்திரி வியாப்பினி) சௌமர சௌடஸ் (ஜெயின்) பத ஓஷா (ஒரிஸ்ஸா)

சு 15 ராஸ யாத்ரை (நிசித வியாப்பினி நடுநிசிக்கு 24 நிமிஷம் முன்னும் பின்னும் இரு நாள் வரின் இரண்டாம் நாள்) புஷ்கர் விழா, ரத யாத்திரை (ஜெயின்) த்ரிபோற்சவம் (மாலை) கேதார விரதம் (ஒரிஸ்ஸா) கார்த்திகை பூர்ணிமா.

கி 8 காலாஷ்டமி (ராத்திரி வியாப்பினி பராவித்தம்) கால பைரவ ஜெயந்தி, ப்ரதமாஷ்டமி (ஒரிஸ்ஸா)

கி 9 கான்ஞ்சி அன்லா நவமி (ஒரிஸ்ஸா)

கி 11 உட்பண (உற்பத்தி) ஏகாதசி

கி 30 தீபாவளி அமாவாசை (ஒரிஸ்ஸா).

### மார்கழி

சு 1 ருத்ரோ உபவாசம்

சு 5 நாக பஞ்சமி (2nd) (பராவித்தம்)

சு 6 சம்பா சஷ்டி (மஹாராஷ்டிரம்) (பராவித்தம்) சதய நக்ஷத்திரம், யதிர்பாத யோகம் ஞாயிற்றுக்கிழமை கூடில் கந்த கஷ்டி (பூர்வா வித்தம்) குக சஷ்டி, மூலகரூபிணி ஸஷ்டி.

சு 7 மித்ர ஸப்தமி (பூர்வா வித்தம்)

சு 11 மோக்ஷதா (மோக்ஷ) ஏகாதசி, மௌன ஏகாதசி (ஜெயின்)

சு 12 மஸ்ய த்வாதசி, அகண்ட த்வாதசி (பராவித்தம்) யஞ்ஞன த்வாதசி & தான த்வாதசி (ஒரிஸ்ஸா)

சு 14 பாஷான ஸதுர்தசி (வங்காளம் & ஒரிஸ்ஸா) (சூரிய மான மார்கழி இரவில்)

சு 15 தத்தாத்ரியோற்பத்தி (ப்ரதோஷம்)

கி 8 புஷ்பாஷ்டகம்

கி 10 பௌச தசமி (ஜெயின்)

கி 11 சப்பலா ஏகாதசி

கி 30 வகுல அமாவாசை (ஒரிஸ்ஸா)

### தை

சு 6 அன்னரூப ஸஷ்டி (வங்காளம்)

சு 10 சம்பா தசமி, சூரிய பூஜை (ஒரிஸ்ஸா)

சு 11 புத்ராட ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி (சென்னை) சூரிய தை மாதத்தில்

சு 12 கூர்ம த்வாதசி

சு 15 புஷ்யாபிஷேக யாதரை (புஷ்ய த்திரம் கூடில் விசேஷம்)

கி 8 மாம்ஸாஷ்டகா

கி 11 சத்திலா ஏகாதசி

கி 13 மேரு த்ரியோதசி (ஜெயின்)

கி 14 யமதர்பணம் (சூரியோதயத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்) ரதத்தந்தி காளிகா பூஜை (வங்காளம்) (ப்ரதோஷவியாப்பினி அல்லது நிசித வியாப்பினி)

கி 30 மௌன அமாவாசை (உத்திர பிரதேசம்) திருவேணி அமாவாசை (ஒரிஸ்ஸா) மகரவாவு (திருவாங்கூர்) அர்தோதயயோகம்—(ஸ்ராவண நக்ஷத்திரம் வ்யதி பாதயோகம் ஞாயிற்றுக்கிழமை யோகம்).

### மாசி

சு 4 தில ஸதுர்த்தி குண்ட ஸதுர்த்தி (ப்ரதோஷ வியாப்பினி) வரதா ஸதுர்த்தி (வங்காளம், ஒரிஸ்ஸா) கணேச ஸதுர்த்தி; கணேச ஜெயந்தி (மத்தியான வியாப்பினி பூர்வாவித்தம்)

சு 5 ஸ்ரீ பஞ்சமி (பூர்வா வித்தம்), ஸரஸ்வதி பூஜை (வங்காளம்) வசந்த பஞ்சமி, மதனபஞ்சமி

சு 6 சீத்தலாஸஷ்டி (வங்காளம்)

சு 7 ரதஸப்தமி (சூரியோதயத்திற்கு முன் 4 நாழிகை) அச்சலாஸப்தமி, விதான ஸப்தமி, ஆரோக்ய ஸப்தமி (பூர்வா வித்தம்)

சு 8 பீஷ்மாஷ்டமி

சு 9 மஹாநந்த நவமி

சு 11 ஜெயா ஏகாதசி, பைமி ஏகாதசி (வங்காளம்)

சு 12 பீஷ்ம த்வாதசி (பூர்வா வித்தம்), ஆமலக்கி த்வாதசி, சுந்தான த்வாதசி வராக த்வாதசி

சு 15 மாசி பூர்ணிமா (பராவித்தம்) மஹாமாகி (குருவும் சந்திரனும் மகர நக்ஷத்திரத்தில் சூரியன் திருவோணத்திலும் சனிமேஷமதிலும் இருப்பது) அக்னி உற்சவம் (ராத்திரி) (ஒரிஸ்ஸா)

கி 8 சகாஷ்டகம், சீதாஷ்டமி, (சீதை ஜன்மதினம்)

கி 11 விஜயா ஏகாதசி

கி 14 மஹாசிவராத்திரி (நிசித வியாப்பினி).

### பங்குனி

சு 4 சாந்தா ஸதுர்த்தி (பரவித்தம்) (ஒரிஸ்ஸா)

சு 6 கோரூபிணி ஸஷ்டி (வங்காளம்)

சு 10 பகுதசமி (ஒரிஸ்ஸா)

சு 11 ஆமலக்கி ஏகாதசி

சு 12 நரசிம்ம த்வாதசி (புஷ்ய நக்ஷத்திரம் கூடில் கோவிந்த தசமி)

சு 14 சௌமாசி சௌதஸ் (ஜெயினர்)

சு 15 ஹோலிகாதானம் (சாயன்ன வியாப்பினி (இரவில் பௌர்ணமியில் நடுநிசிக்கு பிறகு) டோலயாத்திரை (வங்காளம், ஒரிஸ்ஸா) சூரியோதயத்திற்கு பிறகு 4 நாள்) ஹோலி – ஹோலிகாதானத்திற்கு மறுநாள்

கி 1 வசந்தோற்சவம் (சூரியோதயத்தில் இருநாள் தொடரில் முதல்நாள்)

கி 5 ரங்கபஞ்சமி

கி 6 கந்த ஸஷ்டி (வங்காளம்) பூர்வாவித்தம்

கி 8 சீத்தலாஷ்டமி (பூர்வா வித்தம்) வர்ஷிதபாரம்பா (ஜெயினர்)

கி 11 பாபமோக்ஷன ஏகாதசி

கி 13 மதுகிருஷ்ண த்ரியோதசி (சதயத்தோடு கூடில் வாருணி, சதயமும், சனிக்கிழமையும் கூடில் மஹா வாருணி சுப நாம யோகமும் கூடில் மஹா மஹா வாருணி)

(சு-சுக்ல பக்ஷத்தையும்; கி-கிருஷ்ண பக்ஷத்தையும் குறிக்கும்.)

# திதிகள், பூர்வவித்தம் பரவித்தம் விதிகள்.

## திதிகள்,

| எண். | திதி. | | தெய்வம். |
|---|---|---|---|
| 1. | ப்ரதி பதம் | .. | அக்னி |
| 2. | துவிதியை | .. | பிரதாபதி |
| 3. | த்ரிதியை | .. | கௌரி |
| 4. | ஸதுர்த்தி | .. | கணேசர் |
| 5. | பஞ்சமி | .. | ஸர்ப்பம் |
| 6. | ஷ்ஷ்டி | .. | குகன் (கார்த்திகேயன்) |
| 7. | சப்தமி | .. | சூரியன் |
| 8. | அஷ்டமி | .. | சிவன் |
| 9. | நவமி | .. | துர்க்கை |
| 10. | தசமி | .. | யமா |
| 11. | ஏகாதசி | .. | விஷ்வா |
| 12. | த்வாதசி | .. | விஷ்ணு |
| 13. | த்ரியோதசி | .. | மதனு |
| 14. | ஸதுர்தசி | .. | சிவா |
| 15. | பௌர்ணிமி | .. | சந்திரன் |
| 30. | அமாவாசை | .. | ப்த்ருஸ் |

## பூர்வவித்தம் பரவித்தம் விதிகள்.

| | சுக்கிலபக்ஷம். | கிருஷ்ணபக்ஷம். |
|---|---|---|
| 1. | பூர்வா (நவராத்திரி விரதத்தில் மட்டும் பரவித்தம்) | பரா |
| 2. | பரா | பூர்வா |
| 3. | பரா-(ரம்பாத்ரிதியையில் பூர்வம்) | பரா |
| 4. | பரா-(கணேச விரதத்தில் பூர்வம்) | பரா |
| 5. | பூர்வா (நாக பூஜை பரம்) | பூர்வா |
| 6. | பரா-(கந்த விரதத்தில் பூர்வம்) | பரா |
| 7. | பூர்வா | பூர்வா |
| 8. | பரா-(துர்வாஷ்டமியில் பூர்வம்) | பூர்வ (சிவசக்தி பூஜையில் பரம்) |
| 9. | பூர்வா | பூர்வா |
| 10. | பரா | பூர்வா |
| 11. | பரா | பரா |
| 12. | பூர்வா-(பிபிதகி அகண்ட த்வாதசியில் பரம்) | பூர்வா |
| 13. | பூர்வா | பரா |
| 14. | பரா | பூர்வா |
| 15. | அல்லது 30 பரா (வங்காளத்தில் சாவித்திரி விரதங்களில் பூர்வம்) | பரா. (சாவித்திரி விரதத்தில் பூர்வம்) |

## நட்சத்திரம்.

| எண். | பொதுப்பெயர். | தமிழ்ப் பெயர். | தெய்வம். |
|---|---|---|---|
| 1. | அஸ்வினி | | அஷ்வின்ஸ் |
| 2. | பரணி | | யமன் |
| 3. | இருத்திகா | இருத்திகை | அக்னி |
| 4. | ரோஹினி | | ப்ராஜாபிதி |
| 5. | ம்ருகஷிரஸ் | ம்ருகஷீரிடம் | சோமன் |
| 6. | ஆர்ட்ரா | திருவாதிரை | ருத்ரன் |
| 7. | புனர்வசு | | அதிதி |
| 8. | புஷ்யா | பூசம் | பிரகஸ்பதி |
| 9. | ஆஸ்லேஸா | ஆயில்யம் | சர்பஸ் |
| 10. | மஹா | மகம் | ப்த்ரு |
| 11. | பூர்வபல்குனி | பூரம் | பஹன் |
| 12. | உத்திரபல்குனி | உத்திரம் | அரியமா |
| 13. | ஹஸ்தா | ஹஸ்தம் | சலவிதா |
| 14. | சித்திரா | சித்திரை | த்வஷ்டர் |
| 15. | ஸ்வாதி | | வாயு |
| 16. | விசாகா | விசாகம் | இந்திராக்னி |
| 17. | அனுராதா | அனுஷம் | மித்ரா |
| 18. | ஜேஷ்டா | கேட்டை | இந்திரா |
| 19. | மூலா | மூலம் | நிருதி |
| 20. | பூர்வ ஆஷாடா | பூராடம் | ஆபா |
| 21. | உத்தர ஆஷாடா | உத்திராடம் | விஸ்வதேவன் |
| 22. | ஸ்ராவணு | திருவோணம் | விஷ்ணு |



## நட்சத்திரம்—தொடர்ச்சி.

| எண். | பொதுப்பெயர். | தமிழ்ப் பெயர் | தெய்வம். |
|---|---|---|---|
| 23. | தனிஷ்டா (ஸ்ராவிஸ்டா) | அவிட்டம் | வஸு |
| 24. | ஸ்தபிஷஜ் | சதயம் | வருணு |
| 25. | பூர்வ பாத்ரபதா | பூரட்டாதி | அஜாரகபாத் |
| 26. | உத்தரபாத்ரபதா | உத்ரட்டாதி | அபிபுதன்யா |
| 27. | ரேவதி | | புஸன் |

## முகூர்த்தம்.

| எண். | பகல். | இரவு. |
|---|---|---|
| 1. | ஆர்வுத்ரா | ஆர்வுத்ரா |
| 2. | ஆஸ்லேயா | பூர்வபாத்ரபதா |
| 3. | அனுராதா | உத்தர பாத்ர பதா |
| 4. | மஹா | ரேவதி |
| 5. | தனிஷ்டா | அஷ்வினி |
| 6. | பூர்வ ஆஷாடா | பரணி |
| 7. | உத்தர ஆஷாடா | இருத்திகை |
| 8. | அபிஜித் | ரோஹினி |
| 9. | ரோஹினி | ம்ருகஷிரஸ் |
| 10. | ஜேஷ்டா (விசாகம்) | புனர்வசு |
| 11. | விசாகம் (ஜேஸ்டா) | புஸ்யா (ஸ்ராவணு) |
| 12. | மூலம் | ஸ்ராவணு (புஸ்யா) |
| 13. | சதபிஸா | ஹஸ்தம் |
| 14. | உத்தர பால்குனி | சித்திரை |
| 15. | பூர்வ பால்குனி | ஸ்வாதி |

குறிப்பு :—வளைவுக்குள்ளவைகள் வங்காளத்தில் உள்ளபடி.

## யோகம்.

| எண். | யோகம். | தெய்வம். |
|---|---|---|
| 1. | விஷ்கம்பம் (விஷ்கும்பம்) | யமன் |
| 2. | ப்ரீதி | விஷ்ணு |
| 3. | அயுஸ்மான் | சந்திரன் |
| 4. | சௌபாக்யா | பிரம்மன் |
| 5. | சோபனு | ப்ரகஸ்பதி |
| 6. | அதிகண்டா | சந்திரன் |
| 7. | சுக்கர்மா | இந்திரா |
| 8. | த்ரிதி | ஆபா |
| 9. | சுலா | ஸர்பா |
| 10. | கண்டா | அக்னி |
| 11. | வ்ருதி | சூரியன் |
| 12. | த்ருவா | ப்ருதிவி |
| 13. | வ்யாகதா | பவணன் |
| 14. | ஹஸ்ரணன் | ருத்ரன் |
| 15. | வஜ்ரா | வருணன் |
| 16 | சித்யி (வங்காள அஸ்ரிக்) | கணேசன் |
| 17. | வ்யதிபாதம் | சிவன் |
| 18. | வரியான் | குபேரன் |
| 19. | பரிகம் | விஸ்வகர்மா |
| 20. | சிவர | மித்ரா |
| 21. | சித்ஹா | கார்த்திகா |
| 22. | ஸாத்யா | சாவித்ரி |
| 23. | சுகா | கமலா |
| 24. | சுக்கலா (வங்காள சுக்ரன்) | கௌரி |
| 25. | ப்ரம்மா | அஷ்வினிகள் |
| 26. | இந்திரா | ப்த்ருக்கள் |
| 27. | வைதிருதி | அதிதி |

## யோக கணிதம்.

சூரிய சந்திர அக்ஷாம்ச கூட்டலை கொண்டே யோகம் கணிக்கப்படுகிறது. இக்கூட்டுத்தொகை 13°—20′ ஆனுல் விஷ்கம்பத்தின் முடிவு 26°—40′ ஆனுல் 2-வது யோகமான ப்ரீதி முடிவு, இப்பஞ்சாங்கத்தில் இந்த யோகங்கள் கொடுக்கப்பெறவில்லை.

## கரணங்கள்.

ஒவ்வொரு திதியிலும் அரைப்பகுதி ஒரு காரணமாக இரு காரணங்கள் உண்டு. எனவே சூரியனிலிருந்து சந்திரன் ஆறு ஆறு பாகைகள் வித்தியாசப்படும்போது கரணங்கள் தோன்றுகின்றன.

## கரணம்.

| திதி | முதற் பகுதி | 2-ம் பகுதி |
|---|---|---|
| சு 1. | | |

# ஆங்கில அரிச்சுவடிப்படி அமைந்த இந்துப் பண்டிகைகளின் வரிசை.

## அ. (A)

அகல ஸப்தமி—மாகம் சு 7.

ஆடி அமாவாசை (தென் இந்தியா)—கி 30 சௌரஸ்ராவண

ஆடி பூரம் (தென் இந்தியா) — பால்குனி

அதுக்க நவமி—பாத்ரம் சு—9.

அகோர ஸதுர்தசி—ஸ்ராவண கி. 14

அக்னி உற்சவம்—மாகம் சு 15

அயோஹி அஷ்டமி (குஜராத்)—ஆஸ்வின கி 8

அஜா ஏகாதசி—ஸ்ராவண கி 11

அகண்ட த்வாதசி—மார்கசிரம் சு 12

அகேதக த்ரியோதசி (ஒரிஸ்ஸா)—ஸ்ராவண சு 13

அக்ஷயநவமி—கார்த்திகா சு 9

அக்ஷயத்ரிதியை வைகாசி சு 3 (ரோஹினியும் புதன்கிழமையும் சேர்ந்தால் விசேஷம்).

அலோகன கௌரி விரதம்—கார்த்திகை சு 3.

அலோக அமாவாசை—ஸ்ராவண கி 30.

ஆமலகி த்வாதசி—மாகம் சு 12.

ஆமலகி ஏகாதசி—பால்குன சு 11.

அனங்கத்ரியோதசி—சைத்திர சு 13.

அனந்தா ஸதுர்தசி—பாத்ரம் சு 14

ஆன்தோலனத்ரிதியை—சைத்திர சு 3.

அங்கபேத த்ரிதியை (ஒரிஸ்ஸா)—ஸ்ராவண கி 3.

அன்வா நவமி (ஒரிஸ்ஸா)—கார்த்திகை சு 9.

அன்னாபிஷேகம் (தென்இந்தியா) சௌர கார்த்திகை பௌர்ணமி 106 பக்கம் பார்க்க).

அன்னகூட்டம்—கார்த்திகை சு 1.

அன்னபூர்ண பூஜை (வங்காளம்)—சைத்திர சு 8.

அன்னரூப ஸஷ்டி (வங்காளம்)—பூசம் சு 6.

அபாரா ஏகாதசி—வைகாசி கி 11.

ஆரன்ய கௌரி விரதம்—ஜேஸ்டா சு 6.

ஆரன்ய ஸஷ்டி—ஜேஸ்டா சு 6.

அர்த்தோதய யோகம்—(பௌச கி 30 ஸ்ராவண முன் வ்யதிபாதமும் ஞாயிற்றுகிழமை பகலும் கூடினுல் விசேஷம்).

ஆரோக்ய ஸப்தமி—மாகம் சு 7.

ஆர்வுத்ரா தரிசனம் (தென் இந்தியா) சூரியமான பௌஸ மாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரம்.

அசோகாஷ்டமி—சைத்திர சு 8 (புனர்வசுவும் புதன்கிழமையும் கூடிய விசேஷம்).

அசோக ஸஷ்டி—(வங்காளம்)—சைத்திர சு 6.

அசூன்ய ஸயன விரதம்—ஆஷாடா கி 2, ஸ்ராவண கி 2, பாத்ரம் கி 2, ஆஸ்வின கி 2.

ஆவணி அவிட்டம் (தென் இந்தியா)—ஸ்ராவண சு 15 (103 & 106 பக்கம் பார்க்க).

ஆவணி மூலம் (தென் இந்தியா)—2.

அபிதப நவமி—பாத்ரம் கி 9.

## ப. (B)

பத ஓஷா (ஒரிஸ்ஸா)—கார்த்திகை சு 14.

பாக் பிகு (அஸ்ஸாம்)—சமய பஞ்சாங்கத்தின்படி சூரியன் மேஷம் புகுதல்.

பகுல ஸதுர்த்தி (மத்திய தேசம்) ஸ்ராவண கி 4.

பாலபத்ரபூஜை (ஒரிஸ்ஸா) ஸ்ராவண 15.

பலிதைத்தியராஜ பூஜை—கார்த்திகை சு 1

பைமி ஏகாதசி—மாகம் சு 11.

பரணி தீபம் (தென் இந்தியா) மார்கழியில் பரணி நக்ஷத்திரம்.

பாரத்மிலாப்—ஆஸ்வின சு 11.

பவானி உற்பத்தி—சைத்திர சு 8.

பீஷ்மத்வாதசி—மாகம் சு 12.

பீஷ்ம பஞ்சகம்— கார்த்திகை சு 11.

பீஷ்மாஷ்டமி—மாகம் சு 8.

போகி (தென் இந்தியா) பொங்கலுக்கு முந்தினநாள்.

## ப. (B)—தொடர்ச்சி.

ப்ராத்ரு த்ரிதியை—கார்த்திகை சு 2.

பூத்த ஸதுர்தசி—ஆஸ்வின கி 14.

புத்த த்வாதசி— ஸ்ராவண சு 12.

புத்த பூர்ணிமா—வைசாகம் சு 15,

## ச. (C)

சதகா பூஜை (வங்காளம்)—சமய பஞ்சாங்கத்தின்படி சூரியன் மேஷம் புகும் நாளின் நடுஇரவு முடிவு.

சித்திரா பௌர்ணமி—சைத்திர சு 15.

சம்பக ஸதுர்தசி (வங்காளம்) ஜேஸ்டா சு 14.

சம்பக த்வாதசி (ஒரிஸ்ஸா) ஜேஸ்டா சு 12.

சம்பக ஸஷ்டி—பாத்ரம் சு 6, விசாக நக்ஷத்திரமும் வைத்ருதி யோகமும் செவ்வாய்க்கிழமை கூடியது.

சம்பா ஸஷ்டி (மஹாராஷ்டிரம்) மார்கழி 6, சதய நக்ஷத்திரமும் வைத்ருதியோகமும் ஞாயிற்றுக்கிழமையும் கூடிய விசேஷம்.

சந்தன ஸஷ்டி (வங்காளம்) வைசாகம் சு 6.

சந்தன யாத்ரை—வைசாகம் சு 3.

சந்திர பாகஸப்தமி (ஒரிஸ்ஸா)—மாகம் சு 7.

சந்திர ஸஷ்டி—பாத்ரம் கி 6.

சர்ப்பதர ஸஷ்டி—(வங்காளம்) பாத்ரம் சு 6.

சாதுர் மாஸ்ஹிய ஸதுர்தசி—(ஜெயின்)—ஆஷாடா சு 14, கார்த்திகை சு 14, பால்குன சு 14.

சாதுர் மாஸ்ய விரதம் (பக்கம் 108).

சௌமாசி சௌடஸ்—(ஜெயின்) சாதுர் மாஸ்ய சதுர்தசி.

சைரோபா (மணிபூர்)—சமய பஞ்சாங்கத்தில் சூரியன் மேஷம் புகும் நாள்.

சாத் (பீகார்)—கார்த்திகை சு 6.

சித்தாஹு (சீத்தாலகி) அமாவாசை (ஒரிஸ்ஸா) ஆஷாடா கி 30.

சூடாமணி யோகம்—ஞாயிற்றுக்கிழமை—சூரிய கிரகணமும் திங்கட்கிழமை சந்திர கிரகணமும் நேரும் இடத்தில் நிகழ்வது.

## த. (D)

தமனோற்சவம்—சைத்திர சு 12.

தாமோதர த்வாதசி—ஸ்ராவண சு 12.

தான த்வாதசி (ஒரிஸ்ஸா) மார்கசிரம் சு 12.

தசரா—ஆஸ்வின சு 10 (ஸ்ராவண நக்ஷத்திரம் கூடில் விசேஷம்).

தசரா ஸ்நான ஆரம்பம்—ஜேஷ்டா சு 1 (10 நாட்கள் வரை).

தசரத ஸதுர்தி (வங்காளம்)—ஆஸ்வின கி 4.

தத்தாத் திரியோத் பத்தி—மார்கசிரம் சு 15.

தேவ விவேஹா ஏகாதசி (ஒரிஸ்ஸா) ஜேஷ்டா சு 11.

தன த்ரியோதசி—ஆஸ்வின கி 30.

தர்மராஜா தசமி—சைத்திர சு 10.

தீப தானம்—ஆஸ் வின14.

தீபாவளி (தீவாளி) ஆஸ்வின கி 30.

தீபாவளி அமாவாசை(ஒரிஸ்ஸா) கார்த்திகை கி. 30.

டோல யாத்ரை—பால்குன சு 15.

டோல் கியாரஸ் (மத்திய பாரத்)— பாத்ரம் சு 11.

டோலோற்சவம்—சைத்திர சு 3, சைத்திர சு 11.

துர்கா நவமி—கார்த்திகை சு 9.

துர்கா நவமி (மஹாராஷ்டிரம்) பாத்ரம் கி 9.

துர்காபூஜை (வங்காளம்) ஆஸ்வின சு 7.

துர்கா ஸப்தமி—ஆஸ்வின சு 7.

துர்கா ஸஷ்டி—ஆஸ்வின சு 6.

துர்கா சயனஷ்டமி (ஒரிஸ்ஸா)—பாத்ரம் சு 8.

துர்காஷ்டமி—சு 8 ஒவ்வொரு மாதத்தின் சுக்கிலபக்ஷம் 8 துர்காஷ்டமி.

துர்வாஸ்டமி—பாத்ரம் சு 8, சௌர பாத்ர மாதத்தில் வங்காளத்தை தவிர மற்றெல்லா இடங்களிலும் சூரியத்தில் கொண்டாடப்படும்.

ஜுதப்ரதி பதம்—கார்த்திகை சு 8.

### க. (G)

கன்டேஷ்வரி பூஜை (வங்காளம்)—விசாகம் சு 15.

கணேச ஸதுர்த்தி—பாத்ரம் சு 14, மாகம் சு 4.

கணேச ஜெயந்தி—மாகம் சு 4.

கங்காதசரா—ஜேஷ்டா சு 10 அஷ்ட நக்ஷத்திரமும் யதிர்பாத யோகமும் காசிகரணமும் செவ்வாய்க் கிழமையும் கூடில் விசேஷம்.

கங்கோத்பதி—விசாகம் ச 7.

கௌரி (மைசூர்)—பாத்ரம் சு 3.

கௌரி த்ரிதியை—சைத்திர சு 3.

கௌரி விரதம் (ஒரிஸ்ஸா)—பாத்ரம் சு 3.

கோகுலாஷ்டமி—ஸ்ராவண கி 8.

கோபத்ம விரதாரம்பம்—ஆஷாடா சு 12.

கோபாஷ்டமி—கார்த்திகை சு 8.

கோரூபிணி ஸஷ்டி (வங்காளம்)—பால்குண சு 6.

கோஷ்டாஷ்டமி—கார்த்திகை சு. 8.

கோவர்தன பூஜை—கார்த்திகை சு 1.

கோவட்ச த்வாதசி—ஆஸ்வின கி 12.

கோவிந்த த்வாதசி—பால்குண சு 12 புஷ்ய நக்ஷத்திரம் கூடிய போது.

குக ஸஷ்டி—மார்கசிரம் சு 6.

குரு பஞ்சமி (ஒரிஸ்ஸா)—சு 5 வியாழக்கிழமையில் வரும் சுக்கில பக்ஷம்.

குரு பூர்ணிமா—ஆஷாடா சு 15.

### ஹ. (H)

ஹல ஸஷ்டி—ஸ்ராவண சு 6.

ஹனுமான் ஜன்மதினம்—ஆஸ்வின கி 14.

ஹனுமான் ஜெயந்தி—சைத்திர சு 15.

ஹரி ஸயன ஏகாதசி—ஆஷாடா சு 11.

ஹரி தாலி ஸதுர்த்தி—சு 4 சௌரபாத்ரம்.

ஹரி தாலிகா விரதம்—சு 3.

ஹையக்ரோற்பத்தி—ஸ்ராவண சு 15.

ஹைக்கிரத் தோம்பா (மணிபூர்)—பாத்ரம் சு 11.

ஹேராபஞ்சமி (ஒரிஸ்ஸா)—ஆஷாடா சு 6.

ஹோலி—ஹோலிகா தானத்திற்கு மறுநாள்.

ஹோலிகா தானம்—பால்குண சு 15.

### இ. (I)

இந்திர ஏகாதசி—பாத்ரம் கி 11.

இந்திர கோவிந்த பூஜை (ஒரிஸ்ஸா)—பாத்ரம் சு 15.

### ஜெ. (J).

ஜெகதாத்ரி பீஜை (வங்காளம்)—கார்த்திகை சு 9.

ஜாகரத் கௌரி பஞ்சமி (ஒரிஸ்ஸா)—ஸ்ராவண சு 5.

ஜானு ஸப்தமி—விசாகம் சு 7.

ஜலஹீரிட ஏகாதசி (ஒரிஸ்ஸ)—விசாகம் கி 11.

ஜெயந்தி—(107 பக்கம்).

ஜுலன யாத்ரை—ஸ்ராவண சு 11.

ஜுலன யாத்ரை சமாபணம்—ஸ்ராவண சு 15.

ஜீனுவாத்ன பூஜை—பாத்ரம் கி 8.

ஜீதாஷ்டமி—பாத்ரம் கி 8.

ஞான பஞ்சமி (ஜெயின்)—கார்த்திகை சு 5.

### க. (K)

கஜ்ஜலி த்ரிதியை—ஸ்ராவண கி 3.

கால பைரவ ஜெயந்தி—கார்த்திகை கி 8.

காலாஷ்டமி—கார்த்திகை கி 8.

காளி பூஜை—ஆஸ்வின கி 30.

காளியதலன ஏகாதசி (ஒரிஸ்ஸா)—ஸ்ராவண கி 11.

கல்கி த்வாதசி—பாத்ரம் சு 12.

கஸபாதி—(107 பக்கம்).

காமதா ஏகாதசி—சைத்திர சு 11.



### க. (K)—தொடர்ச்சி.

கமலா ஏகாதசி—கி 11 மலமாதம் கிருஷ்ண பக்ஷம் ஏகாதசி.

காமிகா ஏகாதசி—ஆஷாடா கி 11.

கான்ஜி அன்லா நவமி (ஒரிஸ்ஸா)—கார்த்திகை கி 9.

கபிலா ஸஷ்டி—பாத்ரம் கி 6, ரோஹினி நக்ஷத்திரம் யதிர் பாத யோகம் அஸ்தத்தில் சூரியன் செவ்வாய்க்கிழமை கூடியது.

கரக ஸதுர்த்தி—ஆஸ்வின கி 4.

காராஷ்டமி (மஹாராஷ்டிரம்)—ஆஸ்வின கி 8.

கர்தமஸஷ்டி (வங்காளம்)—ஆஷாடா சு 6.

கர்கடக வாவு (திருவாங்கூர்-கொச்சி)—கி 30 சௌரஸங்ராவண அமாவாசை.

கார்த்திகை பூஜை (வங்காளம்.)—சமய பஞ்சாங்கத்தின்படி சூரியன் விருஷ்டிகம் புகும் நாள்.

கார்த்திகை பௌர்ணமி—கார்த்திகை சு 15.

காவேரி சங்கரமணம் (குடகு)—சமய பஞ்சாங்கத்தின்படி சூரியன் துலம் புகும் நாள்.

கேதார விரதம் (ஒரிஸ்ஸா)—கார்த்திகை சு 15.

கெர் பூஜை (திரிபுரா)—கராச்சி பூஜைக்கு 14 நாட்களுக்கு பின் முதல் செவ்வாயக் கிழமை அல்லது சனிக்கிழமை.

கேதாரா கௌரி விரதம் (தென் இந்தியா)—ஆஸ்வின கி 30.

கார்ச்சி பூஜை (திரிபுரா)—ஆஷாடா சு 8.

கோஜாகரி லக்ஷ்மி பூஜை—ஆஸ்வின சு 15.

கோகிலா விரதம்—ஆஷாடா சு 15.

கிருத்திகை தீபம் (தென் இந்தியா)—சௌரமார்கழியில் வரும் கிருத்திகா நக்ஷத்திரம்.

குமாரா பூர்ணிமா (ஒரிஸ்ஸா)—ஆஸ்வின சு 15.

குமாரா ஸஷ்டி—ஆஷாடா சு 6.

கும்பயோகம்—(பக்கம் 108).

குண்ட ஸதுர்த்தி—மாகம் சு 4.

கூர்ம த்வாதசி—பௌசா சு 12.

குச கிரகண—ஸ்ராவண கி 30.

### ல. (L)

லக்ஷ்மி நாராயண ஏகாதசி (ஒரிஸ்ஸா)—சு 11செவ்வாய்க் கிழமை வரும் சுக்குலபக்ஷ ஏகாதசி.

லக்ஷ்மி பஞ்சமி (ஸ்ரீ பஞ்சமி)—சித்திரை சு 5.

லலிதா ஸப்தமி (வங்காளம், ஒரிஸ்ஸா)—பாத்ரம் சு 7.

லோலார்க ஸஷ்டி—பத்ரம் சு 6

லுன்தன ஸஸ்டி (வங்காளம்)—ஸரவண சு 6.

### ம. (M)

மதன பஞ்ஜி (வங்காளம், ஒரிஸ்ஸா)—சைத்திர சு 14.

மதன தவதசி—சித்திரை சு 12.

மதன பஞ்சமி—மகம் சு 5.

மது கிருஷ்ண த்ரியோதசி—பல்குண கி 13.

மதுஸ்ர்வா (குஜராத்)—ஸ்ராவண சு 3.

மகா த்ரியோதசி—பாத்ரம் கி 13

மாக் பிகு (அஸ்ஸாம்).

மாஹி பூர்ணிமா—மகம் சு 15.

மஹாதேவ விவேஹாகம் (ஒரிஸ்ஸா)—ஜேஷ்டா சு 5.

மஹா லக்ஷ்மி பூஜை—ஆஸ்வின கி 30.

மஹா லக்ஷ்மி விரதம்—பாத்ரம் சு 8. முதல் பாத்ரம் கி 8 வரை.

மஹாலய அமாவாசை—பாத்ரம் கி 30.

மஹாலய ஆரம்பம்—பாத்ரம் கி 1.

மஹாமாஹி—மாகம் சு 15 சனி மேஷத்திலும் குருவும் சந்திரனும் மகத்திலும் சூரியன் ஸ்ராவணத்திலும் வரும் நாள்.

மஹாநந்த நவமி—மாகம் சு 9.

மஹா நவமி—ஆஸ்வின சு 9.

மஹாசிவராத்ரி—மாகம் கி 14.

மஹாஷ்டமி—ஆஸ்வின சு 8.

மஹாவீர ஜெயந்தி (ஜெயின்)—சித்திரை சு 13.

மஹாவீர நிர்வாணம் (ஜெயிண்)—ஆஸ்வின கி 30.

மகரவாவு (திருவாங்கூர்)—கி 30 சௌரமாகம்.

மகராதி ஸ்நானம்—சமய பஞ்சாங்கப்படி சூரியன் மகரம் புகும் நாள் 4.

ம (M)—தொடர்ச்சி.

மாம்நாஷ்டகம்—பௌசா கி 8

மானசதுர்த்தி (வங்காளம் ; ஒரிஸ்ஸா)—அஸ்வினு சு 4.

மனுசாபூஜை (வங்காளம்)—சௌரஸ்ராவணு (பக்கம் 106).

மனோரதத்ரிதியை—ஆஷாடா சு 8.

மன்தான ஸ்ஷ்டி (வங்காளம்)—பாதரம் சு 6.

மன்வாதி (பக்கம் 107).

மாசிமகம் (தென் இந்தியா) சௌர பங்குனியில் மகநக்ஷத்திரத் திலோ அல்லது பௌர்ணமியிலேயோ கொண்டாடப்படும்.

மஸ்யதார பூஜை (பீகார்) கார்த்திகை 2.

மாத்ரு நவமி—பாத்ரம் கி 9.

மத்ஷியத்வாதசி—மார்கசிரம் சு 12.

மாட்டு பொங்கல் (தென் இந்தியா) பொங்கலுக்கு மறுநாள்.

மௌன ஏகாதசி (ஜெயின்)—மார்கசிரம் சு 11.

மௌனி அமாவாசை (உத்திர பிரதேசம்) பௌச கி 30.

மேருத்ரியோதசி (ஜெயின்) பௌச கி 13.

மித்ரா ஸப்தமி—மார்கசிரம் சு 7.

மோஹினி ஏகாதசி—விசாகம் சு 11.

மோததா ஏகாதசி—மார்கசிரம் சு 11.

முக்தாபரண விரதம்—பாத்ரம் சு 7.

மூலகருபிணி ஸஷ்டி—மார்கசிரம் சு 6.

மூலாஷ்டமி (ஒரிஸ்ஸா)—பாத்ரம் கி 8.

ந (N)

நாடி ஸஷ்டி (வங்காளம்)—கார்த்திகை சு 6.

நாக ஸதுர்த்தி—கார்த்திகை சு 4.

நாகபஞ்சமி (1 முதல்)—ஸ்ராவணு சு 5.

நாக பஞ்சமி (2 முதல்)—மார்கசிரம் சு 5.

நாகபஞ்சமி (வங்காளம்)—ஆஷாடா கி 5.

நந்தா நவமி—பாத்ரம் சு 9.

நரக ஸதுர்தசி—ஆஸ்வினு கி 14.

நாராயணத்வாதசி—கார்த்திகை சு 12.

நாரோலி பூர்ணிமாபு ஸ்ராவணு சு 15.

நட பஞ்சமி (ஒரிஸ்ஸா) ஆஸ்வினு சு 5.

நவராத்திரி ஆரம்பம்—சித்திரை சு 1, ஆஸ்வினு சு 1.

நிர்ஜலா ஏகாதசி ஜேஷ்டா சு 11.

நரசிம்ம ஸதுர்தசி—விசாகம் சு 14—(ஸ்வாதி நக்ஷத்திரமும் சித்தயோகமும் சனிக்கிழமையில் கூடில் விசேஷம்).

நரசிம்ம த்வாதசி—பால்குன சு 12.

ஓ (O)

ஓலி ஆரம்பம் (ஜெயின்)—சித்திரை 7, ஆஸ்வினு சு 7 (பௌணர்மிக்கு முன் 8 நாட்களுக்கு.

ஓலிமுடிவு (ஜெயின்) சைத்திர சு 15, ஆஸ்வினு சு 15.

ஓணம் நாள்(தென் இந்தியா) ஸ்ராவணு பாத்ரபத மாதத்தில் திருவோணம் நக்ஷத்திரம் கூடிய நாள்.

ப (P)

பத்மநாமத்வாதசி—ஆஸ்வினு சு 12.

பத்மினி ஏகாதசி—சு 11—மல மாதத்தின் சுக்கில பக்ஷ ஏகாதசி பக்ஷவர்தினி மஹாத்வாதசி—பௌர்ணமி அல்லது அமா வாசை தொடர்ந்து இரு நாட்கள் உதயத்தில் ஏற்படுமாகில் அதற்கு முந்திய த்வாதசி இவ்வண்ணம்அழைக்கப்படும்.

பஞ்சராத்ர ஸ்ரீக்ருஷ்ண ஜெயந்தி—சௌரபாத்ர பதத்தில் ரோஹிணி நக்ஷத்திரம்.

பங்குனி உத்திரம் (தென் இந்தியா). சௌர சித்திரையில் உத்திர நக்ஷரத்திலோ அல்லது பௌர்ணமியிலோ கொண்டாடப்படும் (பக்கம் 106).

பாபமோக்ஷினி ஏகாதசி—பால்குன கி 11.

பரசுராமத்வாதசி—விசாகம் சு 12.

பரசுராம ஜெயந்தி—விசாகம் சு 3.

பரசுராமாஷ்டமி (ஒரிஸ்ஸா)—ஆஷாடா சு 8.

பராஸ்வ அல்லது பரிவர்தினி ஏகாதசி—பாத்ரம் சு 11

பரியுசான பர்வ ஆரம்பம் (ஜெயின்—பஞ்சமி பக்ஷம்)—ஸ்ராவணு கி 12.

பஷான ஸதுர்தசி (வங்காளம் and ஒரிஸ்ஸா) சு 14, சௌர ஷமார்கசிரம்.

பாசாங்குஷ (பாபாங்குச) ஏகாதசி—ஆஸ்வினு சு 11.

ப (P)—தொடர்ச்சி.

பௌச தசமி (ஜெயின்) மார்கசிரம் கி 10.

பஹூதசமி (ஒரிஸ்ஸா)—பால்குனு சு 10.

பலகாரினி காளிகா பூஜை (வங்காளம்) விசாகம் கி 30.

புலதோலா—(வங்காளம் ; ஒரிஸ்ஸா) விசாகம் சு 15.

பிபிதகி த்வாதசி (வங்காளம்)—விசாகம் சு 12.

பிதோரி அமாவாசை—ஸ்ராவணு கி 30.

பொங்கல் (தென் இந்தியா)—சமய பஞ்சாங்த்தின்படி சூரியன் மகரம் புகுதல்.

ப்ரபோதனி ஏகாதசி—கார்த்திகை சு 11.

ப்ரபோதோனுற்சவம்—கார்த்திகை சு 12.

பிரதமாஷ்டமி (ஒரிஸ்ஸா)—கார்த்திகை கி 8.

ப்ரவர்ன ஸஷ்டி (ஒரிஸ்ஸா)—மார்கசிரம் சு 6.

புனர்யாத்ரை—ஆஷாடா சு 10, (ப்ரதயாத்ரைக்கு 9-ம் நாள்).

பூபாஷ்டகம்—மார்கசிரம் கி 8.

புஷ்கர் விழா (ஆஜ்மீர்)—கார்த்திகை சு 15.

புஷ்யாபிஷேகயாத்ரை—பௌ—சு 15 (பூசநக்ஷத்திரத்தோடு கூடில் விசேஷம்).

புத்ராட ஏகாதசி—ஸ்ராவணு சு 11, பௌச சு 11.

ர (R)

ராதாஷ்டமி—பாத்ரம் சு 8.

ராகி பூர்ணிமா—ஸ்ராவணு சு 15.

ரக்ஷாபந்தனம்—ஸ்ராவணு சு 15.

ரக்ஷாபஞ்சமி—(வங்காளம்)—பாத்ரம் சு 5.

ரக்ஷாபஞ்சமி—(ஒரிஸ்ஸா)—ஸ்ராவணு கி 5.

ரமா ஏகாதசி—ஆஸ்வினு கி 11.

ராம ஜெயந்தி—சைத்திர சு 9.

ராமநவமி—சைத்திர சு 9 (புனர்வசு நக்ஷத்திரம் கூடில் விசேஷம்).

ரம்பாத்திரியை—ஜேஷ்டா சு 3.

ரங்க பஞ்சமி—பால்குனு கி 5.

ராஸயாத்ரை—கார்த்திகை சு 15.

ரத்தந்தி காளிகா பூஜை (வங்காளம்) பௌச கி 14.

ரதஸப்தமி—மாகம் சு 7.

ரத யாத்ரை—ஆஷாடா சு 2, (புஷ்ய நக்ஷத்திரம் கூடில் விசேஷம்).

ரத யாத்திரை, (ஜெயின்) கார்த்திகை சு 15.

ரவீநாராயண ஏகாதசி (ஒரிஸ்ஸா)—11 ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பமாகும் மாதத்தின் சுக்கிலபக்ஷ ஏகாதசி.

ரிக் உபகர்மம்—ஸ்ராவண மாதத்தில் ஸ்ராவண நக்ஷத்திரம்

ரிஷி பஞ்சமி—பாத்ரம் சு 15.

ரிஷ தர்பணம்—ஸ்ராவண சு 15.

ருத்ர விரதம்—பாத்ரம் சு 1.

ருத்ரு உபவாசம்—மார்கசிரம் சு 1.

ருக்மணி த்வாதசி—விசாகம் சு 12.

ச (S)

சகாஷ்டகம்—மாகம்—மாகம் கி 8.

சக்ரோதனு—பாத்ரம் சு 12.

சாம்ப தசமி (ஒரிஸ்ஸா)—பௌச சு 10.

சம்பத் கௌரி விரதம்—விசாகம் சு 15.

சம்பத்சரி பர்வம் (ஜெயின்—ஸதுர்த்தி பக்ஷம்)—பாத்ரம் சு 4.

சம்வத்சரி பர்வம் (ஜெயின்—பஞ்சமி பக்ஷம்) பாத்ரம் சு 5.

சங்கரா ஜெயந்தி—விசாகம் சு 5.

சந்தா ஸதுர்த்தி—பால்குனு சு 4.

சந்தானத் வாதசி—மாகம் சு 12.

சப்பலா ஏகாதசி—மார்கசிரம் கி 11.

சப்தபுரி அமாவாசை (ஒரிஸ்ஸா)—ஸ்ராவணு கி 30.

ஸரஸ்வதி பலிதானம் (சாந்திரமான ஆஸ்வின மாதம் சுக்கில பக்ஷ உத்திராட நக்ஷத்திரம்).

ஸரஸ்வதி பூஜை—சாந்திரமான ஆஸ்வின சுக்கில பக்ஷ பூராட நக்ஷத்திரம் கூடிய நாள்.

ஸரஸ்வதி பூஜை (வங்காளம் ஒரிஸ்ஸா) மாகம் சு. 5.

ஸரஸ்வதி ஸ்தாபனம்—சாந்திரமான ஆஸ்வின சுக்கில பக்ஷ மூலா நக்ஷத்திரம் கூடிய நாள்.

ஸரஸ்வதி விஷர்ஜனம்—(சாந்திரமான ஆஸ்வின சுக்கில பக்ஷ ஸ்ராவண நக்ஷத்தில் கூடிய நாள்).

### ச. (S)—தொடர்ச்சி.

சர்குஹூல் (பீகார்)—சித்திரை சு 3.
சர்க்கரா ஸப்தமி—விசாகம் சு 7.
சஸ்திரகத ஸதுர்தசி—ஆஸ்விஞ கி 14.
சத்திலா ஏகாதசி—பௌச கி 11.
சௌபாக்ய ஸதுர்த்தி (வங்காளம்) பாத்ரம் சு 4.
சௌபாக்ய ஸயன விரதம்— சித்திரை சு 3.
சாவித்திரி அமாவாசை (ஒரிஸ்ஸா) விசாகம் கி 30.
சாவித்திரி ஸ்துர்தசி (வங்காளம்) விசாகம் கி 14.
சயன ஏகாதசி—ஆஷாடா சு 11.
சீத்தலா ஸப்தமி—ஸ்ராவணு.
சீத்தலா ஸப்தமி (ஒரிஸ்ஸா) ஆஷாடா கி 7.
சீத்தலா ஸஷ்டி (வங்காளம்) மாகம் சு 6.
சீத்தலா ஸஷ்டி யாத்ரை (ஒரிஸ்ஸா) ஜேஷ்டா சு 6.
சீத்தலாஷ்டமி—பால்குனு கி 8.
சீதா நவமி (வங்காளம் & ஒரிஸ்ஸா)—விசாகம் சு 9.
சீதாஷ்டமி—மாகம் கி 8.
சிவ தமனக ஸதுர்தசி (ஒரிஸ்ஸா) சைத்மிர சு 14.
சிவ பவித்ரா ரோபணம் (ஒரிஸ்ஸா) ஸ்ராவணு சு 14.
சிவராத்ரி—கி 14—ஒவ்வொருமாதத்தின் கிருஷ்ணபக்ஷ ஸ்துர்தசியும் விசேஷமாக மாக மாசத்து ஸதுர்தசியும் கி 14வும் (108-ம் பக்கம் பார்க்க).
சிவசயன ஸதுர்தசி (ஒரிஸ்ஸா) ஆஷாடா சு 14.
சிவசயனுேற்சவம்—ஆஷாடா சு 15.
கந்த பஞ்சமி—ஆஷாடா சு 5.
கந்த ஸஷ்டி (ஒரிஸ்ஸா)—சைத்திர சு 6.
கந்த ஸஷ்டி—ஜேஷ்டா சு 6, மார்கசிரம் சு 6.
கந்த ஸ்ஷ்டி (சென்னை)—கார்த்திகை சு 6.
கந்த ஸஷ்டி (வங்காளம்)—பால்குனு கி 6.
ஸ்நான யாத்ரை (வங்காளம் & ஒரிஸ்ஸா) ஜேஸ்டா சு 15.
சோமநாத விரதம் (ஒரிஸ்ஸா)—பாத்ரம் சு 6.
சோமநாத விரதம் சமாபணம் (ஒரிஸ்ஸா) ஆஸ்விஞ சு 10.
ஸ்ராவணு ஸ்வாதசி—பாத்ரம் சு 12,—(ஸ்ராவண நக்ஷத்திரம் கூடிய பாத்ர சுக்கிலபக்ஷத்வாதசி).
ஸ்ரீஜெயந்தி (தென் இந்தியா) கி 8, சௌரபாத்ரபதம் (பக்கம் 106).
ஸ்ரீகிருஷ்ண த்வாதசி— ஆஷாடா 12.
ஸ்ரீபஞ்சமி—மாகம் சு 5, சைத்ர 5 (லக்ஷ்மி).
ஸ்ரீராம த்வாதசி—ஜேஷ்டா சு 12.
சுதாஸ விரதம் (ஒரிஸ்ஸா)—வியாழக்கிழமையில் துவங்கும் சுக்கிலபக்ஷ தசமி.
சூரிய பூஜை (ஒரிஸ்ஸா) பௌச சு 10.
சூரிய ஸஷ்டி—பாத்ரம் சு 6, கார்த்திகை சு 6.

### தி. (T)

தால நவமி (வங்காளம் & ஒரிஸ்ஸா) பாத்ரம் சு 9.
தபாஸஷ்டி (ஒரிஸ்ஸா) ஆஸ்விஞ சு 6.
தை அமாவாசை (தென் இந்தியா) கி 30. சௌரமாகம் அமாவாசை (பக்கம் 106).
தை பூசம்—சௌரமாக பூச நாள் (பக்கம் 106).
திலஸதுர்த்தி—மாகம் சு 4.
திலசங்கராந்தி—சமய பஞ்சாங்கத்தின்படி சூரியன் மகரம் புகுதல்.
திரிலோசனுஷ்டமி—(வங்காளம்) விசாகம் கி 8.
திரிபோற்சவம்—கார்த்திகை சு 15.
த்ரிஸ்பிரிஸ மாஹாத்வாதசி—ஒரு பகலிரவுக்குள் ஏகாதசி, த்வாதசி, த்ரியோதசி எனமூன்று த்ரிதிகள் கூடியவரில் அது இப்பெயர் பெரும் (பக்கம் 107).
திருவேணி அமாவாசை (ஒரிஸ்ஸா)—பௌச கி 30.
துளசி விவாஹகம்—கார்த்திகை சு 11.

### உ. (U)

உமா ஸதுர்த்தி (வங்காளம் & ஒரிஸ்ஸா) ஜேஷ்டா சு 4.
உன்மிலனி மஹாத்வாசி—தொடர்ந்து இரு சூரியயோதங்களில் ஏகாதசி திதி வரின் இரண்டாவது நாள் இப்பெயர் பெரும்.

### உ. (U)—தொடர்ச்சி.

உபாகர்மம் (தென் இந்தியா) ஸ்ராவணு சு 15. (பக்கம் 103-ம் 106 பார்க்க).
உபாங்க லலிதா விரதம் (மஹராஷ்டிரம்) ஆஸ்விஞ சு 5.
உட்பன்ஞு (உட்பத்தி) ஏகாதசி— கார்த்திகை கி 11.
உத்தான ஏகாதசி—கார்த்திகை சு 11.

### வி. (V)

வைகானச தீபம் (தென் இந்தியா)—சு 15 சௌர மார்கசிரம் சுக்கில பக்ஷ பௌர்ணமி.
வைகுண்ட ஸதுர்தசி—கார்த்திகை சு 14.
வைகுண்ட ஏகாதசி (வைஷ்ணவ) சென்னை—சு 11. சௌர பௌச.
வைசாகி—சமயப்பஞ்சாங்கத்தில் சூரியன் மேஷம் புகும் நாள்.
வைசாகி பூர்ணிமா—விசாகம் சு 15.
வகுல அமாவாசை (ஒரிஸ்ஸா)—மார்கசிரம் கி 30.
வாமன த்வாதசி—சித்திரை சு 12.
வாமன ஜெயந்தி—பாத்ரம் சு 12.
வஞ்ஜுலி மஹாத்வாதசி—இரு சூரியோதயங்களில் தொடர்ந்து த்வாதசி வரியில் முதல் நாள் இப்பெயர் பெரும்.
வரத ஸ்துர்த்தி—பாத்ரம் சு 4.
வரதா ஸதுர்த்தி—(வங்காளம் & ஒரிஸ்ஸா)—மாகம் சு 4.
வராகத்வாதசி—மாகம் சு 12.
வரலக்ஷ்மி விரதம் (தென் இந்தியா) சாந்திரமான ஸ்ராவணு சுக்கிலபக்ஷ வெள்ளிக்கிழமை.
வருஷிதபா ஆரம்பம் (ஜெயின்)—பால்குனு கி 8.
வருஷிதப சமாபணம் (ஜெயின்)—விசாகம் சு 3.
வாருணி— பால்குனு கி 13,—சதயம் கூடியது (பக்கம் 105)
வருதினி ஏகாதசி—சைத்திர கி 11.
வசந்தா பஞ்சமி—மாகம் சு 5.
வாசந்தி பூஜை (வங்காளம்) சைத்திர சு 7.
வசந்தோற்சவம்—பால்குனு கி 1.
வட சாவித்ரி விரதம்—விசாகம் கி 30.
வட சாவித்ரி விரதம் (தக்காணம்)—ஜேஸ்டா சு 15.
விதான ஸப்தமி—மாகம் சு 7.
விஜய தசமி—ஆஸ்விஞ சு 10.
விஜய ஏகாதசி—மாகம் கி 11.
விஷ்ஷு (திருவாங்கூர்)—சமய பஞ்சாங்கத்தில் சூரியன் மேஷம் புகுதல்.
விஷ்ணு தமனக ஸதுர்தசி—சித்திரை சு 14.
விஷ்ணு பரிவர்த்தனுேற்சவம்—பாத்ரம் சு 12.
விஷ்ணு பவித்ரா ரோபணம்—ஸ்ராவணு சு 12.
விஷ்ணு சயனுேற்சவம்—ஆஷாடா சு 12.
விஷ்ணு த்ரியாத்திரி—கார்த்திகை சு 9.
விஷ்ணு ஸ்ரிங்கலயோகம்—பாத்ரம் 11 (பாத்ர சுக்குலபக்ஷ ஏகாதசியும் த்வாதசியும் கூடிய நாள்).
விஸ்வகர்மா பூஜை (வங்காளம்) சமய பஞ்சாங்கத்தின்படி சூரியன் கன்யம் புகும் நாள்.
விவஸ்வாத் ஸ்ப்தமி—ஆஷாடா சு 7.
ப்ருந்தாவன த்வாதசி—கார்த்திகை சு 12.
வஞ்ஜன த்வாதசி—(ஒரிஸ்ஸா) மார்கசிரம் சு 12.
வியாச பூஜை—ஆஷாடா சு 15.

### ய. (Y)

யஜுர் உபாகர்மம்— (பக்கம் 103).
யம தீபதானம்—ஆஸ்விஞ கி 13.
யம த்ரிதியை—கார்த்திகை சு 2.
யம தர்பனம்—பௌச கி 14.
யோஹினி ஏகாதசி—ஜேஷ்டா கி 11.
யுகாதி—(பக்கம் 107 பார்க்க).

சென்னை அரசாங்கத்திற்காக சென்னை எழுதுபொருள் அச்சுத்தொழில் கட்டுப்பாட்டு அதிகாரியால் பதிப்பிக்கப்பெற்றது